
மலர் : 15

# சத்தியத்தின் குரல்



# THE VOICE OF TRUTH

INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 15

# சத்தியத்தின் குரல்

## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
**Byron Nichols**
**Jerry Bates**
**Louis Rushmore**
**P.R.Swamy**
**P.C.Philemonrajah**
**B.Arjunan**

Managing Editor
**S.Rajanayagam**

Staff Writers
**Kingsly rajah**
**J.H. Rajkumar**
**V. Daniel Durairajan**
**K. Bhasker**
**K. Pandian**
**Dr. Abel R. Nayagam**

Publishing Consultant
**Betty Choate**



Copies-can-be-had-from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.

தேவையான-பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-ஏ, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.






# போதிக்கப்படாதவர்கள் இரட்சிப்படைந்திருப்பார்களா?

## ARE THE UNTAUGHT SAVED?

*J.C. Choate*

எல்லா மனுக்குலத்துக்கும் சுவிசேஷம் எடுத்துச் சொல்லப்பட வேண்டுமென்று இயேசு சொல்லியிருப்பதை, சபையில் இருப்பவர்களில் மிகக் குறைவானவர்களே செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இங்கே, கேள்வி ஏன் அப்படி? என்பது. பலர், குறிப்பாக கல்லூரிக்குப் போகும் வயதை அடைந்த வாலிபர்கள், சுவிசேஷத்தை ஒருபோதும் கேள்விப்படாதவர்கள் தேவனுடைய கற்பனைகளை அறியாதபடியால், நியாயத்தீர்ப்பு நாளில் இரட்சிக்கப்படுவார்கள் என்று நம்புவதாக ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்சொல்லப்பட்ட கருத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், ஜனங்கள் தாங்கள் இழந்து போயிருக்கிறோமென்பதை அறியாத நிலையில் நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லக்கூடாது. ஏனென்றால், நாம் அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்து, அவர்கள் அந்த இரட்சிப்பின் செய்தியைத் தள்ளும் போது, அவர்களுக்கு போக்குச் சொல்ல இடமில்லாமல், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவர்களாக நியாயத்தீர்ப்பின் நாளில் காணப்படுவார்கள் என்பது தர்க்கரீதியான முடிவாயிருக்கிறது.

பொதுவாகவே, சுவிசேஷத்தை ஒருபோதும் கேள்விப்படாதவர்கள் ஆவிக்குரிய ரீதியாகப் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று அநேகர் நம்புகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு எடுத்துச் செல்வதில் முனைப்புக் காட்டமாட்டார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறியாதவர்கள் அப்படி அறியாமலிருப்பதால் நித்திய காலத்திற்கும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது உண்மையானால், சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிப்பதன் மூலம் நாம் அவர்களுக்குப் பெருந்தீங்கிழைக்கிறோம் என்பது ஒரு வகையில் சரிதான்.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்து ஒருவேளை தர்க்க ரீதியாக நியாயமானதுபோல் தோன்றலாம். ஆனால், அது வேதத்திற்குப் புறம்பானது. உண்மையென்னவென்றால், ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டதினால் அல்லது கேள்விப்படாததினால் தான் இழந்து போகவில்லை, மாறாக, அவர்கள் பாவத்தில் இருப்பதினாலும், பாவிகளாக இருப்பதினாலும் இழந்து போயிருக்கிறார்கள். அவர்கள் பாவிகளாயிருக்கிறபடியால், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படாத நிலையில் மரித்தால், அவர்கள் நித்திய காலத்திற்கும் இழந்து போகிறார்கள்.

அப்படியானால், அவர்கள் எப்படி இரட்சிக்கப்பட முடியும்? இயேசு கிறிஸ்துவால் அவர்களை இரட்சிக்க முடியும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆனால், அவருடைய சித்தத்தை கேள்விப்பட்ட பிறகு, இரட்சிக்கப்படும்படி அவர்கள் கிறிஸ்துவின்

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (மாற்கு 16:15, 16). தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார் (2 தெச. 1:7,9). இங்கே, தேவனை அறியாதவர்களையும், அவருடைய சித்தத்தைக் குறித்து அறிவிருந்தும் அதற்கு கீழ்ப்படியாதவர்களையும் தண்டிப்பதற்காகக் கர்த்தர் திரும்பவும் வருவார் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். அதேபோல் பேதுரு சொல்வதையும் கேளுங்கள். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னவாயிருக்கும்; நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால்; பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (1 பேதுரு 4:17,18) பதில் இவ்வசனத்தில் வெளிப்படையாகவே இருக்கிறது.

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாதபோது, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் பாவிகளானார்கள். ஆதாம், ஏவாளுடைய பாவத்தைச் சுமந்து கொண்டு ஒருவரும் பிறக்கவில்லையென்றாலும், நன்மை, தீமை அறியும் வயதை அடையும்போது ஒவ்வொருவனும் பாவியாகிறான். கணக்கொப்புவிக்க வேண்டிய வயதை எட்டிய எல்லோரும் பாவிகளென்றும், பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் பவுல் சொல்கிறார் (ரோமர் 3:23; ரோமர் 6:23) இது உண்மையாக இருக்கிறபடியால், ஒரு பாவி தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால் இரட்சிக்கப்பட முடியும் (மாற்கு 16:16). மேலும், அந்த நபர் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் தொடர்ந்து நடந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவருடைய எல்லா பாவங்களிலிருந்தும் சுத்திகரித்து காத்துக் கொள்ளும். அதன் மூலம் அவன் பரலோகில் இரட்சிக்கப்படுவான் (1 யோவான் 1:7).

ஆனால், ஒரு பாவி தேவனுடைய சித்தத்தை எப்படி அறிந்து கொள்ள முடியும். அவர் போதிக்கப்பட வேண்டும். ஆகவே தான், நம் ஆண்டவர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும், தொடர்ந்து அவரைப் பின்பற்றும் எல்லோருக்கும் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் கட்டளையை கொடுத்திருக்கிறார் (மாற்கு 16:15). மத்தேயு, நாம் புறப்பட்டுப் போய் சகல தேசத்தாருக்கும் உபதேசம் பண்ண வேண்டும் என்று சொன்னார். ஆனால், மனிதன் ஏற்கனவே, இரட்சிக்கப்பட்ட நிலையில் இருந்தால் இன்னும் தேவன் அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்? இரட்சிக்கப்பட்ட நிலையிலிருந்தால் ஏன் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்?

தேவ சித்தத்தை அறியாமலிருக்கிற காரணத்திற்காகவே அவர்களை கர்த்தர் இரட்சிக்கிறார் என்பதையும், அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கட்டளைக்குக் கீழ்ப்படியாததற்காக நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார் என்பதையும் ஒரு வேளை நாம் அவர்களுக்கு எடுத்துச் சென்றால், அதற்குக் கீழ்ப்படியாததால் அது அவர்களை ஆவிக்குரிய ரீதியாக இழந்துபோகச் செய்கிறது என்பதையும் உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? தலையே சுற்றுகிறது. ஏனெனில், இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இல்லை.

இரட்சிக்கப்படும்படியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தியானது, உண்மையில், ஆக்கினைக்கு வழி



வகுக்கும் ஒன்றாக மாறிவிடும். ஆனால், உண்மை என்னவென்றால் சுவிசேஷத்தை அறியாதவர்கள் தங்கள் பாவங்களினால் ஏற்கனவே இழந்து போயிருக்கிறபடியால், அவர்களுக்கிருக்கும் ஒரே நம்பிக்கை சுவிசேஷத்தை நாம் அவர்களிடத்தில் எடுத்துச் செல்வதுதான்.

தேவ சித்தத்தை அறியாமலிருப்பதாலேயே ஒருவன் இரட்சிப்படைய முடியுமானால் நம் ஆண்டவர் இரட்சிப்பிற்காகவும், நித்திய ஜீவனின் நம்பிக்கையைத் தருவதற்காகவும் ஏன் சிலுவையில் மரிக்க வேண்டும்? இதன் மூலம் அறியாமை, கிறிஸ்துவின் இரத்தத்தை விட அதிக வல்லமையுள்ள ஒன்றாக மாறிவிடுமே!

உண்மையாதெனில், யாருமே பாவத்தில் இரட்சிக்கப்பட முடியாது. அதுபோல் அறியாமையிலும் யாரும் இரட்சிக்கப்பட முடியாது. மேலும், தேவனை அறியாதவர்களிடத்தில் நாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லத் தவறினால், தங்கள் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்படுவது என்கிற அறியாமையினால் அவர்கள் இழந்து போவதுமல்லாமல், நாமும் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறியதற்காக இழந்துபோவோம். ஆனால், நாம் சுவிசேஷத்தை அவர்களிடத்திற்கு எடுத்துச் சென்று அதற்குக் கீழ்ப்படிய அவர்கள் தவறினாலோ, மறுத்தாலோ அவர்கள் இழந்துபோவார்கள். நாமோ இரட்சிக்கப்படுவோம். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிந்து விட்டோம்.

ஒட்டுமொத்த உலகமானது நாம் அறிந்திருப்பதை விட தேவகாரியத்தில் அதிக அறிவுள்ளதாக இருக்கிறதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உதாரணமாக, வேதாகமமானது உலகின் பெரும்பாலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அதன் பிரதிகள் உலக முழுவதிற்கும் அனுப்பப்பட்டது. அதன் பின்பு கத்தோலிக்க மற்றும் ப்ராடஸ்டெண்ட் சபைகள் தங்கள் ஊழியக்காரர்களை உலக முழுவதும் அனுப்பி மக்கள் குறைந்தபட்சம் தேவனையும், இரட்சகரையும் அறியும்படி செய்தார்கள். அதுபோல், வேதாகமம் அவர்களுக்கான செய்தியை உள்ளடக்கியது என்று மக்களை அறியச் செய்தார்கள். நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சபையாரால் ஊழிய ஸ்தலத்தில் இருந்து எடுத்த முயற்சியினாலும், தொலைதூரப் பணியினாலும் பல்வேறுபட்ட ஊழியங்கள் செய்யப்பட்டன. கிறிஸ்துவின் சபை பெரும்பாலான நாடுகளிலும், உலகின் சிறிய மற்றும் பெரிய நகரங்களிலும் இருக்கிறது.

இன்னும் கூடுதலாக இலக்கியப் பணி, ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் எண்ணற்ற முறையில் கிறிஸ்துவின் போதனை அறிவிக்கப்படுகிறது. வேதாகமத்தின் செய்தி பகுதியாகவோ, தவறுதலாகவோ அல்லது அதன் முழுத் தன்மையிலோ உலகின் பெரும்பாலான மக்கள் தொகைக்கு சென்றுவிட்டது. எனவே, உலகமானது மனிதன் இழந்துபோன நிலையில் இருக்கிறான், அவனுக்கு இரட்சகர் தேவை என்கிற உண்மையால் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். சத்தியம் யாரிடம் கொண்டு சொல்லப்படுகிறதோ அவர் சத்தியத்தை அறியும் அறிவை நாட வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறார். தேவனுக்கு அவர் கணக்கொப்புவிக்க வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளில் தான் அது வெளிப்படுத்தப்படும்.

நிச்சயமாகவே, தேவனுடைய வார்த்தையாகிய இரட்சிப்பின் சுவிசேஷத்தை எல்லோருக்கும் அறிவிக்கும் பணியை நாம் நிறைவு செய்தாக வேண்டும். அது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. ஒருவனுடைய அறியாமை அல்ல. மாறாக, கிறிஸ்துவின் இர்த்தம் மாத்திரமே பாவத்திலிருந்து ஓர் ஆத்துமாவை இரட்சிக்க முடியும்.

# கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

E.Z.S. RAJANAYAGAM

**சு**மார் 350 ஆண்டுகளை உள்ளடக்கியுள்ள நியாயாதிபதிகளின் காலத்தை இஸ்ரவேல் சரித்திரத்தின் இருண்ட காலம் என்று நாம் சொன்னால், அது மிகையாகாது. ஏனெனில், மாமனிதனாகிய மோசேக்குப் பிறகு பொறுப்பேற்ற தளபதி யோசுவாவின் தலைமையின் கீழ் பெரும் வெற்றிகளைக் கண்டு, சுற்றிலுமிருந்த மக்கள் மீது கோலோச்சிய இஸ்ரவேல், நியாயாதிபதிகளின் காலத்தில் சுற்றிலுமிருந்த ராஜாக் களாலே, மிகுந்த தொல்லைக்குள்ளாக்கப்பட்டு அடிமைத் தனத்திற்குள்ளாகப் போக்கும் வரத்துமாயிருந்தார்கள். இக்கால கட்டத்தில், இஸ்ரவேல், தேவனை விட்டுப் பிரிந்து போனதால், (2:13), தேவனும் இவர்களை விட்டுப் போனார். சர்வ வல்லவரின் பாதுகாப்பு, இஸ்ரவேலை விட்டு விலக்கிக் கொள்ளப்பட்டதால், எதிரிகள் இவர்களை சுலபமாக மேற்கொண்டு, ஒருவர் மாற்றி ஒருவர் நையப் புடைத்தார்கள். அந்த ராஜாக்களின் கொடுமை தாங்க முடியாத நிலை வரும் போது இவர்கள் கதறுவார்கள், கூக்குரலிடுவார்கள், தேவனை நோக்கி முறையிடுவார்கள். அப்பொழுது கண்ணீரைக் காணும், நம் நல்ல கர்த்தர் இவர்கள் மீது மனதுருகி, இவர்களை இரட்சிக்கும்படியாய் ஓர் இரட்சகனை எழுப்புவார். அந்த இரட்சகனின் கீழ் கொஞ்ச நாள் அமைதியாக இருப்பார்கள். பிறகு, மீண்டும் பாவவழிக்குத் திரும்புவார்கள். விளைவு, மீண்டும் அடிமைத்தனம். அப்புறம் கூக்குரல், அதன் பிறகு மீண்டும் நியாயாதிபதியின் கீழ் விடுதலை என்று காரியங்கள் இப்படியாக தொடர்ந்து நடந்து வந்தது.

மீதியானியரின் கை இஸ்ரவேலுக்கு எதிராக ஓங்கியிருந்த ஒரு சமயத்தில், ஒரு மனிதன், தன்னுடைய நிலத்தின் விளைச்சலை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிற தற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக் கொண்டிருந்தான். (நியா. 6:11) அப்பொழுது, " *கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி, பராக்கிரம சாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* " என்றார் (6:12) ஏலி, சாமுவேல் உட்பட மொத்தம் 15 நியாயாதிபதிகள் வேதாகமத்தில் இடம் பெற்றிருந்தாலும் நியாயாதிபதி களுக்கான செயல்பாட்டின் அடிப்படையில், நியாயாதிபதிகளாக இருந்தவர்கள் 13 பேரே. இந்த 13 பேரையும் தேவன், தன்னுடைய ஜனங்களை இரட்சிக்கும்படியாய், அந்தந்தக் காலகட்டங்களில் தெரிந்து கொண்டார். இருப்பினும், மற்ற பன்னிரெண்டு பேரையும் தெரிந்து கொண்ட போது பயன்படுத்தப்படாத விசேஷ வார்த்தைகள், கிதியோன் நியாயாதிபதியாகத் தெரிந்து கொள்ளப்பட்டபோது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆம், " பாரக்கிராமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார் " என்று தன்னுடைய தூதனைக் கொண்டு அறிவிக்கிறார்.

ஆகையால், இப்போது, தூதன், கிதியோனிடம் " *கர்த்தர் உன்னோடு இருக்கிறார்*" என்று சொன்னதற்கான காரணங்கள் எதுவாக இருக்கக்கூடும் என்று சிலவற்றைக் கண்டுபிடிக்க முயற்சிப்போம்.



## I. கிதியோனின் வேத அறிவு

"*கர்த்தர் உன்னோடு இருக்கிறார்* " என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான முதல் காரணமாக நாம் காணக்கூடியது, கிதியோனின் வேத அறிவு.

ஆம், "*பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* " என்று அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அவன் கர்த்தருடைய தூதனிடத்தில் சொல்வதைப் பாருங்கள். "ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான் " (நியா. 6:13).

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, கர்த்தர் கிதியோனோடே இருந்தற்கான காரணங்களில் ஒன்று, அவன் தேவனுடைய மகத்துவங்களை அறிந்திருந்தது. அதாவது, அவன் தேவனுடைய வார்த்தைகளை முறையாக அறிந்திருந்தது. இது என்ன பெரிய காரியமா என்று கேட்கிறீர்களா? ஆம், இது பெரிய காரியம் தான். எப்படியெனில், நம்முடைய நாட்களில், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற, கிட்டத்தட்ட எல்லாருமே இக்காரியத்தில் தவறிழைத்துக் கொண்டுதான் உள்ளார்கள். தேவனுடைய வார்த்தைகளை அறிய வேண்டிய அளவுக்கு அறிவதில்லை. தெரிந்து கொள்ளவேண்டிய அளவுக்குத் தெரிந்து கொள்வதில்லை. ஆகவே, மார்க்க ரீதியாக, ஒரு சீரழிந்த நிலை கிறிஸ்தவத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டுள்ளது. இப்படிச் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீர்கள். இது ஒரு கசப்பான உண்மை. வேதவாக்கியங்களை ஒருவன் முறையாக, சரியாக அறியாவிட்டால், அவன் தப்பான செயலும், தவறான எண்ணமும் உடையவனாகவே இருப்பான். ஒரு சமயம் இயேசுவைச் சோதிக்கும்படியாக வந்த சதுசேய கூட்டத்தாரிடம், இயேசு இவ்விதம் சொன்னார். "*இயேசு அவர்களுக்கு பிரதி யுத்தரமாக; நீங்கள் வேத வாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்கிறீர்கள்* " (மத். 22:29) என்று.

நமதாண்டவரின் கூற்று எவ்வளவு உண்மையாயிருக்கிறது பாருங்கள். இன்றைய கிறிஸ்தவத்தில் மலைபோல் குவிந்து கிடக்கிற பெரும்பாலான தவறுகளுக்குக் காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறிந்து கொள்ளாதது தான். அது குழந்தை ஞானஸ்நானமாக இருந்தாலும், முறையற்ற ஞாயிறு ஆராதனையாக இருந்தாலும், உருவ வழிபாடாக இருந்தாலும், அந்நியபாஷை குழப்பமாக இருந்தாலும், அற்புத அடையாளங்கள் என்ற ஏமாற்றாக இருந்தாலும், வரம் பெற்றவர்கள் என்று சொல்லி அலையும் வக்கிரமாக இருந்தாலும் இவை எல்லாவற்றுக்கும் காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறியாததுதான். " *வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவை களால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு,* " (யோவான் 5:39) என்று தேவன் சொல்லும் போது, அதே தேவனுடைய பிள்ளை என்று சொல்லிக்கொள்ள விரும்பும் அநேகர், அதை ஆராயாவிட்டால் கூடப் பரவாயில்லை, குறைந்தபட்சம் அவைகளைப் படிக்கக்கூட ஆர்வம் காட்டாமல் இருப்பது எப்படி நியாயமாகும்? சொல்லுங்கள். அதைப் படிப்பவர்களுக்கும், எடுத்துப் போதிப்பவர்களுக்கும் கூலி கொடுத்தால் போதும் என்று இன்றைய கிறிஸ்தவம் நினைப்பது எவ்வளவு வேதனை யான காரியம். இதுதான் நிலை எனில், நமக்கு நித்திய ஜீவன் எப்படிக் கிடைக்கும்?.

## II கிதியோனின் பக்தி

"*கர்த்தர் உன்னோடே இருக்கிறார்*" என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான இரண்டாவது காரணமாக, கிதியோனுடைய பக்தியை நாம் கூறலாம்.

இங்கே வசனத்தைக் கவனியுங்கள். " *அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி; நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில், ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டு போய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு, இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டுவந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக்கடவாய் என்றார்* " (நியா.6:25,26).

தேவன் அவனை, அவனுடைய தகப்பன் வீட்டாருக்கும், அவனுடைய ஊராருக்கும் எதிராகச் செயல்படும்படி சொல்கிறார். இப்படிச் செயல்படுவது ஒரு சாதாரண காரியமல்ல. எப்படியெனில், *அந்நாட்களில், தேசம் முழுவதும் பாகாலுக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தபடியால் பாகாலுக்கு விரோதமாகச் செயல்படுவது, பெருங் குற்றமாகக் கருதப்பட்டது. ஆனாலும் கூட, அவன் மாறுத்தரம் எதுவும் சொல்லாமல் உடனடியாக ஒரு பத்துப் பேரைச் சேர்த்துக் கொண்டு தேவன் எதைச் செய்யச் சொன்னாரோ அதை கனகச்சிதமாகச் செய்து முடித்தான்* (6:27). இது, " *தகப்பனையும், தாயையும் என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்று, நமதாண்டவரின் கூற்றை நமக்கு நினைவுபடுத்துகிறது* " (மத். 10:37).

இதை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே, நம்முடைய பக்தியின் நிலை எப்படியுள்ளது? அது மெய்பக்தியா? அல்லது பொய்பக்தியா? சொல்லுங்கள். உபதேச விஷயத்தில் அதாவது, ஒருவன் கிறிஸ்தவனாக எப்படி மாறுவதென்பது குறித்தும், எப்படி வாழவேண்டுமென்பது குறித்தும் தேவனுடைய வார்த்தைகள் தெளிவாக இருந்தும், அதைக் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோமே அது எப்படி மெய் பக்தியாகும்? கிதியோன் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளத் தயங்கினானா? நம்முடை குடும்பத்தாரைக் குறித்தும், சமுதாயத்தைக் குறித்தும் அநேக சமயங்களில் கலங்குகிறோமே அதுபோல் அவன் கலங்கினானா? இல்லை. இல்லவே இல்லை. " கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று பிள்ளையாண்டான் சாமுவேல் சொன்னதைப் போல்தான் அவனுடைய மனநிலையும் இருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனுக்கும் அப்படிப்பட்ட மனநிலை இருப்பது அவசியம்.

## III கிதியோனின் கீழ்ப்படிதல்

"*கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* " என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான, இன்னொரு காரணமாக, நாம் கிதியோனுடைய கீழ்ப்படிதலைக் கூற முடியும்.

ஆம், தேவன் இவனை அழைத்தபோது, கர்த்தர் எங்களோடே இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன் என்றும், எங்கள் பிதாக்கள் விவரித்துச் சொன்ன அற்புதங்களெல்லாம் எங்கே என்றும் கேள்வி கேட்டான். இவன் தேவனிடத்தில், கேட்டக் கேள்விகளுக்கு அங்கே, நேரிடையாக பதில் கிடைக்கவில்லை. மாறாக, "*உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ*" என்று மாத்திரம் சொல்லப்பட்டது. ஆயினும், கர்த்தரின் காரியமாகப் போவதற்கு அவன் தன்னை முற்றிலும் ஆயத்தமாக்கிக் கொண்டான். நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? நம்முடைய கேள்விகளுக்கு தேவன் பாராமுகமாக இருக்கிறார். முதலில், நான் கேட்பதை அவர் எனக்குச் செய்யட்டும். பிறகு நான் அவருக்குக் கீழ்ப்படிவதைக் குறித்து யோசிக்கிறேன் என்று சொல்லியிருப்போம்.

அருமையானவர்களே, தேவனுக்குக் கீழ்ப்படிவதில் நாம் எப்படி? நமதாண்டவரைக் குறித்து எபிரெய ஆசிரியர் " அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே, கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.... " என்று கூறுகிறார் (எபி. 5:8). அங்கே நாம் கவனித்தால், தேவ குமாரனே கீழ்ப்படிந்தார். தேவ குமாரனுக்கே கீழ்ப்படிதல் அவசியமாயிருந்தது. அப்படியானால், நமக்கு? அதைச் சொல்லவே தேவையில்லை. தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தான் தேவன் அங்கீகரித்துள்ளார். இன்னும் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தான் தேவன் அந்தந்தக் காலகட்டங்களில் தமக்காகப் பயன்படுத்தியுள்ளார். எபிரெயர் 11-ம் அதிகாரத்திலுள்ள, விசுவாசிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ள விசுவாச வீரர்களெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களே.

அன்பானவர்களே, இன்றைக்கு நம்மில் எத்தனை பேர், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், நடுக்கத்தோடும் தேவனுக்கும், அவர் தந்த பரிசுத்த வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிகிற பிள்ளைகளாகயிருக்கிறோம்? தயவு செய்து நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்? இன்றைய கிறிஸ்தவத்தின் பயமும், பக்தியும், கீழ்ப்படிதலும் எந்தளவு உள்ளது? கீழ்ப்படிதல் இருக்க வேண்டிய கிறிஸ்தவத்தில், கேளிக்கைகள் மிகுந்து காணப்படுகிறதே எப்படி? அமைதி இருக்க வேண்டிய கிறிஸ்தவத்தில் ஆட்டமும், ஆர்ப்பாட்டமும் காணப்படுகிறதே, அது ஏன்? சொல்லுங்கள். பயமும், பக்தியும் இல்லாததே இந்த இழிநிலைக்குக் காரணம், யாராவது, இந்த உண்மையை மறுக்க முடியுமா? நாம் ஒவ்வொருவரும் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார்.

ஆகவே, அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இப்பொழுது நாம் பார்த்த இந்த கிதியோனைப் போல, தேவனுடைய வார்த்தைகள் மற்றும் மகத்துவங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவு உள்ளவர்களாகவும் கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய உபதேசங்கள் பற்றியும் தெளிவுள்ளவர்களாகவும் கிதியோனைப் போல தேவனுக்காக எல்லாவற்றையும் செய்கின்ற அளவுக்கு அவர் மீது பக்தியுள்ளவர்களாகவும், கிதியோனைப் போல, தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிகிறவர்களாகவும் இருப்போமாக! அப்படி நாம் இருந்தால், கிதியோனோடே இருந்த கர்த்தர், நம்மோடே கூட இருந்து, நம் வாழ்நாள் முழுவதும் நம்மைக் காத்துக் கொள்வார். ஆமென். ✤



**கொஞ்சம் சிரியுங்களே** நீதி. 17 : 22

**வேதாகம ஆசிரியர் :** " பொய் " என்றால் என்ன?

**சிறுபையன் :** " தேவனுக்கு அருவருப்பானது. ஆனால், ஆபத்தில் உதவக் கூடியது"

# உள்ளடக்கம்


நிறுவன ஆசிரியர் உரை .... 1

நிர்வாக ஆசிரியர் உரை .... 4

சிறப்பு ஆசிரியர் உரை .... 10

**தேவன்**

இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கிறது .....13

இயேசுவும் சூடுதல் மைலும் .....15

தேவனைப் பற்றி சரியாக எண்ணுதல் .....18

தேவனுடைய நற்தன்மை .....20

**சாட்சியங்கள்**

கல்லுகள் கூப்பிடும் .... 21

தேவனிடத்திலிருந்து ஒரு புத்தகம் .....23

மரண பாதையிலிருந்து தப்பித்தல் .....26

**தேவனுடைய வார்த்தை**

வேதாகமத்தைப் படிக்கும் போது .....28

பதிவு செய்யப்படும்படியாக .....30

**வாழ்வதற்கான உபதேசங்கள்**

நமது பாவங்களைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்? .....33

நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது .....35

ஜெபத்தின் மனிதபக்கம் .....37

சீர்பொருந்துவதற்கு இடதிலிருந்து வலதிற்குப் போங்கள் .....39

எங்களுக்கு விமர்சகர்கள் தேவை இல்லை : .....41

வாழ்வதற்கான ஐந்து உபதேசங்கள் .....43

விலையேறப்பெற்ற விசுவாசம் .....45

நம் ராஜா வருகிறார் .....47

ஒருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும்? .....50

உங்கள் திறமை எப்படி இருக்கிறது? .....52

நன்றிச் செலுத்துதல் .....54

**சபை**

இரட்சிப்பு சபைக்குள் இருக்கிறது .....55

கிறிஸ்துவின் சபை என்பது என்ன? .....57

உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள் .....59

அந்தியோகியா சபை .....61

**அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை**

இச்சையடக்கம் ..... 63

சந்தோஷத்தின் பொருட்டு ..... 67

தேவனுக்கு ஸ்தோத்திரம் ..... 68

என்னை விசாரிப்பார் யாராவது உண்டா? ..... 71

நான் ஏன் கார்த்தாவே? ..... 73

சுயகாட்டுப்பாடு ..... 76

தூரத்தில் பின்பற்றும் சீஷத்துவம் ..... 78

**கிறிஸ்தவ இல்லம்**

பெண் ஆணுக்குக்கீழானவளா? ..... 80

கட்டுப்பாடற்ற ..... 83

என் பிள்ளைகளுக்கு என்னுடைய மிகப் பெரிய வெகுமதி ..... 85

**செயலில் கிறிஸ்தவம்**

நீங்கள் எந்த அளவுக்கு ஞானவான்களாயிருக்கிறீர்கள்? ..... 87

சர்வதேச ஊழியம் ..... 89

வண்டி நிறையக் குழந்தைகள் ..... 92

கிறிஸ்தவத்தின் நான்கு நிலைகள் ..... 94

**இரட்சிப்பு**

ஆத்துமாவின் வீடு ..... 97

யோவான் ஸ்நானன் ஒரு தோல்வியா? ..... 99

இரட்சிப்பைப் பற்றிய தவறான கருத்துகள் ..... 101

இயேசு கிறிஸ்து இரு தன்மையும் கொண்டவர் .....105

**வேதாகமக் கேள்விகள்**

புதிய ஏற்பாட்டு சபை என்றால் என்ன? ..... 107

**வசனப்பகுதி பாடங்கள்**

பிரசங்கத்தின் நோக்கம் ..... 108

### சிறப்பு ஆசிரியர் உரை

# சமாதானம் பண்ணுகிறவர்கள்

## PEACE-MAKERS : PASSIVE OR ACTIVE?

***Byron Nichols***

மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பாக்கிய வசனங்களும், குறிப்பாக ஒன்பதாம் வசனமும் நமக்குப் பரிச்சயமானதுதான் : "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்". சமாதானம் பண்ணுதல் என்கிற காரியத்தை முற்றிலும் வேறுபட்ட கண்ணோட்டத்தில் நாம் பார்க்கப் போகிறோம்.

சமாதானம் என்பது ஓர் அருமையான காரியம். அது மிகுந்த கவனத்துடன் நாடப்பட வேண்டும். சமாதானம் பண்ணுகிறபடியால் தான் சமாதானம் இன்றும் இருக்கிறது. இயேசுவால் குறிப்பிடப்பட்டிருக்கிற சமாதானமானது வெறுமனே மோசமான காரியங்கள் இல்லாமையை மாத்திரம் குறிக்காமல், நல்ல மற்றும் ஆவிக்குரிய பிரகாரமாக ஆரோக்கியத்தையும் சம்பந்தப்படுத்துகிறது. இது மனிதனுக்கு மிகச் சிறந்த நன்மையைக் கொண்டு வர உதவி செய்கிறது. இவைகளெல்லாம் சமாதானம் பண்ணுகிறவர்களின் செயல்பாட்டின் விளைவாகும்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் தங்களுக்குத்தாமே சமாதானம் உள்ளவர்களாக, சமாதானத்தை விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதை விட மேலாக, சமாதானத்தைக் கொண்டு வருபவர்களாக, சமாதானத்தை உருவாக்குபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சமாதானத்தை உண்டாக்கும், மீட்டமைக்கும், தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளுக்காக தங்களையே தியாகம் செய்யும் அளவுக்கு சமாதானத்தை நேசிக்கின்றவர்களாக இருக்கிறார்கள். இன்னும், சமாதானம் உள்ளவர்கள், மற்றும் சமாதானத்தை நேசிக்கிறவர்களில் பலர் சமாதானம் பண்ணுகிறவர்களாக மாறுவதால் ஏற்படும் இன்னல்களை எதிர்கொள்ள விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். சமாதானமானது அதிக செயல்பாடு மற்றும் முயற்சியின் பலனாயிருக்கிறது.

சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருந்து, தேவனிலும், சக மனிதர்களிலும் அன்பு கூருகிறார்கள். பல நேரங்களில் இது கடினமானதாகவும், அநேகருக்குப் பிடிக்காததுமாயிருக்கிறது. சிலவேளைகளில், சமாதானம் பண்ணுவது சமுதாயத்தில் நம்மை அந்நியப்படுத்தி, நம்முடைய மரியாதையைக் கெடுத்துக்கூடப் போடும். ஆனாலும், சமாதானம் பண்ணுகிறவர்கள் விலைகொடுக்க முன்வந்து, தேவனுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து சமாதானத்தை உண்டு பண்ணி, அதை நிலைத்திருக்கச் செய்யும் தேவனுடைய கருவிகளாக மாறுகிறார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் தாங்கள் எடுக்கின்ற முயற்சிகள் எப்போதும் வெற்றியைத் தராத



காரணத்தால் சில வேளைகளில் ஏமாற்றம் அடைகிறார்கள். சில வேளைகளில் சோர்ந்து போகிறார்கள். பவுல் ரோமர் 12:18ல் "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் " என்று வலியுறுத்துகிறார்.

சமாதானத்தை நேசிக்கிறவர்களும், சமாதானம் பண்ணுகிறவர்களும் சமாதான முயற்சிகளை எடுத்தாலும் சமாதானம் எப்போதும் ஏற்படுவதில்லை என்பதை நாம் இங்கே கற்றுக் கொள்கிறோம். துரதிஷ்டவசமாக எல்லோரும் சமாதானத்தை விரும்புவதில்லை. எனவே, சமாதானம் பண்ணுகிறவர்கள் தங்களுடைய சமாதான முயற்சிகளில் எப்போதுமே வெற்றி பெறுவதில்லை. ஆயினும், நீதிமொழிகள் 12:20ல் சொல்லப்பட்டிருக்கிற காரியம் இன்றளவும் உண்மையாயிருக்கிறது. " சமாதானம் பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம் ". சத்தியத்தின் மீதும், நீதியின் மீதும், ஆத்துமாக்களின் மீதும் அன்பு கொண்டவர்கள் தாங்கள் சமாதானப் பிரபுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியதை அறிந்து கொள்ளும்போது உண்மையான சந்தோஷத்தை உணர்கிறார்கள் (ஏசா. 9:6).

உபதேசச் சட்டத்தை விட்டுக்கொடுத்து அதனால் ஏற்படும் சமாதானம் உண்மையான சமாதானம் அல்ல. ஜனங்கள் ஒத்துப்போகத்தக்கதாக தேவனுடைய வார்த்தையோடு சமரசம் செய்து கொள்ளுகிறவர்கள் சமாதானம் பண்ணுகிறவர் களல்ல. எல்லா நேர்மையோடும், அன்போடும் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன், அப்படிப்பட்டவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிராமல் சமாதானத்தை சீர்குலைக்கிறவராயிருக்கிறார்கள்.

சமாதானம் நாசமாக்கப்படும்போது அல்லது அச்சுறுத்தப்படும்போது, செயல்படாமலேயே இருப்பது அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது தான் மிகச் சுலபமானது. மேலும், சமாதானக் குறைச்சல் என்கிற பிரச்சனையைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும், அது இல்லாதது போல் பாசாங்கு செய்வதும் தேவையற்றதாயிருக்கிறது. சமாதானக் குறைச்சலை அப்படியே மூடி மறைப்பதினால் அதிலிருந்து நாம் தப்ப முடியாது. ஒரு பிரச்சனையை ஒழித்து சமாதானத்தை மீட்டமைக்க சரியான நடவடிக்கையை எடுக்கத் தவறுவது சமாதானம் பண்ணுவதல்ல. உண்மையில், அது பிரச்சனையை உண்டு பண்ணுவதாகும். இத்தகைய முடிவுகள் சமாதானக் குறைச்சலை உண்மையில் அதிகமாக்கிவிடும். இது நோயை அதன் ஆரம்ப கட்டத்தில் கவனியாமல் விட்டுவிடுவது போன்றதாகும். அப்படி விட்டுவிட்டால் பின்னர் அது உயிருக்கு ஆபத்தான ஒரு நிலைக்கு நம்மைத் தள்ளிவிடுகிறது. அப்போது நாம் ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை எடுத்திருந்தால் இத்தகைய ஆபத்தான நிலைமையை தவிர்த்திருக்கலாம் என்பதைத்தான் கற்றுக்கொள்கிறோம். பிரச்சனைகளை தவிர்ப்பதும் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதும் சமாதானத்தை ஏற்படுத்தாது. மறுபடியும், இயேசு " சமாதானத்தை விரும்புபவர்கள் பாக்கியவான்கள் " என்று சொல்லவில்லை. மாறாக, அவர் " சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் " என்றே சொன்னார்.

குறிப்பாக, மூப்பர்கள் சமாதானம் பண்ணும் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். பவுல், தீத்து ஒன்றாம் அதிகாரத்தில் மூப்பர்களின் பொறுப்புகளையும், தகுதிகளையும் விவாதிக்கிறார். ஒன்பதாம் வசனத்தில் தொடங்கி பவுல் மூப்பர்கள்

வேதாகமத்தை நன்கு அறிந்த மனிதர்களாகவும் சமாதானத்தைத் தங்கள் கள்ளப் போதகத்தினாலும், வஞ்சகத்தினாலும் அழிக்கிறவர்களை எதிர்கொண்டு அவர்கள் வாயை அடைத்து வேத வாக்கியங்களைப் பயன்படுத்தி சமாதானத்தை உண்டுபண்ணுகிறவர்களாயிருக்க வேண்டும் என்று அறிவிக்கிறார். சில வேளைகளில் ஒழுங்கற்றுத் திரிகிற சில சகோதரர்களால் சமாதானம் சின்னாபின்னமாகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மனம்போன போக்கில் போகிற, ஒழுங்கற்றுத் திரிகிற சகோதரர்களிடமிருந்து நம் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று கர்த்தர் சொல்கிறார் (2 தெச. 3:6,15). இந்தக் கடினமான நடவடிக்கையை மூப்பர்கள் முன்னின்று எடுக்க வேண்டும்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் சூழ்நிலைகளை தற்கால அடிப்படையில் காண்கிறவர்களாக இல்லாமல், நீண்டகால அடிப்படையில் காண்கிற ஆவிக்குரிய சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இப்போது என்ன செய்யப்படுகிறதோ அல்லது என்ன செய்யப்படவில்லையோ அதைப் பொறுத்து நிகழ்கால சூழ்நிலைகளைப் பற்றி கவலைப்படாமல் இறுதி பலனை எதிர்நோக்குகிறவர்களாக இருக்க வேண்டும்.

வேதாகமம், தேவனை " சமாதானத்தின் தேவன் " என்று அடிக்கடி குறிப்பிடுகிறது. (ரோமர் 15:33; 16:20; 2 கொரி. 13:11; பிலி. 4:9; 1 தெச. 5:23; எபி. 13:20). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் மத்தேயு 5:9ல் " சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் " என்று வாக்குத்தத்தம் செய்தார். இங்கே இயேசு சொல்கிற காரியம், நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருப்பதினால் தேவனுடைய குணாதிசயத்திற்கு பங்காளிகளாக மாற முடியும். நாம் தேவனைப் போல் ஆக முடியும் என்று சொல்கிறார். தயவு செய்து ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். துடிப்புடன் சமாதானத்தை நாடி, பின்தொடர்ந்து அதை மேம்படுத்துபவர்களுக்கு மட்டுமே இது சாத்தியம். தேவன் தாமே சமாதானத்தை உண்டாக்கி, அதைப் பாதுகாக்கிற, தங்களால் முடிந்தவரை தைரியத்தோடும், உறுதியான பிடிப்புடனும் செயல்படுகிற கிறிஸ்தவர்களை, சமாதானம் பண்ணுகிற பலரை எழுப்புவாராக. ❖

### வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்

| | |
|---|---|
| அங்கத்தினர்கள் | 1 கொரி. 12:27 |
| சீஷர்கள் | அப். 6:1 |
| விசுவாசிகள் | அப். 5:14; 6:15 |
| பரிசுத்தவான்கள் | அப். 9:13, ரோ. 1:7 |
| ஆசாரியர்கள் | 1 பேதுரு 2:9, வெளி. 1:16 |
| கிறிஸ்தவர்கள் | அப். 11:26, 26:28, 1 பேதுரு 4:16 |



# இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கிறது

## WHAT DO I GET OUT OF THIS?

*Jeryy Bates*

" இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும் " என்று சில கிறிஸ்தவர்கள் கேட்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பல கிறிஸ்தவர்கள் அவர்களுடையவைகளில் ஏதோ ஒன்றை நீங்கள் எடுத்துப் பயன்படுத்தினால் அதன் புகழ் அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று நிச்சயமாய் விரும்புகிறார்கள். அவர்கள் சொன்ன அல்லது செய்த ஏதோ ஒன்றிலிருந்து ஒரு கருத்தைப் பயன்படுத்தினால் அதிலும் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று விரும்புகிறார்கள். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஒரு செயலினால் புகழ்ச்சி ஏற்படுகிறதென்றால் அதில் தங்களுடைய பங்களிப்பு இருக்கிறதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள்.

புகழையும், கனத்தையும் தேடுவது வியாபார உலகில் தேவையானதும், நல்லதுமாயிருக்கிறது. ஒரு புதிய பொருளையோ அல்லது புதிய கண்டுபிடிப்பையோ முழுமையாக்க அதற்காக கடினமாக உழைத்து பெருமளவு பணத்தை செலவு செய்தவர்களைப் பாதுகாக்க உரிமைச் சட்டங்கள் இருக்கின்றன. இலக்கியங்களை எழுதுபவர்களும், இசை அமைப்பாளர்களும் தங்கள் புகழைப் பெறவும், அவைகள் மூலமாக கிடைக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ள காப்புரிமைச் சட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்கள் வியாபார உலகில் நன்றாய் வேலை செய்கின்றன.

ஆயினும், சபையானது வியாபார ஸ்தாபனம் போல் செயல்படக்கூடாது. கிறிஸ்தவர்களாக நாம் புகழ் பெறுவது பற்றி கவலைப்படக்கூடாது. ஏனென்றால், நம் நோக்கம் நம்மை மகிமைப்படுத்துவதாயிராமல், தேவனை கனப்படுத்துவதாயிருக்க வேண்டும். இக்கருத்தை வலியுறுத்துவதற்கு நாம் பல வசனங்களைக் குறிப்பிட முடியும். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். (1 பேதுரு 4:11). " தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசு கிறிஸ்து மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக " (ரோமர் 16:27). இந்த வாக்கியங்களெல்லாம் நம்முடைய முக்கிய குறிக்கோள் நம்மையல்ல. தேவனை மகிமைப்படுத்துவதும், கனப்படுத்துவதுமாயிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் கூறுகின்றன. மேலும், நாம் செய்கிற யாவும் அந்த குறிக்கோளை நோக்கிச் செயல்படுகிறதாக இருக்க வேண்டும். மேலும், சுயநலமாக நம் சொந்த நன்மைகளுக்காக கிரியை செய்வதற்குப் பதிலாக மற்றவர்களுடைய நன்மைகளுக்காக நாம் கிரியை செய்து அவர்களை உயர்த்த வேண்டும்.

" ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கு வானாக " (பிலிப். 2:3,4) .

என்னுடைய புகழ்ச்சி இப்பூமியில் சம்பாதிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. என் இலக்கெல்லாம் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதும், மற்றவர்கள் வல்லமையான தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்க உதவி செய்வதுமாயிருக்க வேண்டும். மற்றவர்கள் தங்கள் இலக்கை அடைய உதவுவதற்கு நான் எதையாவது உண்டாக்கினால், அது முதலில் எனக்கு பணத்தையோ புகழ்ச்சியையோ தராமல் அவர்கள் பயன்படுத்து வதாக இருக்க வேண்டும். நாம் போட்டியாளர்கள் அல்ல, ஆனால், உடன் வேலையாட் களாக இருக்கிறோம். நாம் ஒரே அணியில் இருக்கிறோம்! அப்போஸ்தலனாகிய பவுல் புகழைப் பற்றி கவலைப்படவே இல்லை. உதாரணமாக, அவர் பிலிப்பியர் நிருபத்தை எழுதினபோது சிறைச்சாலையில் இருந்தார். இப்புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்களென்றும், அப்பிரசங்கங்கள் மூலமாக தன் உபத்திரவங்களைக் கூட்ட நினைத்து அவர்கள் அப்படிச் செய்தார்களென்றும் பவுல் எழுதினார். இருந்தபோதிலும், பவுல் அதைப்பற்றி கவலைப் படவே இல்லை. உண்மையில், ஜனங்கள் போதிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்ட காரணத்தால் அவர் களிகூர்ந்தார். (1:18). யாருக்குப் புகழ்ச்சியும், பாராட்டும் கிடைத்ததென்பது பவுலின் கவலையாயிருக்கவில்லை. ஜனங்கள் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; தேவன் மகிமைபட்டுக் கொண்டிருந்தார். அதுதான் முக்கியமாக இருந்தது. நீங்கள் யாருடைய மகிமையை தேடிக் கொண்டிருக்கிறீர்கள்? ❇

## சபையில் நீங்கள் எப்படிப்பட்டவர்?

சபைக்காக கொடுக்கிறவரா அல்லது வாங்குகிறவரா?

சபைக்கு இலகுவானவரா அல்லது பாரமானவரா?

சபையைத் தாங்குகிறவரா அல்லது தாக்குகிறவரா?

சபையை ஊக்குவிப்பவரா அல்லது சோர்வடையச் செய்கிறவரா?

சபையில் சமாதானம் பண்ணுகிறவரா அல்லது சமாதானத்தைக் குலைப்பவரா?





# இயேசுவும் கூடுதல் மைலும்

## JESUS AND THE EXTRA MILE

*Michael L. King*

**சி**லுவையின் நிழல் இயேசுவின் வழியில் விழத்தொடங்கியபோது, அவர் தொடர்ந்து அடியெடுத்து வைப்பதற்குக் கூட சிரமப்பட்டார். இயேசு தாம் ஏற்கனவே மலைப் பிரசங்கத்தில் எவைகளைப் போதித்தாரோ அவ்வகையான மனநிலையை மாதிரியாக காண்பித்தார் அல்லது சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார் (மத். 5:38,42). நம் ஆண்டவர் போகாத இடத்திற்குப் போகவோ அவர் செய்யாத ஒன்றை நாம் செய்யும்படியோ ஒருபோதும் அவர் நம்மை கேட்டுக்கொண்டதே இல்லை. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் உண்மையாகவே அவர் நம் முன்னோடியாக இருக்கிறார். எனவே தான், நம் வாழ்க்கையை வடிவமைக்க அதற்கான உதாரணத்திற் காக, மாதிரிக்காக இயேசுவை நோக்கிப் பார்ப்பது நமக்கு எப்போதும் அவசியமாகிறது. இயேசு கிறிஸ்து ஊழியத்தின் பாதையில் மற்றவர்களை விட அதிகமான காரியங்களைச் செய்திருக்கிறார். இயேசு தம்மை அனுப்பின பிதாவின் சித்தத்தைச் செய்ய வந்தபோது, தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை லேசாக எடுக்கவில்லை (யோவான் 4:34). நாமும் கூட, நமக்குக் கொடுக்கப்பட்ட பணியை, மேன்மையை உணர்ந்து கர்த்தருடைய கிரியை யில் பெருகுகிறவர்களாக இருக்க வேண்டும் (1 கொரி. 15:58).

இயேசு மனித உருவில் வந்தபோது அவருடைய பெரும்பாலான நாட்கள் ஜெபத்தில் தான் கழிந்தது. இயேசு அதிகாலையிலே ஜெபிக்கிறவராகக் காணப்பட்டார் (மாற்கு 1:35) அவர் கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்தார் (மத். 26:36). இயேசு மரணத்திற்கு முன்பு பாரமான இருதயத்துடன் ஜெபித்தார் (எபி. 5:7). இயேசு தேவனிடத்தில் வருகிறவர்களுக்கு அவர்களுக்காக பரிந்து பேசியிருக்கிறார் (எபி. 7:25). இக்கட்டான வேளையிலும், முடிவெடுக்கும் முன்பும் இயேசு ஜெபித்திருக்கிறார் (யோவான் 7:5). பெரும்பாலும், எப்போதும் அவர் மற்றவர்களுக்காகவே ஜெபித்திருக் கிறார்.

இயேசு அன்பு என்னும் பகுதியில் மற்றவர்கள் அனுபவிக்க விரும்பாத காரியங் களை ஒருபடி மேலே சென்று செய்து காட்டியிருக்கிறார். அவருடைய வாழ்க்கையை இப்பூமியில் கடினமாக்கிய பரிசேயர்களும், ரோமர்களும் அவரால் நேசிக்கப்பட்டனர். அவர் தம்முடைய சத்துருக்களைக் கூட சிநேகித்து, அவர்களுக்காக தம்முடைய ஜீவனை விட்டிருக்கிறார் (யோவான் 15:13). அவர் அன்பை திரும்பச் செலுத்தாதவர் களிடத்திலெல்லாம் அன்பு கூர்ந்திருக்கிறார் (லூக். 6:32). கர்த்தருடைய அன்பு அதிகமாகப் பேசப்பட்டு, கொஞ்சமாக செய்யப்படும் வகையைச் சார்ந்த அன்பு அல்ல. அவர் தம்முடைய அன்பை வாழ்விலும், சாவிலும் நிரூபித்தார் (ரோமர் 5:6,5) லூக்கா

தன்னுடைய சரித்திர புத்தகத்தில் இயேசு செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணிதாகக் கூறுகிறார் (அப். 1:1).

தியாகம் என்கிற பகுதியில் இயேசு செய்த தியாகத்தை விட வேறு ஒருவரும் செய்ய முடியாது. அவரைப் போல் வள்ளல் யாருமில்லை, இயேசு மரித்தார், அவர் ஒரு இரத்த சாட்சியாகக் கொல்லப்படவில்லை. ஆனால், அவர் தாமாகவே முன்வந்து தியாகமாக தம் ஜீவனை விட்டார் (யோவான் 10:18). இயேசு சிலுவையில் அறையப் பட்டதை உருவக நடையில் இவ்விதமாக வேத வல்லுநர்கள் விவரிக்கின்றனர். " சிலுவையோடு அவரைக் கட்டின கயிறு இரட்சகருடைய அன்பாகவும், தேவனுடைய நித்திய நோக்கத்திற்கு அவருடைய விசுவாசமாகவும், தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வதாகவும் இருந்தது ". நாம் கொடுக்கிறதில் பெருக வேண்டுமென்று அறிவுறுத் தப்பட்டிருக்கிறோம். அதன் பொருள் குறிப்பிட்ட அல்லது எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட அதிகமாகக் கொடுப்பதாகும் (2 கொரி. 8:7).

இயேசு இப்பூமியில் வாழ்ந்தபோது செய்த வேலையை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். இயேசு இப்பூமியில் இருப்பதற்கான நோக்கத்தை விளக்குகிறார். " தான் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்ய வந்ததாக அறிவிக்கிறார் (மத் 20:28). அவர் களைப்படையும் வரை வேலை செய்தார் என்று நாம் அறிகிறோம் யாக்கோபின் கிணற்றருகே அந்த சமாரிய ஸ்திரீயிடம் எந்நேரத்தில் உரையாடினார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். (யோவான் 4:6). இயேசுவின் வேலை பவுலின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால், பவுல் இரவும், பகலும் வேலை செய்தார் (2 கொரி. 11:25). இன்று தியாகப் பூர்வமாக வேலை செய்கிற வேலை யாட்களின் தேவை அதிகமாக இருக்கிறது! இன்று தேவ பக்தியுள்ள ஒரு நபராயிருப்ப தற்குத் தேவையான அர்ப்பணிப்பைக் கண்டறிய இயேசுவையும், அப்போஸ்தலர் களையும் நோக்கிப் பார்க்க வேண்டும் (1 கொரி. 15:58).

அடுத்ததாக, மிக முக்கியமான பகுதி என்னவெனறால் இயேசு சிறிய அளவிலான சேவையிலிருந்து கடந்து அல்லது அதைத்தாண்டி அதிகப்படியான வேலையைச் செய் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். இயேசு தேவனுக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் மிகவும் தாராளமாய் இருந்தார். தேவனோடு இயேசு கொண்டிருந்த உறவானது இயேசு சொன்ன வார்த்தைகளாலே அடையாளப்படுத்தப்படும். " நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை.... எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது (யோவான் 5:30). அவர் பேசிய மொழி நடை தேவனுக்கு அவர் கீழ்ப்படிந்ததை நிரூபிக் கிறது. மேலும், அவருடைய ஜெபங்களில் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று எப்பொழுதும் சொல்வதை நாம் காணமுடியும் (மத். 26:42). இயேசுவின் வாழ்க்கை இவ்வுலகில் தேவனுடைய பணியை நிறைவேற்றுகிறது. அதாவது, இழந்து போனதைத் தேடவும் இரட்சிப்பதாகவும் இருந்தது. அப்படிச் செய்ததினால் அவர் பிதாவின் சித்தத்தை கனப்படுத்தினார் (எபி. 10:7).

கிறிஸ்துவின் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அவர் எதிர்பார்ப்பை வி அதிகமாகச் செய்வதை நாம் காண முடியும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்



நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. " முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத். 6:33).

மேலும், " அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் " (ரோமர் 8:28). இந்த வசனபகுதி நாம் தேவனிடத்தில் அன்பு கூரும் போது (எல்லை) காரியங்கள் (செயல்பாடு) நன்மைக்கேதுவாக (ஈட்டுத் தொகை) நடக்கிறதென்று (ஒத்துழைப்பு) அறிந்திருக்கிறோம். நம் கர்த்தர் நாம் அவர் மீது கொண்டிருக்கும் அன்பை நிரூபிக்க நாம் சாகும்படி நம்மை கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால், நாம் அவருக்காக வாழவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். " நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை " (ரோமர் 12:1 ).

தேவனும், கிறிஸ்துவும் நாம் பெற்றுக்கொள்வதற்கு நம்முடைய தகுதிக்கு அதிக மாகவே காரியங்களை செய்திருக்கின்றனர். ஏசாயா சொன்னதுபோல் நாம் பதிலளிப் பதற்கு நேரம் வந்துவிட்டது. " யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன் ". அதற்கு நான் : இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் (ஏசாயா 6:8). ❖

## இயேசு வந்தால் ....

அவரை உள்ளே விடுவதற்கு முன்பு உங்கள் ஆடைகளை மாற்ற வேண்டிய தாயிக்குமா? அல்லது சில பத்திரிக்கைகளை மறைத்து, வேதாகமம் எங்கே இருந்ததோ அங்கே வைப்பீர்களா?

உலகப் பிரகாரமான இசையை மறைத்துவிட்டு, சில கீர்த்தனைப் புத்தகங்களை வெளியில் வைப்பீர்களா?

இரட்சகர் உங்களோடு இரண்டு அல்லது மூன்று நாட்களை செலவழித்தல் உங்கள் வழக்கமான காரியங்களை எப்போதும் போல் செய்வீர்களா?

உங்களோடு இயேசு எப்போதும் இருக்க வேண்டுமென்று மகிழ்ச்சியடை வீர்களா? அல்லது அவர் உங்களை விட்டுப் போனதும் பெருமூச்சு விடுவீர்களா?

இயேசு உங்களோடு சில நேரத்தை செலவிட நேரில் வந்தால் நீங்கள் செய்யும் காரியங்களை அறிவது சுவாரஸ்யமாக இருக்கும்.



# தேவனைப் பற்றி சரியாக எண்ணுதல்

## THINKING RIGHT ABOUT GOD

*Frank Chesser*

இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் தங்களை வெறுத்ததாகவும், வனாந்தரத்தில் தாங்கள் அழிந்து போவதை விரும்பியதாகவும் நினைத்தனர் (உபா. 1:27) இப்படி இஸ்ரவேல் தேவனைப் பற்றி சரியாக நினைக்க மறுத்தது அவர்களுடைய கலகத்திற்கும் கானான் தேசத்தை அவர்கள் சென்றடைய நாற்பது வருட காலத்தாமதத்திற்கும் வழிவகுத்தது. தேவன் தன்னுடைய எதிரி என ஒருவர் நினைத்தால் ஒருவருமே தேவனுக்கு நன்றியோடும், அன்போடும் இருக்க முடியாது.

பூமியில் மேன்மையைத் தொலைத்து, தன் செல்வங்கள் எல்லாம் பறிக்கப்பட்ட நிலையில், தலைகுனிந்து, உடைந்த இருதயத்துடன் யோபு தன் பிள்ளைகளின் சவப்பெட்டி அருகே நின்றார். அப்பொழுது, யோபு "கர்த்தர் தந்தார் " என்று சொன்னபோது சரியாகத் தான் சொன்னார். ஆனால், " கர்த்தர் எடுத்தார் " என்று சொன்னபோது அவர் தவறாகச் சொன்னார் (யோபு 1:21). அது சாத்தானுடைய செயல், தேவனுடையதல்ல.

யோபு, தேவன் தன்மீது அம்புகளை எய்ததாக குற்றஞ்சாட்டத் தொடங்கினார் (6:4); தேவன் பூசலினால் தன்னை முறிக்கிறதாகவும்; முகாந்தரமில்லாமல் அநேக காயங்களை தனக்கு உண்டாக்குவதாகவும் (9:17); தேவன் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைப்பதாகவும் (9:23); தேவன் தன்னை இளைத்துப் போகச் செய்ததாகவும், தன் கூட்டத்தையெல்லாம் பாழாக்கினதாகவும் (16:7); தன்னுடைய கூப்பிடுதலை தேவன் கேட்கவில்லை என்றும் தொடர்ச்சியாக தேவனை யோபு குற்றஞ்சாட்டினார். அநேகமாக, தேவனைப் பற்றிய யோபுவின் தவறான எண்ணம் அவரை நம்பிக்கையற்ற நிலையில் மூழ்கடித்தது.

இன்னும், இயற்கை சீறும்போது, அதன்விளைவாக உயிரும், உடைமைகளும் ஊசலாடும் போது இப்படிப்பட்ட அழிவுக்குக் காரணம் " தேவனுடைய செயல் " என்று விவரிக்கப்படுகிறது. ஒரு குடிகார ஓட்டுநர் கடும் உறக்கத்தின் மூலமாக ஒரு சிறுபிள்ளையின் கண்களை மூடுகிறார். அப்போது அப்பிள்ளையின் தகப்பன் தன் பிள்ளையை தேவன் எடுத்துக் கொண்டதாக தேவனைக் குற்றஞ்சாட்டுகிறார். உபத்திரவத்தின் படுக்கையிலிருந்து மனிதன் தேவனை நோக்கிப் பார்க்கிறான். அவன் தேவனை தன் துன்பத்திற்கும், அழுகைக்கும் காரணமாகக் காண்கிறான். " அப்பொழுது ஏன் எனக்கு இப்படி "? என்று அவன் கேட்கிறான். ஒரு மனிதன் தன் வீட்டைத் தீயினாலும், தன் ஆரோக்யத்தை நோயினாலும், தன் நண்பனை மரணத்தினாலும் தேவன் பறித்துக் கொண்டதாகவும் நம்பினால் தேவனை அன்போடும், நன்றியோடும் எப்படி சேவிக்க முடியும்?

" நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது " (யாக். 1:17). தேவன் சுகம், ஜீவன் மற்றும் சந்தோஷத்தின் ஆதாரமாயிருக்கிறார். நோய், நம்பிக்கையற்ற நிலை, மரணம் போன்றவைகளின் ஆதாரமல்ல. ஆனால், வாழ்க்கையின் எல்லா எதிர்மறையான காரியங்கள் அனைத்தும், சாத்தானுடைய செயலாலும், உலகத்தின் பாவிகளாலும் வருகிறதாக இருக்கிறது. ❖

**இன்றே இயேசுவை நோக்கிப் பாருங்கள்**

**அவருடைய கண்களில் ஜீவ ஒளியிருக்கிறது...**

**அவருடைய குரலில், சத்திய வாக்கிருக்கிறது...**

**அவருடைய பாதத்தில், சமாதானப் பாதைகள் இருக்கிறது ...**

**அவருடைய கரங்களில், ராஜ்யத்தின் வேலையிருக்கிறது ...**

**அவருடைய இருதயத்தில், பிதாவின் அன்பிருக்கிறது!**



# தேவனுடைய நற்தன்மை

## THE GOODNESS OF GOD

*Jack W. Carter*

**தே**வனுடைய நற்தன்மைகளை உணராதவனாகவே, நான் என் தேவனோடு நேரத்தைச் செலவழிக்கிறேன். இதன் மூலம், எனக்குள்ளாக இருக்கும் நன்றியுணர்வை வெளிப்படுத்தமுடியாது என்று காண்கிறேன்.

விக்கிரக ஆராதனை மனித இனத்தின் மிகப்பெரிய பாவமாக இருந்து வருகிறது. இது வரலாற்றின் ஆரம்பத்திலேயே தொடங்கி இன்னும் உலகின் பல பாகங்களிலும் கோலோச்சுகிறது.

என் மனதில் எழும்பும் முதன்மையான கேள்வி, ஏன் இப்படி என்பது தான். ஏன் மக்கள் இவ்வளவு அன்புள்ள தேவனை விட்டுத் திரும்பி, பேசமுடியாத, செயல்பட முடியாத, அன்பின் அர்த்தம் கூட தெரியாத பொருள்களைத் தொழுது கொள்ளத் தீர்மானிக்கிறார்கள்.


பல நூற்றாண்டுகளாக மக்கள் தங்கள் தெய்வங்களுக்கு உயிர்கொடுக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் அவைகளை போஷிக்க முயற்சிக்கிறார்கள், அவைகளைச் சாந்தப்படுத்த முயற்சிக்கிறார்கள் (மனித பலி செலுத்துவது உட்பட), வாழ்க்கையை சுபமாக்கும் நம்பிக்கையில் மந்திர தந்திரங்கள் மூலமாக ஆவியை அழைத்து இவ்விதமாக எல்லா வகையான மூடத்தனமான சடங்காச்சாரங்களையும் செய்கிறார்கள்.

நம் தேவனை போஷிக்க வேண்டிய அவசியமில்லை. சங்கீதக்காரன் மூலமாக இப்படி வாசிக்கிறோம். " நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே (சங். 50:12). அவருக்கு மனித பலிகள் தேவையில்லை. இது சம்மந்தமாக அவர் தெளிவாக அறிவித்திருக்கிறார். இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை (எரே. 19:5).

நம் தேவன் நம்மை இதமான உயிரோட்டமான அன்புடன் நேசிக்க விரும்புகிறார். எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்மோடு என்றும் இருந்து காண்கிறார் என்னும் நம்பிக்கையுடனும் நிச்சயத்துடனும் வாழ வேண்டுமென்று விரும்புகிறார். இப்படிப்பட்ட அன்புள்ள தேவன் நம் சிருஷ்டிகராகவும், தகப்பனாகவும் இருப்பதால் நான் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறேன். அநேகர் அவர் எப்படியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அப்படியாக அவர் இல்லாததைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.







# கல்லுகள் கூப்பிடும்

## THE STONES CRY OUT

*Wayne Jackson*

**க**டந்த பல வருடங்களாக பாலஸ்தீனத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க தொல்பொருள் ஆராய்ச்சிகள் பரிசுத்த வேதாகமத்தின் வரலாற்றுப் பூர்வமான துல்லியத்தை மேலும் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

ஆதியாகமப் புத்தகத்தில் ஆபிரகாம் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்

கட்டினதாகச் சொல்லும் " சீகேம் " (12:6,7) என்னும் இடத்தில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மண்ணைத் தோண்டிய போது, கிட்டத்தட்ட நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு " சீகேமில் " முறையான ஒரு சமுதாயம் இருந்ததாக கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த காலக் கட்டம் முற்பிதாக்களின் காலமாக இருந்திருக்கிறது.

❖ பாலஸ்தீனத் தேசத்தின் மையப் பகுதியில் அவர்கள் தோண்டிய போது "எக்ரோன்" பட்டணத்துப் பெயர் தரிக்கப்பட்டிருந்த பெனிக்கேய கல்வெட்டு ஒன்றை கண்டுபிடித்தார்கள். இந்த எக்ரோன் பட்டணத்தில் தான் தேவனுடையப் பெட்டியை பெலிஸ்தியர்கள் சில நாட்கள் வைத்திருந்தார்கள். (1 சாமு. 5:1,10).

❖ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெற்கு இஸ்ரவேலில் "மசாடா" என்னுமிடத்தில் இரண்டாயிரம் வருட பழமை வாய்ந்த குப்பை மேட்டை ஆராய்ந்து கொண்டிருந்தபோது ஏரோது ராஜாவின் பெயர் பொறிக்கப்பட்டிருந்த ஒரு திராட்ச ரசக்கோப்பையை தோண்டி எடுத்தார்கள். இந்தப் புகழ் பெற்ற ஏரோது ராஜாவின் பெயர் பொறிக்கப்பட்ட முதல் பொருள் இதுவாகத்தான் இருந்தது. இந்த ஏரோது அந்திப்பா என்கிற ராஜாதான் யோவான் ஸ்நானனை சிரச்சேதம் செய்தான்.

❖ இஸ்ரேலிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் " டெல்டான் " பகுதியில் உள்ள கோலன் குன்றுப் பகுதியில் தோண்டிக் கொண்டிருந்தபோது அராமிக் மொழியில் " இஸ்ரவேலின் ராஜா " "தாவீதின் வீடு" என்கிற வாசகங்களை உள்ளடக்கிய கல்வெட்டு ஒன்றை கண்டெடுத்தார்கள். தாராளமயக் கொள்கையைச் சேர்ந்த பல விமர்சகர்கள் தாவீது ஒரு போதுமே வாழவில்லை. அப்படி ஒரு நபரே இருக்கவில்லை. அவர் இஸ்ரவேலின் வரலாற்றுச் சுவட்டில் கற்பனைக் கதாப் பாத்திரமாகவே கருதப்பட்டார் என்று சொல்கின்றனர். ஆனால், இந்த கண்டு பிடிப்புக்குப் பிறகு அவர்கள் இஸ்ரவேலின் மாபெரும் பாடகனாகிய தாவீதைப் பற்றி அவருடைய வரலாற்றைப் பற்றி வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகளை ஒத்துக்கொள்ளும்படியாக நிர்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள்.

❖ இஸ்ரேலிய அதிகாரிகளால் 5,50,000 டாலருக்கு நிகரான மதிப்பில் வாங்கப்பட்ட தந்தத்தாலான மாதுளம் பழம் ஒன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது இது சாலமோனுடைய தேவாலயத் லிருந்து கண்டெடுக்கப்பட்ட மத சம்பந் மான முதல் நினைவுச் சின்னமாகக் கருத படுகிறது. (1 ராஜா 6). இதில், " யெகோவா வின் தேவாலயத்துக்குச் சொந்தமா ஆசாரியர்களுக்குப் பரிசுத்தம் " என் எழுதப்பட்டுள்ளது.

❖ எபிரெயர்கள் கானானை மே கொண்டபோது, "ஆசோர்" பட்டண அழிக்கப்பட்டது என்று யோசுவா நூலி பார்க்க முடியும். இந்தப் பட்டணம் இஸ் வேலர்களால் தீக்கரையாக்கப்பட்ட (யோசுவா 11:10,11). இங்கு நடந்த அக வாராய்ச்சி, யோசுவாவின் காலத்தி உண்மையாகவே இப்பட்டணம் தீ வைத்து கொளுத்தப்பட்டதை உறுதி செய்கிறத பரிசுத்த வேதாகமத்தைப் பொய்யாக்கு முயற்சிகள் ஒருபுறம் நடந்தாலும், அக வாராய்ச்சிகள் வேதாகமத்தில் உண்மை தன்மையையும், அதன் துல்லியத்தையு மேலும் மேலும் உறுபடுத்துகிறது. இத "இந்தக் கல்லுகள் கூப்பிடும் " என் இயேசுவின் கூற்றை நினைவுபடுத் கிறது.




சாட்சியங்கள்

# தேவனிடத்திலிருந்து ஒரு புத்தகம்

## A BOOK FROM GOD

*Gary C. Hampton*




**ந**ாம் வேதாகமத்தை படிக்கத் தொடங்குவதற்கு முன்பாக அது தேவனுடைய வார்த்தை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி நாம் உணர்ந்து கொள்ளும்போது ஒரு சரியான மனப்பான்மையுடன் வேதாகமத்தைப் படிக்க அது உதவும்.

வேதாகமம் தன்னை தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஒன்றாகச் சொல்கிறது. பவுல் தீமோத்தேயுவிடம் இவ்விதமாகச் சொன்னார். " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது ". (2 தீமோ. 3:16,17). தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்பது மூல பாஷையாகிய, கிரேக்க பாஷையில் தேவன் "மூச்சு விட்டார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, தேவன் வேத வாக்கியங்களைப் பேசினார் என்று அது பொருள்படும். நாம் பேசும்போது எப்படி நம் குரல் வளையத்திலிருந்து வார்த்தைகள் வெளியே வருகிறதோ அதுபோல் தேவன் வேத வாக்கியங்களைப் பேசியிருக்கிறார்.

வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டதை அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்விதமாக விளக்குகிறார். " தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:21). எபிரெய எழுத்தாளர் இதை உணர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் தேவன் சொல்லியிருக்கிறார் என்று அடிக்கடி குறிப்பிடுகிறார். ஆனால், அவைகளை எழுதிக் கொடுத்தது மனிதன் தான் (எபி. 1:5,8; 5:5,6).

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைப் போலவே பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதை உறுதி செய்கின்றனர் (ஏசாயா 1:12,10,24; எரே. 1:1,2; 2:1; எஜே. 1:13; 1 தெச. 2:13; 2 பேதுரு 3:2). இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வசனங்களை ஏவப்பட்டதாகக் கருதி அவைகளை அதிகாரப் பூர்வமாகப் பிரயோகித்தார். (மத். 4:4,7,10). இயேசு இந்த பூமிக்கு வந்ததின் ஒட்டு மொத்த நோக்கமே பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுவதன் மூலமாக தேவனுடைய சித்தத்தை செய்து முடிப்பதுதான் (மத். 5:7,18; யோவான் 15:25). புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டுத்தான் எழுதினார்கள் என்று நம்பினார்கள் (அப். 1:15, 16; 4:25; 28:25-27; கலா. 3:16- 19).

ஆயினும், வெளிப்புற சாட்சியங்கள் இதற்கு ஆதாரமாக இல்லாத பட்சத்தில் உட்புற சாட்சியங்கள் அர்த்த மற்றதாகி விடும். உண்மையில், இத்தகைய காரியங்கள் அவைகளின் உண்மைத் தன்மையை சோதித்துப் பார்க்க நம்மை பலவந்தப்படுத்துகிறது. பல விஞ்ஞான உண்மைகளை மனிதன் அறிந்து, அதை ஏற்றுக்கொள்வதற்கு வெகு காலத்துக்கு முன்பாகவே அவைகள் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளபடியால், வேதாகமம் தேவனிடத்திலிருந்துதான் வந்தது என்பதை நாம் அறிந்து கொளள் முடியும். ஆதி. 1:11, 12, 21, 24,25 வசனங்களில் புல் பூண்டு, விருட்சங்கள், மச்சங்கள், பறவைகள், கால்நடைகள் மற்றும் பிற மிருகங்கள் குறிப்பிடப்பட்டு அவைகள் தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பித்து கனிகளைக் கொடுக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது இன்றும் எவ்வளவு உண்மையாயிருக்கிறது.

சமீபத்தில் தான் மருத்துவர்கள் பிறந்து எட்டு நாட்கள் ஆன ஒரு ஆண் குழந்தையின் இரத்தத்தில் ஒரு விசேஷப் பொருளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது காயங்களை குணப்படுத்த உதவுவதாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது (லேவி. 12:3). ஜார்ஜ் வாஷிங்டனுடைய நாட்களில் மருத்துவர்கள் ஒரு நோயாளியின் உடலில் இருந்து இரத்தம் கசிவது உடலில் உள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கி விடுவதாக நம்பினார்கள். இப்போது தான் மருத்துவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மோசே எழுதினது போலவே மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள் (ஆதி. 9:4; லேவி. 17:11,14).

நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்று துல்லியமாக தீர்க்க தரிசனங்கள் உரைக்கப்பட்டு அவைகள் அப்படியே நடக்க வேண்டுமென்றால் அந்த தீர்க்கதரிசனங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட தீர்க்க தரிசனம் அப்படியே நடந்தேறியதென்று பல உதாரணங்கள் உள்ளன. கிறிஸ்துவைப் பற்றி மட்டுமே தீர்க்கதரிசனங்கள் அவர் பிறப்பதற்கு சுமார் 400 லிருந்து 700 வருடங்களுக்கு முன்பே உரைக்கப்பட்டிருக்கின்றன. அந்த தீர்க்கதரிசனங்களில் துல்லியமாக இடம் பெற்றிருக்கிற தகவல்களை யாரும் யூகித்து எழுதியிருக்க முடியாது. அவருடைய பிறப்பின் இடமும், அவருடைய தாய் ஒரு கன்னிகையாக இருப்பாள் போன்ற உண்மைகளெல்லாம் மீகா. 5:2; ஏசாயா 7:14ல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. மத்தேயு ஆசிரியர் இயேசு பெத்லகேமில் ஒரு கன்னியினிடத்தில் பிறந்தார் என்று சொல்கிறார் (மத். 1:20-2:1). இயேசு



வெற்றிகரமாக எருசலேமுக்குள் பிரவேசித்தது சகரியா 9:9ல் முன்னறிவிக்கப்பட்டு மத். 21:1-5ல் நிறைவேறியது.

வேதத்தில் செய்யப்பட்டிருக்கும் அற்புத அடையாளங்கள் அதைச் செய்த தாசர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதைத்தான் நிரூபிக்கின்றன. மோசே தான் தேவனிடத்திலிருந்து வந்தவன் என்பதை இஸ்ரவேலர்களுக்கு நிரூபிக்கும்படியாக தேவன் குறிப்பிட்ட சில அடையாளங்களை மோசேக்குக் கொடுத்தார் (யாக். 4:1,5). எகிப்து தேசத்தின் மீது பத்து வாதைகளைக் கொண்டு வரும்படியாக நடப்பிக்கப்பட்ட அற்புதங்கள் இவ்வுலகிற்கு ஒரே தேவன் தான் இருக்கிறார் என்பதையும், அந்தத் தேவன் மோசேயோடும், தம்முடைய பிள்ளைகளோடும் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்காக செய்யப்பட்டன (யாக். 7:5,17; 8:10,14-29; 10:2; 11:7; 13:3; 14:14). கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கப்படும்படியாக மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார் (ரோமர் 1:5). அப்போஸ்தலர்கள் செய்த அற்புத அடையாளங்களினால் அவர்கள் தேவ வழி நடத்துதலினால்தான் பேசினார்கள் என்பது தெளிவாகிறது (மாற்கு 16:14-20; எபி. 2:34).

இன்னும் வேதாகமம் நம்பகத்தன்மை வாய்ந்தது என்பது நிரூபிக்கப்படும்படியாக வேறுசில பகுதிகளை கூட நாம் ஆராய்ந்து பார்க்கக் கூடும், அவைகளாவன : வேதாகமத்தின் வரலாற்றுத் துல்லியம்; பல்வேறுப்பட்ட மொழிகளில் சுமார் 40 ஆசிரியர்களால் 1600 வருடங்களுக்கும் மேலாக எழுதப்பட்ட 66 புத்தகங்களின் ஒற்றுமை; புவியியல் துல்லியம்; செய்தியின் மகாமேன்மை. ஆயினும், வேதாகமம் மறுக்க முடியாத ஆதாரங்களுடன் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்று சொல்லிக் கொள்கிறதை என்னால் அப்படியே நம்ப முடிகிறது. ❖

## இயேசுவின் போதனை ஏன் வல்லமையாக இருந்தது?

1. அவர் ஜனங்களை மரியாதையோடு நடத்தினார் (மாற்கு 10:46,52)
2. அவர் வெளிப்படையாகப் பேசினார் (யோவான் 3:1,3; மத். 13; மத். 4:19; யோவான் 4:1,4).
3. அவர் இரக்கம் நிறைந்தவராய் பேசினார் (மாற்கு 8:2; லூக்கா 13:34)
4. அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார் (மத். 8:2,3; மத். 19:14; மாற்கு 10:21)
5. அவர் மனிதத் தேவைகளை சந்தித்தார் (யோவான் 9:1,38)
6. அவர் அதிகாரம் உடையவராகப் பேசினார் (மத். 7:28,29; 4:4,10)
7. அவருடைய போதனையும், வாழ்க்கையும் ஒரே மாதிரியாக இருந்தது (எபி. 4:15; யோவான் 8:29,46; 1 பேதுரு 1:19)

## சாட்சியங்கள்

# மரண முடிவுக்கு அழைத்துச் செல்லும் பாதையிலிருந்து தப்பித்தல்

## *Escaping The Dead-End Path of Agnosticism*

***Garell L. Forehand***

“ **வா**ழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் அறிவு என்பது முக்கியமான தாயிருக்க, நாம் நிச்சயமாக எதையும் அறிந்து கொள்ள முடியாது என சாதாரணமாக ஒரு தாக்குதல் மனப்பான்மையை மத உலகம் கையாண்டு வருகிறது. தேவன் இருக்கிறாரா என்கிற கேள்வியாகட்டும், எல்லோரும் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள முடியாது என்று மறைமுகமாகச் சொல்வதிலாகட்டும் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் நாம் தாக்குதலுக்குட்படுத்தப்படுகிறோம் ”.

தேவனுடைய சித்தம் மனிதப் புரிந்து கொள்ளுதலுக்குக் கட்டுப்பட்டதல்ல என்பதை வேதாகமம் தெளிவாக்குகிறது. தேவனுடைய சத்தியம் மனிதப் புரிந்து கொள்ளுதலுக்கு கட்டுப்பட்டதென்றால் மனிதனுக்கான உண்மையான அழைப்பு சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள் என்பதற்குப் பதிலாக “ சத்தியத்தை திட்டமிடுங்கள் ” என்பதாகத்தான் இருக்கும். ஆயினும், தேவன் தம்முடைய சத்தியத்தை நாம் அறிய வேண்டுமென்று கட்டளையிடுகிறார். அந்த சத்தியம் நமக்கு முன் காணும் பொருளாக உள்ளது. நாம் சத்தியத்தை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அது நமக்கு முன்பாக இருக்கிறது. சாலொமோன் ஞானி தேவ ஆவியினால் ஏவப்பட்டு இவ்விதமாக நமக்குச் சொல்கிறார். “ மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் ” (நீதி. 14:12). இயேசு தம்முடைய அப்போஸ்தலர் களிடம் இவ்விதமாகச் சொன்னார். “உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குக் கொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும் ” (யோ. 16:2). “ தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் ” சொல்லுகிறவர்கள் மீது தேவன் மிகப்பெரிய சாபத்தை வழங்கி இருக்கிறார் (ஏசா. 5:20).

### நம்மால் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்

தேவனுடைய சத்தியத்தைப் புரிந்து கொள்ள நம்மெல்லாருக்கும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் இருப்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது என தத்துவ ஞானத்தின் அடிப்படையில் ஆதரிப்பவர்கள் சுய முரண்பாடான கருத்தை உறுதி யாக பிடித்து கொள்ள முயற்சிக்கிறார்கள். அவ்விதமான சிந்தை, “ நிச்சயமாக என்னால் எதையும் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியாது” என்று ஒருவர் அறிவிக்க அவனை வற்புறுத்துகிறது. இங்கே பிரச்சனை என்ன என்பதை காண்கிறீர்களா? அவர் சரியாக இருந்தால், உண்மையில் தவறு செய்கிறார். தனிப்பட்ட உணர்வுகளால் ஈர்க்கப்படாத சத்தியம் தம்மூலமாக வந்தது என்பதை இயேசு நமக்கு அறிவித்த போது மேலே சொல்லப்பட்ட சிந்தையை அவர் தெளிவாகவே தகர்த்துப் போட்டார் (யோ. 1:17).



அதைத்தான் அவர் தம்மை விசுவாசிப்பவர்களைப் பார்த்தும் சொன்னார். “நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்றார். (யோ. 8:31,32), யாரோ ஒருவர் நம்மால் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாது என்று சொல்லும் போது, இயேசு கிறிஸ்துவோடு நேரடியாக முரண்பட்ட நிலையிலே தம்மை வைத்துக் கொள்கிறார். அந்த உண்மையானது இந்த காரியத்தைக் குறித்து ஒவ்வொரு வருடைய மனதை மாற்ற வேண்டும், ஆனால் துக்ககரமாக எப்போதும் அப்படி நடப்பதில்லை.

### ஒரு விஷயத்தைப் பல விதங்களில் புரிந்து கொள்வது பொருத்தமற்றதாயிருக்கும்

தேவன் இப்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது என்கிற ஒரு தலைகீழான நிலை இன்று மத உலகை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்து ஒருவரை இவ்விதமாக சொல்லத் தூண்டுகிறது, “ நல்லது, நீங்கள் இவ்விதமாகப் புரிந்து கொள்கிறீர்கள், நான் இவ்விதமாகப் புரிந்து கொள்கிறேன். அங்கே விஷயம் என்ன வென்றால் நாம் எவ்விதமாகப் புரிந்து கொண்டிருக்கிறோமே அதை வைத்துக் கொண்டு நேர்மையாக செயல்படுவது தான் என்று சொல்வார்கள் ”. இந்தக் கருத்தை நாம் அவசர அவசரமாகப் பார்த்தால் கூட தேவன் நமக்கு தனிப்பட்ட உணர்வுகளால் ஈர்க்கப்படாத சத்தியத்தைத் தந்திருக்கிறார் என்பது, நம்மால் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. அது உண்மையாக இருந்து, நாம் வேதாகமத்தை உண்மையான முறையில் அணுகினால், நம்மில் ஒருவரும் ஒருபோதும் தவறிழைக்க முடியாது! நாம் ஏற்கனவே அவ்விதமாக சிந்திப்பதின் தவறைப் பார்த்து விட்டோம்.

காரியத்தின் உண்மை இது தான் தானிப்பட்ட உணர்வுகளால் ஈர்க்கப் படாத சத்தியத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரே வழி தான் இருக்கிறது. அதை உண்டாக்கின வரால் ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட வழி அது தான். அதல்லாமல் ஒருவர் வேறொருக் கருத்தை எவ்வளவு உண்மையான முறையில் சொன்னாலும் அது தவறான புரிந்து கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விதைக்கிறவனுடைய உவமையில் இயேசு இவ்விதமாக விளக்கினார். “ ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணரா திருக்கும் போது, பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதை பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் ” என்றார் (மத். 13:19,23) வசனத்தினால் எதைச் செய்யலாம் என தீர்மானிப்பதற்கு முன்பாக எல்லாவற்றையும் சோதிக்க அவருடைய வார்த்தையை பயன்படுத்தி நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டு மென்று தேவன் எதிர்பார்க்கிறார். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்றும் தேவன் கட்டளையிருகிறார் (I தெச. 5:21,22). எனவே தான் கிறிஸ்தவர்கள் “ மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ள வேண்டுமென்று பவுல் கட்டளையிட்டார் ” (எபே. 5:17).

### முன்னுரை :

அறியாமையில் பெருமைப்பாராட்டுகிற கூட்டம் செல்லும் பாதையை நீங்கள் பின்பற்றுகிறீர்களா; அதிகம் பயணிக்காத சத்தியப் பாதையில் பயணிக்க முயற்சி செய்திருக்கிறீர்களா? தேவன் இருப்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது என மரண முடிவுக்கு அழைத்துச் செல்லும் பாதையிலிருந்து நம்மைத் தப்பிப்பாராக. ❈

# வேதாகமத்தைப் படிக்கும் போது

## IN BIBLE STUDY

*John Thiesen*




வேதாகமத்தின் மீதான நம் மனோபாவம் நாம் அதிலிருந்து எவைகளை கற்றுக்கொள்கிறோமென்பதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பலர் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும் போது எந்த இரண்டு பேரும் வேதாகமத்திலிருந்து ஒரே காரியத்தைப் பெற முடியாது அல்லது இருவரும் ஒரே காரியத்தைப் புரிந்து கொள்ளமுடியாது என்று பலர் சொல்கிறார்கள். இது ஒரு தவறான மனோபாவம் இது தொடக்கத்திலிருந்தே நாம் வேதாகமத்தைப் படிப்பதில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

சரியான மனோபாவம் என்னவென்றால், தேவன் தம்முடைய வார்த்தையிலிருந்து ஒரே விதமான செய்தியைத் தான் எல்லோரும் பெற்றுக் கொள்ள வேண்டு மென்று விரும்புகிறார். நாம் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பிக்கும் போதே சத்தியத்தை நாம் அறிந்து கொள்வோமோ என்கிற சந்தேகத்துடன் படிக்கும்போது தேவனுடைய புத்தகத்தின் பக்கங்களின் வரிகளுக்கு இடையில் நமக்குப் புரியாத, இரகசியமான கருத்துக்கள் இருப்பது போன்றே தோன்றும். அதன் விளைவாக, வெளிப்படையான சத்தியத்திற்குப் பதிலாக மறைவான அர்த்தங்களை நாம் தேடிக் கொண்டிருப்போம். இது தேவன் நம்மை தம்முடைய வார்த்தைகளைக் கொண்டு சிக்க வைக்க முயற்சிக்கிறார் என்று நினைக்கும் அவ நம்பிக்கையின் மனநிலையாகும். இது மிகப்பெரிய குழப்பத்தில் தான் முடியும்.

### தேவன் நாம் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றே விரும்புகிறார்.

நாம் சத்தியத்தை அறிந்து, விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவர் தம்மைப் பற்றியும், தம்முடைய குமாரனைப் பற்றியும்



வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற காரியங்களை அறிந்து அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறார். மேலும், நாம் தேவன் தரும் பாவ மன்னிப்பின் ஆசீர்வாதங்களையும், நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். அவர் நம் வழிகளில் தடைக்கற்களை வைத்து நம் கண்களிலிருந்து சத்தியத்தை மறைக்கும் தேவனல்ல. நம்மில் எத்தனை பேரை அவரால் முட்டாளக்க முடியும் அல்லது ஆச்சரியப் படுத்த முடியுமென்று எண்ணி நம்மோடு விளையாடும் தேவனல்ல அவர். வேதாகமம் ஒருவரால் புரிந்து கொள்ள முடியாத இரகசியம் என்று ஒத்துக்கொள்ளும் போது பிசாசு எவ்வளவாக சிரிப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள்.

### தேவன் நம்மிடம் தம்முடைய வார்த்தை மூலமாக பேசிக் கொண்டிருக்கிறார்

நாம் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பிக்கும் போது முன்பாக தேவன் அதன் மூலம் நம்மிடம் பேசுகிறார் என்கிற மனநிலையோடு செல்ல வேண்டும். அதில் அடங்கியிருக்கின்ற வார்த்தைகள் மனித அறிவினாலோ அல்லது மாமனிதர்களின் எண்ணங்களாலோ ஆனதல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதாகமம் திறமைமிக்க நாடக ஆசிரியர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் அல்லது கவிஞர்களின் வேலைப்பாடல்ல. வேதாகமம் எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் தினசரி வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சாதாரணமானவர்கள் தான். ஆனால், எல்லோருக்கும் ஒரு காரியம் பொதுவாக இருந்தது. தேவன் அவர்கள் மூலமாக உலகத்தோடு பேசத் தெரிந்து கொண்டதுதான் அந்த பொதுவான காரியம். தேவன் தம்முடைய எண்ணங்களை வெளிப்படுத்த எந்த வார்த்தைகளைப் பயன்படுத்த விரும்பினாரோ அவைகளை ஆச்சரியமூட்டும் வகையில் அவர்களுடைய இருதயங்களில் வைத்தார். " தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப் பட்டுப் பேசினார்கள் " (2 பேதுரு 1:21). இந்த மனப்பான்மை நமக்கிருந்தால் தேவன் இந்த தீர்க்கதரிசிகள் மூலமாக பேசும் வார்த்தைகளுக்கு நாம் ஆழ்ந்த மரியாதை கொடுப்போம்.

### வேதாகமம் அதிகாரமுள்ளது

வேதாகமத்தின் மீது நாம் கொண்டிருக்க வேண்டிய மற்றுமொரு மனப்பான்மை அது அதிகாரமுள்ளது என்பதுதான். அதாவது, நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரே மார்க்கத்தைத்தான் அது பேசுகிறது என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வழியல்லாமல் தேவனை அடைவதற்கோ, நித்திய ஜீவனை அடைவதற்கோ வேறு வழியில்லை. இந்த மனப்பான்மை நமக்கில்லையென்றால், நாம் கள்ளப்போதகர்களின் வசமாகி தேவனிடத்திலிருந்து நம்மை வழிவிலகச் செய்கிற தவறான பாதையில் மிக எளிதாக வழிநடத்தப்படுவோம். ❖

கர்த்தர் நமக்கு வேதாகமத்தையும், மூளையையும் தந்திருக்கிறார்.
இரண்டையும் பயன்படுத்த வேண்டும் என்று
நம்மிடம் எதிர்பார்க்கிறார்

# பதிவு செய்யப்படும்படியாக


## FOR THE RECORD

*Maxie B. Boren*

● மனிதர்கள் " பல சபைகள் " இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், **வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி** ஒரே சபைதான் உண்டு என்று வேதாகமம் போதிக்கிறது; (மத். 16:18, எபே. 1:22,23; எபே. 4:4).

● மனிதர்கள் " இரட்சிப்பு தேவனுடைய கிருபையினால் மாத்திரம் கிடைக்கிறதென்றும் மனிதனுடைய பங்குக்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்று சொல்கிறார்கள். ஆனால், பதிவு **செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி** வேதாகமம் மனிதப் பங்கின் முக்கியத்துவத்தைப் போதிக்கிறது; (மத். 7:21,27; தீத்து. 2:11,12; அப். 2:37,38; அப். 10: 34,35; யாக். 1:22,25; 1 கொரி. 1:58).

● மனிதர்கள் " இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரம் வருகிறதென்றும் வேறொன்றும் தேவையில்லை" என்றும் சொல்கிறார்கள். ஆனால், பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி வேதாகமம்





கீழ்ப்படிகிறவர்களை கிறிஸ்து இரட்சிக்கிறார் என்று போதிக்கிறது (எபி. 5:9; 1 பேதுரு 1:22). மேலும், வேதாகமம் அவருக்கு கீழ்ப்படியாதவர்கள மீது அவருடைய கோபாக்கினை வரும் என்று போதிக்கிறது (ரோமர் 2:8; 2 தெச. 1:8,9).

● மனிதர்கள் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்றும், ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்புக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றும் சொல்கிறார்கள். **ஆனால், பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி** வேதாகமம் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் அவசியம் என்று போதிக்கிறது (மாற்கு 10:15,16; அப். 2:38; 22:16; 1 பேதுரு 3:20,21).

● மனிதர்கள் " ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எப்போதுமே இரட்சிக்கப்பட்டவர்கள் " என்று சொல்கிறார்கள், **ஆனால், பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி** வேதாகமம் கிறிஸ்தவர்கள் வேதாகமத்திலிருந்து விலகி, கடைசியாக இழந்து போவதற்கு வாய்ப்புண்டு என்று போதிக்கிறது; (1 கொரி. 10:12; 1 தீமோ. 2:19,20; கலாத். 5:4; எபி. 6:4,6; 2 பேதுரு. 2:20,22; மத். 13:4,42).


● மனிதர்கள் ஒரு நபர் எதை விசுவாசிக்கிறாரோ, ஏப்படி ஆராதிக்கிறாரோ, எதைப் போதிக்கிறாரோ அது முக்கியமல்ல என்று சொல்கிறார்கள், " ஆனால்,



பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளின்படி வேதாகமம் அவைகளெல்லாம் முக்கியமானவைகள் என்று போதிக்கிறது. (யோவான் 8:31,32; யாக். 1:21; யோவான் 4:23,24; மத். 15:6,9; 1 தீமோத். 4:16; அப்.26:25).

- மனிதர்கள் ஜனங்கள் எப்படி வாழ விரும்புகிறார்களோ அப்படியே வாழலாம் அது ஒன்றும் முக்கியமல்ல. மேலும், ஒருவர் எத்தனை முறை திருமணம் பண்ணினாலும், விவாகரத்து செய்தாலும், விபச்சாரம், வேசித்தனம், ஓரினச் சேர்க்கை, சூதாட்டம், மதுபானம், போதை வஸ்துக்கள் போன்ற வற்றில் மூழ்கினாலும் அது ஒரு பொருட்டே அல்ல என்று சொல்கிறார்கள். **ஆனால், உண்மைகள் பதிவு செய்யப் படும்படியாக** வேதாகமம் வித்தியாசமாக போதிக்கிறது; (மத். 19:3,9; 1 கொரி. 6:9,10; ரோமர் 13:12,14; எபே. 5:3,11; கலா. 5:19,21; 6:7,8).

- ஆம், மனிதர்கள் பல வகையான காரியங் களைச் சொல்கிறார்கள்; மனிதர்கள் பெரும் பாலான நேரங்களில் காரியங்களை உரு மாற்றி, திரித்துப் பேசுகிறார்கள், சில வேளை களில் அவர்கள் பொய்ப்பேசுகிறார்கள், தூஷணம் செய்கிறார்கள். **ஆனால், உண்மைகள் பதிவு செய்யப்படும்** படியாக தேவனுடைய வார்த்தை என்றென்றும் மாறாததாக, உண்மை யாக இருக்கிறது. அதனால், நாமெல்லா ரும் நியாயந்தீர்க்கப்படுவோம்; (மத். 4:4;24:35; அப். 20:32; எபி. 4:12; யோவான் 12:48). ✽







# நமது பாவங்களைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்?

## About Our Sins, What should we do?

**P.C. Philemon Raja**

எபி. 4:11-16 வசனங்களிலிருந்து பாவங்களை குறித்தும், நமது பாவங்களை குறித்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை குறித்தும் தியானம் செய்வோம்.

பிரியமானவர்களே! தேவனு டைய பிள்ளைகளின் வாழ்வில் பாவம் பயங்கர விளைவைக் கொண்டு வருகிற தாக இருக்கிறது. பாவம் நமது இருதயத்தை கடினப்படுத்துவதாகவும், நமக்குள் அவிசுவாசத்தை உண்டாக்குவதாகவும் இருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இஸ்ரவேலர்கள் ஆறு இலட்சம் பேரும் எகிப்தில் இருந்து கானானுக்குள் நுழைய முடியாமல் செய்து விட்டது. (எபி. 4:11) "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின் படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையி னாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் ".

இப்படிப்பட்ட நிலைமை கிறிஸ்தவர் களாகிய நம்மீதும் வரக்கூடும். ஏனெனில், பாவம் பயங்கரமானது. இந்த செய்தியின் வழியாக தேவபிள்ளைகளாகிய நாம் பாவத்தைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்று அறிய முயலுவோம்.

***1. பாவங்களை நாம் மறைக்க முடியாது.***

நம்மில் அநேகர் பாவங்களை மறைக்கின்றோம் (யாருக்கும் தெரியக் கூடாமல்), மறுக்கின்றோம் (நான் செய்ய வில்லை) அல்லது சாக்குப்போக்குகளை (நான் ஏன் செய்தேன் தெரியுமா?) கூறுகின்றோம். ஆனால், பாவங்களை மறைப்பது சாத்தியமற்றது. வசனம் பாவங் களை வெளிப்படுத்தும்.

எபி. 4:12, தேவனுடைய வார்த்தை யானது ஜீவனும் வல்லமையும் உள்ள தாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமா வையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்க உருவக்குத்துகிற தாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிற தாயும் இருக்கிறது. இஸ்ரவேலர்கள் வசனத்தை கவனிக்க மறந்தது அவர்கள் விழுந்துபோக காரணமானது. தேவனு டைய வார்த்தை ஜீவனும் வல்லமையும் உள்ளதாக இருக்கிறது. வல்லமை என்பது ஆற்றல் உள்ளது. அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும். (ஏசா. 55:11).

தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம். கத்தி என்பது நோயாளியின் உடலின் உள்ளே இருப்பதை ஆப்ரேஷன் மூலம் அகற்ற உதவும். வேத வசனமும் அவ்வாறே நமக்குள் இருக்கும் பாவங்களையும் வெளியே கொண்டு வரும். கர்த்தருடைய வசனம் எல்லா விஷயங்களையும் வெளியரங்கமாக்கு கிறது. நாம் திறந்த மனதுடன் படித்தால், நமது உண்மையான இயல்பை நாம் காணமுடியும் (யாக். 1:22,25).

***2. தேவன் எல்லாவற்றையும் அறிகிறார்***

நாம் பாவம் செய்யும் போது தேவன் அதனை அறிகிறார். எவர் ஒருவரும் தேவனிடமிருந்து தம்மை ஒளித்துக் கொள்ள முடியாது. (எபி. 4:13) "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் ".

அடிபட்ட உடலில் வடு (தழும்பு) இருக்கிறது. உடை அந்த தழும்பு வெளியே தெரியாதபடி மறைக்கிறது. உலகத்திற்கு வேண்டுமானால் நம் உடை நமது வடுவை மறைக்கலாம். ஆனால், உடையை களைந்தவுடன் அந்த வடு நமக்கு தெரியும். நாம் நமது பாவங்களை உலகத்திற்கு மறைக்கலாம். ஆனால், எல்லாம் அறிந்த தேவனிடமிருந்து மறைக்க முடியாது. நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு இரக்கத்திற்கு தேவனிடம் திரும்ப வேண்டும்.

***3. பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு***

நாம் நமக்காக இரக்கப்படும் பிரதான ஆசாரியரைக் கொண்டுள்ளோம் (எபி. 4:15). " நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவ நிலையை மாற்ற தக்கதான பிரதான ஆசாரியராக இருக்கிறார்.

மேலும், இவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்தியமான பிரதான ஆசாரியராயிருக்கிறார். பாவமில்லாத, நம் மீது இரக்கம் கொண்டு பரிதபிக்கிற பிரதான ஆசாரியராக இயேசு நமக்கு இருக்கிறார் என்பது மிகவும் நம்மை பெலன் கொள்ளச் செய்வ தாயிருக்கிறது.

***4. நாம் தைரியத்துடன் கிருபாசனத்தண்டை சேரலாம்***

நாம் தைரியத்துடன் அவருக்கு முன்பாக வர முடியும். (எபி. 4:16) "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் ". *ஒரு நாளில் நியாயாசனமாக போகும் இயேசுவின் அரியணை இன்று நமக்கு கிருபாசனமாக உள்ளது.* ஆகையால், நாம் இரக்கத்தை பெறவும், சகாயம் செய்யும் கிருபையை அடையவும் கிட்டி சேர்வோம்.

ஒருவர் இரட்சிக்கப்பட தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபை தேவை; மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் நிலைத்திருக்கவும் கிருபையும், இரக்கமும் தேவைப்படுகிறது. தேவையான நேரத்தில் நமக்கு உதவ அவரிடம் நெருங்கிச் சேர்வோம்.

***இறுதியாக...***

பிரியமானவர்களே! பாவம் பயங்கரமானது, தேவனுடைய வார்த்தை நமது பாவங்களை வெளிப்படுத்தும். தேவனும் நம்முடைய பாவங்கள் எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். ஆயினும் நமக்கு உதவி செய்ய பிரதான ஆசாரியராக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்று நித்தியத்தில் அவரோடு வாழ, இன்றே மனந்திரும்பி நம்முடைய வழிகளை அவருக்கு நேராக நேர்ப்படுத்துவோம். இரக்கம் நிறைந்த தேவன் நமக்கு உதவி செய்வாராக. ஆமென். ❃





# நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது!

***K. Pandian***

**அ**ன்பின் ஐக்கியத்திற்குரிய தேவனுடைய பிள்ளைகளே. நம்முடைய வாயின் வார்த்தைகளை தேவன் கவனிக்கிறார் என்றும் அதற்கான ஞாபக புஸ்தகம் ஒன்று தேவனுக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது என்றும் வேதம் தெளிவாகச் சொல்கிறது (மல். 3:16). நம் விசுவாச வாழ்க்கை வெற்றிகரமாக அமைய நம் வாயின் வார்த்தைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றது. எனவே தான் சங்கீதக்காரன், " கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும்... *உமது சமூகத்தில் பிரியமாய் இருப்பதாக என்று விண்ணப்பித்து பாடுகின்றான். நம் வாயின் வார்த்தைகளை நாம் சரியாக உபயோகிக்காவிட்டால் அந்நியரிடம் சிக்குண்டு பிடிபடும் ஆபத்துண்டு* " (நீதி. 6:2). மேலும், நம் ஆண்டவரின் கூற்றுப்படி நம் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். எவையெல்லாம் வீணான வார்த்தை? விசுவாசத்தின் அடிப்படையில் பேசாத நம் வார்த்தைகளே வீணான வார்த்தைகளாகும். எப்படி ஒரு அரசியல் கட்சியில் இருந்து கொண்டு அக்கட்சிக்கு எதிராக பேசினால் நடவடிக்கைகள் எடுக்கிறார்களோ அதே போல விசுவாசிகள் என்ற பெயரில் நாம் சபையில் இருந்து கொண்டு அவிசுவாசமான (வீணான) வார்த்தைகள் பேசும் போது நாம் தவறுகிறோம்.

வேதாகமத்தில் நமக்கு போதனையாக எழுதப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் தன் மகனை பலியிட தேர்ந்த அந்த இக்கட்டான சூழ்நிலையில் அவன் வார்த்தை இப்படியாக இருந்தது. " *என் மகனே தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்* " (ஆதி. 22:8). ஆகவே, நமக்கு முன்பாக இருக்கும் இக்கட்டான சூழ்நிலையைக் கண்டு நாம் துவண்டு விடாமல் நமக்குள் இருக்கும் விசுவாசத்தை *நம் வாயின் வார்த்தைகளினால் வெளிப்படுத்த வேண்டும்.* அப்படி இராவிடில் நம் விசுவாசம் செத்ததாய் இருக்கும் என்று யாக்கோபு சொல்வதை நினைவு கூருவோம். சாதாரணமாக, இவ்வுலகில் பெரிய பதவிகளில் இருக்கும் அதிகாரிகளின் பிள்ளைகள் தங்களுக்கு ஏதாகிலும் சிக்கலோ, ஆபத்தோ நேரிடும் போது தங்கள் தகப்பன் பெயரை சொல்லித் தப்புவதை நாம் காண்கிறோம். அப்படியே நமக்கு நேரிடும் சூழ்நிலைகளிலும் நாம் நம் தகப்பனாகிய தேவனை நினைவு கூர்ந்து விசுவாசத்தினால் உலகை ஜெயிக்க வேண்டும். *நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிப்பார்* என்று உங்கள் நாவு உங்கள் பிரச்சனைகளின் மத்தியில் உச்சரிக்க வேண்டும்.

கானான் தேசத்தை வேவுபார்த்து திரும்பினவர்கள் எதிர்மறையாக பேசி ஜனங்களைக் கலங்கடித்தபோது, காலேப் என்ன சொன்னான்? *கர்த்தர் என்னோடு இருப்பாரானால் கர்த்தர் சொன்னபடி அவர்களை துரத்தி விடுவேன் என்றான்* (யோசுவா 14:12). எனக்கன்பான தேவ ஜனமே, தற்சமயம் உனக்கு முன் நிற்கும் அந்த பிரச்சனையைக் கண்டு கலங்காதே. காலேபை போல தேவன் சொன்ன வார்த்தைகளை விசுவாசத்தோடே நினைவுகூர்ந்து பேசு. நம் வாயின் வார்த்தைகள் சந்தேகமாகவோ, பயத்தை

வெளிப்படுத்தும் சொற்களோ இருக்கக்கூடாது. ஏனெனில், நாம் விசுவாசிகள் இவ்வுலகில் மாம்சத்தில் வந்த இயேசு ஜனங்களின் அவிசுவாசத்தைக் கடிந்து கொண்டார். விசுவாசத்தோடே அவரிடம் வந்தவர்களின் " வார்த்தைகளை " கவனித்து உன் விசுவாசத்தின்படியே " உனக்கு ஆகக்கடவது " என்றார். அதே தான் உன் வாழ்க்கையிலும் நடக்கும் என்பதை மறவாதே. தேவன் சொன்ன வார்த்தைகளை நினைத்து, நான் " தாழ்ச்சியடையேன், எனக்கு ஒரு *நன்மையும்* குறைவுபடாது என்ற வகையில் உன் பேச்சு அமையுமானால் உன் வாழ்க்கை வெற்றிகரமாக மாறும். தேவனை அதாவது, இஸ்ரயேல் ஜனமும், உலக ஜனமும் பயத்தோடே அணுகின அந்த பரலோக தேவனை; உன்னுடைய பிதாவாக, அப்பாவாக உறவாடும்படி செய்தவ ரல்லவா நமதாண்டவர் இயேசு? ஆதலால் நம் பிரச்சனைகளைக் கண்டு சோர்ந்து போகாமல் தைரியமாகச் சந்திக்க வேண்டும் (எபி. 4:16).

தற்சமயம் உன்னிடம் ஒன்றும் இல்லையென்றாலும் உன் தேவன் உன்னோடே இருக்கிறார் என்பதை மறவாதே. பஞ்ச காலத்தில் "எலியா"வை சாறிபாத் என்னும் ஊருக்கு அனுப்பி போஷித்த அதே தேவன் அதே வல்லமையோடும், இரக்கத்தோடும் உன்னோடே இருக்கிறார் என்று விசுவாசி! எலிசாவை சுற்றிலும் சூழ்ந்து கொண்ட பெரிய சேனையைக் கண்டு பயப்படாத அவன் தன் வேலைக்காரரைப் பார்த்துச் சொன்னது என்ன? " *பயப்படாதே அவர்களோடு இருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடு இருக்கிறவர்கள் அதிகம் என்றான்* " (2 ராஜா 6:16). ஆக, உன் வாயின் வார்த்தைகள் உன் வாழ்க்கையில் வெற்றியை உண்டாக்கும் என்பதை அறிந்து கொள். இயேசு சொன்னார், "*உன் வார்த்தைகளினாலே நீ நீதிமான் என்றோ அல்லது குற்றவாளி என்றோ தீர்க்கப் படுவாய்* " (மத். 12:37). நாம் அனைவரும் இயேசுவின் ரத்தத்தினால் நீதிமான்களாக ஆக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 5:9). ஆகவே, தாவீதை போல நம் முன் இருக்கும் பிரச்சனைகளாகிய கோலியாத்தைப் பார்த்து " *என் தேவன் தப்புவிப்பார்* " என்று பேசு (1 சாமு. 17:37). ஏனெனில், சிங்கத்தைப் போல, கரடியைப் போல ஏற்கனவே உன் வாழ்க்கையிலும் குறுக்கிட்ட அநேக பிரச்சனைகளில் தேவன் உன்னோடே இருந்து அவைகளை ஜெயிக்கும்படியான பெலனை தேவன் உனக்கு கொடுத்திருக்கிறார். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் " என்றார் இயேசு வானவர். " *என் இருதயத்திற்கு ஏற்றவன்* " என்று தேவனால் சொல்லப்பட்ட தாவீதின் இருதயம் எப்படிப்பட்டது? " *கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்* " (சங் 138:8). என்ன ஒரு நம்பிக்கையான விசுவாச அறிக்கை தாவீதின் இருதயத்திலும் நாவிலும் இருந்தது என்று பாருங்கள். நாமும் அந்த நம்பிக்கையை இருதயத்தில் வைத்து வாயினால் அறிக்கை செய்வோம் ரோமர் 10:8-10 ஆசீர்வாதம் பெறுவோம் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையும், சமாதானமும் உங்களோடிருப்பதாக. ஆமென்.

**நீங்கள் எதற்காக நிற்கிறீர்களோ, அதில் தைரியமாக, உறுதியாக இருங்கள், ஆனால், எதற்காக நீங்கள் விழுந்து போவீர்களோ அதிலே ஜாக்கிரதையாய் இருங்கள்.**





# ஜெபத்தின் மனிதபக்கம்

## The Human Side of Prayer

***Ancil Jenkins***



" **News Week** " என்கிற ஆங்கிலப் பத்திரிக்கையின் சமீபத்திய தகவல்கள் என்னைக் கிட்டத்தட்ட கீழே விழச் செய்துவிட்டது. ஜெபத்தைப் பற்றிய செய்தி அப்பத்திரிகையின் முதல் பக்கத்தி லேயே வந்தது நான் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. அக்கட்டுரை சில சுவாரஸ்ய மான உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. அப்பத்திரிக்கையில் எழுதப்பட்டிருந்த காரியங்கள் ஆச்சரிய மாக இருந்தன. ஜெபம் என்பது அமெரிக்காவில் பிரபலமான செயல்பாடு களில் ஒன்றென்றும், மக்கள் தொகையில் 78% மக்கள் வாரத்தில் ஒருமுறை ஜெபிக் கிறார்களென்றும், 54% மக்கள் தினமும் ஜெபிக்கிறார்களென்றும் திடுக்கிடும் தகவல்கள் அப்பத்திரிக்கையில் வெளி வந்தன. அதில் மேலும் ஆச்சரியம் என்ன வென்றால், நாத்திகர்களில் ஐந்தில் ஒருவர் ஜெபிப்பதாக தகவல் வெளியானது தான். அந்தப் பத்திரிகை எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தது.

ஜெபத்தைப் பற்றிய தகவல்கள் போன்றே, ஜெபத்திற்கான காரணங்களும் சுவாரசியமாக இருந்தது. சிலர் தேவன் இருப்பதை மனப்பூர்வ மாக விசுவாசித்து, அவர் ஜெபத்திற்கு பதிலளிப்பார் என்று நம்புகிறார்கள். மற்றவர்கள் துன்பம் மற்றும் ஆபத்துக் காலங்களில் ஜெபிக் கிறார்கள் சிலருக்கு ஜெபம் என்பது வாழ்க்கையில் அர்த்தத்தையும், அமைதி யையும் கொண்டு வரும் உளவியல் உடற்பயிற்சியாயிருக்கிறது என்றும் அந்த ஆய்வறிக்கைத் தெரிவிக்கிறது. நம் நாட்டின் ஆவிக்குரிய நிலை பற்றி கவலைப் படும் நமக்கு பலர் அநேகமாக பெரும் பாலானோர் தங்கள் தவறான வாழ்க்கை யினால் உண்டான காயங்களைக் குணப் படுத்த தேவனை நோக்கிப் பார்ப்பது உற்சாகமளிக்கிறது.

அக்கட்டுரையில் கண்டுகொள் ளாமல் விடப்பட்டிருந்தது ஜெபத்தின் மனிதப் பக்கம் தான். தேவனுடைய வல்லமையையும், இறையாண்மையை யும் ஒருவர் ஏற்றுக் கொண்டாலும் கூட ஜெபத்தில் மனிதனுக்கு இன்னும் பொறுப்பு இருக்கிறது. அவற்றுள் சிலவற்றை யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார்.

***ஜெபம் விசுவாசத்தில் வேரூன்றியிருக்கிறது***

ஓவர் ஜெபிக்கும்போது விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் (யாக். 1:6). ஜெபம் மேலெழுந்தவாரியாக இருக்கக் கூடாது. நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பதற்கு நமக்குப் பிதாவாகிய தேவன் இருக்கிறபடியால் பிள்ளைகளாகிய நாம் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் இதை விசுவாசிக்க வேண்டும். " மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் ". (2 கொரி. 9:8).

ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொடுப்பதாக இருக்க வேண்டும். தேவன் எப்படி சித்தம் கொள்கிறாரோ அப்படி அவரால் செய்ய முடியும் என்பது நமது விசுவாசமாயிருக்க வேண்டும். ஜெபம் என்பது நாம் அவரிடம் சரண் அடைவதும், அவர் எதைத் தருகிறாரோ அதை ஏற்றுக் கொள்வதுமாகும். அவர் யார் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் நாம் அவரிடம் கேட்க முடியும்.

***ஜெபம் சந்தேகத்துடன் கூடியதாக இருக்கக் கூடாது***

" ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் " (யாக். 1:6). சிலர் தேவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால், அவர் செய்ய விரும்புகிறார் என்பதை மறுக்கிறார்கள். நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பதற்கு நமக்கு தகப்பன் இருக்கிறபடியால், அவருடைய பிள்ளைகளாகிய நாம் எவ்வளவு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். " என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் " (பிலிப். 4:19). சந்தேகம் கலந்த ஜெபத்தை ஏறெடுப்பவர்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் (யாக். 1:7).

***நம் இருதயத்திலும், நோக்கத்திலும் சுத்தம் இருக்க வேண்டும்.***

யாக்கோபு தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். " நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சை களை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டு மென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள் " (யாக். 4:3). தேவன் தம்முடைய பிள்ளைகளைக் குறித்து கரிசனை உடையவராயிருக்கிறார். இதுவும் நோக்கத்தில் ஒருமைத்தன்மை காணப்பட்டு பரிசுத்த ஜீவியம் மனிதனுடைய பங்கிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மனிதன் கலகமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு பிதாவின் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்க முடியாது.

என்ன ஓர் வல்லமை நமக்குக் கிடைத்திருக்கிறது! நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற தேவ வல்லமையை நாம் பெற்றிருக்கிறோம் (எபே. 3:20). இந்த வல்லமையோடு மனித விசுவாசமும், நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் இணையும்போது மனித எல்லைக்கு அப்பாற்பட்ட வல்லமை நமக்குக் கிடைக்கிறது.






# *சீர்பொருந்துவதற்கு இடதிலிருந்து வலதிற்குப் போங்கள்*

*Time Nichols*

**தேவன் ⇨ சத்தியம் ⇨ முடிவுரைகள் ⇨ விளைவுகள்**



" **மே**லே கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் அரசியல் வாக்கியமாக இருக்கும்படியாக அமைக்கப்படவில்லை. கற்றலில் ஏற்படும் சிரமத்திற்கான மருந்துமல்ல. வேதாகமத்தின் தேவனைப் பின்பற்றுவர்களாகிய நாம் விசுவாசிக்கின்றவைகளை, செய்கின்றவைகளை ஒழுங்காகச் செய்வதற்காகச் சுருக்கமான வழியை பட வடிவத்தில் கொடுத்துள்ளோம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள படம் மிக எளிதாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தைப் புரிந்து, பொருத்திப் பார்க்க முயற்சிக்கும் போது இந்த வரைபடம் நாம் பின்பற்றுவதற்கான வழிகாட்டியாக திகழ்கிறது. இந்த வரைபடத்தின் ஒவ்வொரு உறுப்புகளையும் பற்றி அதிகமாகச் சொல்ல முடியும். ஆனால், இந்தச் சுருக்கமான கட்டுரையில் அவைகளை எழுதுவதற்கு இடமில்லை.

## தேவன்

நாம் தேவனுடன் முதலில் தொடங்குவோம். இது ஒழுங்கற்றதாக இருக்கலாம் அல்லது அப்படித் தெரியலாம். இருந்த போதிலும், தேவன் இருக்கிறார் என்பதை இயற்கையிலும், அவர் எழுதிக் கொடுத்த வார்த்தையிலும் இருக்கிற ஆதாரங்களை ஆராய்ந்து பார்ப்பதனால் தான் அறிந்து கொள்ள முடியும். ஆனால், தேவன் இருக்கிறார் என்பதற்கான இந்த ஆதாரங்கள் தேவனிடத்திலிருந்து தான் வருகிறது. முன் கூட்டியே நிர்ணயம் செய்யாத மனதுக்கு இவைகள் நிச்சயமாகவும், தவறற்றதாகவும் இருக்கும்; நிச்சயமாயிருப்பதற்கு தேவன் முதலில் வர வேண்டும். சாட்சியங்கள் நம் மனதில் முதலில் வரலாம், ஆனால், எல்லா ஆரம்பத்திற்கும் பின் இருக்கிறார்.

## சத்தியம்

நாம் வேதாகமம் என்றழைக்கும் 66 புத்தகங்களை எழுத தேவன் மனிதர்களை ஏவினார். அவைகள் தேவனு டைய தன்மையை நாம் இயற்கையை உற்று நோக்குவதன் மூலமாக அறிந்து கொள்வதை விட அதிகமான காரியங்களை வெளிப்படுத்துகின்றன. அவைகள் இவ்வுலகத்தின் தன்மை பற்றியும் மனிதன் பற்றியும் அநேக சத்தியங்களை நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவைகள் மனித இனத்துக்கான தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றன. அவைகள் தேவனுடைய மனதைப் பற்றிய தெளிவான கருத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

## முடிவுரைகள்

தேவன் நம்மிடம் என்ன சொல்கிறாரோ அதற்கான முடிவுரையை அவருடைய வெளிப்பாட்டிலிருந்தே வரைகிறோம். நேர்மையான, உண்மையான,

தாழ்மையான மக்கள் தேவனுடைய வார்த்தை உண்மையை எழுதப் போதிக்கிறதோ அந்த காரியங்களை குறித்து மட்டுமே முடிவுக்கு வரக் கடுமையாக முயற்சிப்பார்கள். அவர்கள் வேத வாக்கியங்கள் எவைகளையெல்லாம் போதிக்கிறதோ அவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து, அவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ போதிக்கின்றவைகள் வேத வாக்கியங்களை விட அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். தாழ்மையான தேவதாசருக்கு இந்த செய்முறை கல்வி பயிற்சியை விட மேலானது. தெய்வீக பிரகாரமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை தேடுவதும், அதைத் துல்லியமாக கண்டு பிடிப்பதும் பரவசமூட்டும் ஒரு சாகச் செயல் ஆகும்.

### விளைவுகள்

சத்தியத்திற்கு விளைவுகளுண்டு. சரியான முடிவுரைகள் வாழ்க்கையில் சரியாகப் பயன்படுகிறது, சரியாகப் பொருந்துகிறது. ஒரு மனிதன் திருடுவது தவறானது என்கிற சரியான முடிவுக்கு வழி நடத்தும் சத்தியத்தைத் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். அதன் விளைவாக, திருடுவது எனக்குத் தவறாயிருக்கும் திருடுவது உங்களுக்கும் தவறாயிருக்கும் தேவனோடு தொடங்குகிற யாரும் அவருடைய சத்தியத்தை ஆராய்ந்து அது என்ன அவரிடம் கேட்கிறதோ அதை வைத்து முடிவெடுப்பார். மேலும், அந்த முடிவுகளுக்கான விளைவுகள் உலகில் எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்வதும் கடினமாயிராது. செய்கை கடினமாகும் போது சிலருக்கு புரிந்து கொள்ளுதல் குழப்பமாகிறது. ஆயினும், நீங்கள் இடது பக்கத்திலிருந்து தொடங்கி வலது பக்கமாக உங்கள் வேலையை செய்தால் நீங்களும், மற்றவர்களும் எதை விசுவாசிப்பதற்கும், செய்வதற்கும் போதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள். எனவே, செய்கைகளோடு நீங்கள் போராட வேண்டும். ஆனால், அந்த போராட்டம் உங்கள் சரியான புரிந்து கொள்ளுதலை கொள்கை கொண்டு போய் விட அனுமதிக்கக் கூடாது.

வலது பக்கத்தில் தொடங்கி, இடது பக்கத்துக்கு நகர்ந்து செய்ய நாம் அனுமதிக்கக் கூடாது. நீங்கள் அங்கே தொடங்கினால் எப்போதும் தவறு செய்வீர்கள். நீங்கள் எதை விசுவாசிக்கவும், செய்யவும் விரும்புகிறீர்களோ அதிலிருந்து தொடங்க வேண்டாம். நீங்கள் அதிலே தொடங்கினால் நீங்கள் திட்டங்களைத் தீட்டி உங்கள் நம்பிக்கை அல்லது பழக்கத்தை நியாயப்படுத்தி அது உங்கள் முடிவென்று அழைப்பீர்கள். அதன் பிறகு வலது பக்கம் ஒருபடி மேலேறி வேதாகமத்தில் இல்லாதவைகளை வாசிப்பீர்கள். நீங்கள் எதை விசுவாசிக்க வேண்டும் அல்லது செய்ய வேண்டுமென்று ஏற்கனவே தீர்மானித்திருக்கிறீர்களோ அதை நிரூபிக்கும் முயற்சியில் வேதாகமத்திற்குச் செல்வீர்கள், மேலும் தேவனால் உண்டாகாத காரியங்களை காண்பீர்கள்.

சிலர் தேவனுடைய சத்தியம் தங்களுக்கு பயன்படுத்த கடினமாகும் போது வலது பக்கமாக தொடங்கி இடது பக்கமாக வருகிறார்கள். பல திருமணங்கள் செய்து விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் தப்பித்துக் கொள்ள ஓட்டைகளைத் தேடி இடது பக்கமாக சாய்வார்கள். தங்கள் நண்பர்களுடைய அல்லது குடும்ப அங்கத்தினர்களுடைய பாவங்களை நியாயப்படுத்த விரும்புபவர்கள் அதையே செய்வார்கள். சில பிரசங்கியார்கள் சத்தியத்தின் உண்மையான விளைவுகளினால் விசுவாசிகள் இடறலடைந்து விடுவார்கள் என நினைத்து வலதில் இருந்து இடதிற்கு மாறிவிடுகிறார்கள். ஆனால், தேவனுடைய வார்த்தையை உண்மையாக செய்கிறவர்கள் மற்றும் எல்லா உண்மையுள்ள பிரசங்கியார்களும் கோட்டிலே நேராக அதாவது இடது பக்கத்தில் இருந்து வலது பக்கத்திற்கு செல்கிறார்கள். ❖





# எங்களுக்கு விமர்சகர்கள் தேவை இல்லை : சிலர் சொல்லுகிறார்கள்

## *SOME SAY : WE DON'T NEED CRITICS!*

***Hollis Miller***

**ந**ம்பிக்கை பற்றிய தத்துவஞானமானது நாம் மிகச் சிறந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று உறுதிப்படுத்துகிறது. ஆனால், இந்த தத்துவஞானம் சரியானதா? வேதாகமத்தின்படி அது சரியானதல்ல. தேவன் தனது சிருஷ்டிப்பைப் பார்த்து " நல்லது" என்று சொன்னபோது தான் மிகச் சிறந்த உலகம் இருந்தது. பாவம் இவ்வுலகத்தில் எப்போது பிரவேசித்ததோ, அந்நேரமே மிகச்சிறந்த உலகம் முடிவுக்கு வந்தது. அந்நேரத்திலிருந்தே இவ்வுலகமானது தேவனை விட்டுப் பிரிந்தது. அதன் விளைவையும் சந்திக்க நேர்ந்தது.

எங்களுக்கு விமர்சகர்கள் தேவை இல்லை என்று சொல்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்வது சரியா? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் விமர்சகர்களாயிருந்தார்கள். இயேசுவே ஒரு விமர்சகராயிருந்தார். அப்போஸ்தலர்கள் விமர்சகர்களாக இருந்திருக்கிறார்கள். விமர்சகர்கள் நமக்குள்ளே ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒருவருக்கு எப்படிப்பட்ட ஆதாரம் தேவை? காரியங்களை மதிப்பீட்டோடு எடைபோடுகிறவன்தான் விமர்சகன். ஒருவரும் எதையும் மதிப்பீடு செய்யவில்லையென்றால், இவ்வுலகமானது உண்மையாகவே கூச்சலும், குழப்பமுமான இடமாயிருக்கும்.

இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த யூதர்களுடைய எண்ணங்களை குறைவான மதிப்பை உடையதாக கருதியபடியால் அவர்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று தம்முடைய சீஷர்களை எச்சரித்தார் (மத். 16:6,12). யோவான் கிறிஸ்தவர்களிடம் தங்களிடத்தில் வரும் தீர்க்கதரிசிகளை (மதிப்பீடு) விமர்சனம் செய்யவேண்டுமென்று வலியுறுத்தினார் (1 யோவான் 4:1). சபைகளில் விமர்சனம் செய்வது அல்லது கண்டனம் பண்ணுவது மூப்பர்களின் முதன்மையான பொறுப்பாயிருக்கிறது (அப். 20:28,31; தீத்து. 1:9).

நேர்மறையான, வேதாகமம் சார்ந்த விமர்சனங்கள் எப்போதுமே அவசியப்படும், ஏனென்றால், பாவமும், அதன் காரணமாக அவமானமும் கர்த்தருடைய வருகை வரை தொடர்ந்து கைகோர்த்துவரும். தேவை இல்லாதது என்னவென்றால் அவதூறு,

வம்பளப்பு, பெருமை மற்றும் அகந்தையான மனப்பான்மைதான். இவைகளெல்லாம் பாவமுள்ளவைகள். ஏனென்றால், இவைகள் தவறான உள்நோக்கத்துடன் விமர்சனம் செய்ய காரணங்களாக அமைகின்றன. ஆகவே, நாம் விமர்சகர்களாகும்போது அதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், அதாவது, நாம் வேதாகம போதனைக்கு இசைவாக விமர்சிக்க வேண்டும். ❖

## தேவனுடைய வார்த்தையை

1. பிரசங்க மேடை வேகத்தில் வேதாகமத்தை வாசிக்க **70 மணி நேரம் 40 நிமிடங்கள்** ஆகும்.
2. பழைய ஏற்பாட்டை வாசிக்க **52 மணி நேரம் 20 நிமிடங்கள்** ஆகும்.
3. புதிய ஏற்பாட்டை வாசிக்க **18 மணி நேரம் 20 நிமிடங்கள்** ஆகும்.
4. பழைய ஏற்பாட்டில் நீண்ட அதிகாரங்களை உடைய சங்கீதப் புத்தகத்தை வாசிக்க **4 மணி நேரம் 28 நிமிடங்கள்** ஆகும்.
5. புதிய ஏற்பாட்டில் அதிகமான அதிகாரங்களை உடைய லூக்கா நற்செய்தி நூலை வாசிக்க **2 மணி நேரம் 43 நிமிடங்கள்** ஆகும்.

எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையை வாசிப்பதை விட உங்கள் நேரத்தை செலவுச் செய்ய சிறந்த வழி உங்களிடம் உண்மையாகவே இருக்கிறதா?





# வாழ்வதற்கான ஐந்து உபதேசங்கள்

## 5 Rules To Live By

***Ken Tyler***

**நோக்கம் :**

தேவனுடைய பிரமாணங்களின்படி வாழ்வதின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு :

(1) "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்" (பிரசங்கி 9:10)

A இந்த விதியை நடைமுறைப்படுத்தினால் சபை உலக முழுவதும் உருவாக வழிவகுக்கும்

B இந்த விதியை நடைமுறைப்படுத்தினால் சபை உலக முழுவதும் உருவாக வழிவகுக்கும்.

(2) "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு. 7:12).

A. இந்த தங்க விதியை நடைமுறைப்படுத்தும் சபை ஒருபோதும் அழிக்க முடியாத ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்.

B. இது நம்முடைய சமுதாயத்தின் அவசரத் தேவையாக இருக்கிறது – நாம் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டிருக்கிறோம்.

(3) "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர். 8:28).

A. நாம் செய்யக் கஷ்டப்படும் காரியங்களுள் ஒன்று முழு சித்திரத்தையும் காண்பது தான்.

B. நாம் தேவனை நேசிப்பதும், அவரிடத்தில் நம்பிக்கை வைப்பதும் முக்கியமாக இருக்கிறது.

(4) மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணி வொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்; நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்வது போகாமலிருப்பதால் ஏற்றக் காலத்தில் அறுப்போம் (கலாத். 6:7–9) (ஏசா. 3:8–11) (எபேசி. 6:8).

A. அநேக ஜனங்கள் இந்த விதியை கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள்

B. நம் செயல்பாடுகள் நம் வாழ்க்கைத் தரத்தையும், நம் தலைவிதியையும் நிர்ணயிக்கின்றன. நாம் ஒருபோதும் அதை மறக்கக்கூடாது.

(5) மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மாற்கு 8:36,37)

A விதி இதுதான் – நான் என் ஆத்துமாவை இழந்தால் எல்லாவற்றையும் நான் இழந்து விட்டேன்.

B ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களைப் பற்றி ஏன் மறந்து விட்டார்கள்?

*முடிவுரை :*

நாம் சரியான விதிகளின்படி வாழ்ந்தால், சரியான வாழ்க்கையையும் சரியான முடிவையும் அடைவோம்.

## ஒன்றுமில்லாமையிலிருந்து...

தேவ ஆவியானவர் அசைவாடியபோது

வெறுமையிலிருந்து மிகப் பெரிய நட்சத்திரக் கூட்டமும்

முடிவில்லாத விண்வெளியும், காலமும் உருவாயின.

ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாமே வந்தது

ஆதியிலே தேவன் இருந்தார், இன்றும் இருக்கிறார்.

**Brunice C. Cole, Jr.**





# விலையேறப்பெற்ற விசுவாசம்

II பேதுரு 1 : 1–4

***O.P. Baird***

“**ந**ம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது (பேதுரு 1:1). இப்போது ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாசம் பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்கள், ஆதிக் கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தைப் போன்று அருமையானது. அது, நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் அருமையானது.

விசுவாசமானது ஒருவரை நம் தேவனும், இரட்சகருமாயிருக்கிற இயேசுவின் கிருபைக்குள்ளும் சமாதானத்திற்குள்ளும் கொண்டு வருகிறது. “ தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருகக்கூடாது ” (II பேதுரு 1:2). தேவனைப் பற்றியும் அவருடைய சித்தத்தைப் பற்றிய அறிவு நம்மில் பெருகும் போது அவருடைய சமாதானமும், கிருபையும் நம்மில் பெருகுகிறது, மேலும், நம் விசுவாசம் அதிக விலையேறப்பெற்றதாகிறது.

தேவனுடைய வல்லமை நமக்கு ஜீவனையும், தேவ பக்தியையும் தருகிறது. “ தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது, நமக்கு தந்தருளினதுமன்றி ” (II பேதுரு 1:3).

“ தேவனுடைய வாக்குத் தத்தங்கள் அருமையானதாயிருக்கிறபடியால் கிறிஸ்தவனுடைய விசுவாசமும் அருமையானது ” அவர் நமக்கு மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைத் தந்திருக்கிறார் (II பேதுரு 1:4). அந்த அருமையான வாக்குத்தத்தகளை நாம் பிடித்துக் கொள்ளும்போது நம் விசுவாசம் அருமையாகிறது.

ஒரு கிறிஸ்தவனின் விசுவாசம் அருமையானது என்பதற்கு பேதுரு மற்றுமொரு காரணத்தைக் கொடுக்கிறார். வாக்குத்தத்தங்களைப் பற்றி சொல்லும்போது அவர் இவ்விதமாகச் சொல்கிறார் “அவைகள் நீங்கள் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் பொருட்டு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (II பேதுரு 1:4). திவ்விய சுபாவம் எதைப் போன்றது? கிறிஸ்துவைப் பற்றிப் பேசும் போது, எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார். நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர் (எபிரெயர் 1:9). அது திவ்விய சுபாவத்துக்கு பங்காளியான ஒரு நபரைப் பற்றியும் விவரிக்கிறது.

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது மனிதன் எதைப் போல இருந்தான்? “ தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் ” (ஆதி 1:27). தேவனால் உண்டாக்கப்பட்ட

ஆணும், பெண்ணும் பிசாசுக்கு செவிக் கொடுத்து, அவன் சொன்னதை விசுவாசித்து அவனுடைய ஆலோசனையின் படி நடந்த போது அவர்கள் தேவனைப் போலிருக்கும் சிலாக் கியத்தை இழந்து விட்டார்கள். சிலர் மற்றவர்களை விட கேடானவர்களாக இருக்கிறார்கள், ஆனால், பொறுப்புள்ள எல்லா ஜனங்களும் பாவம் செய்திருக்கிறார்கள் (ரோமர் 3:10,23).

ஆனால், தேவன், நம்மில் அன்பு கூர்ந்தபடியால் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கும்படியாகத் தம் குமாரானாகிய இயேசுவை அனுப்பினார் (யோவான் 3:16). தேவன் ஒருவரை இரட்சிக்கும் போது தம்முடைய சாயலில் அந்த நபரை மறுபடியும் சிருஷ்டிக்கிறார். “ பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே ” (கொலோ 3:9,10). அங்கே தேவனுடைய கிரியை இன்னும் முடியவில்லை. புதிய மனுஷன் புதிதாக்கப்படுகிறார்.

நாம் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாவதற்கு முன்பாக நடைபெற வேண்டிய ஒன்றிருக்கிறது. “ இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்ப வேண்டும். (II பேதுரு 1:4). இச்சை அல்லது தீய ஆசை மனித சுபாவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, ஒருவர் தான் விரும்புகிறதை செய்வது இயற்கையானது தான். மனிதனுடைய சுபாவம் அவனை மிகப்பெரிய கேட்டுக்குள்ளாக வழி நடத்துகிறது. எனவே, மனிதன் திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவனாவதற்கு முன்பாக இதிலிருந்து தப்ப வேண்டும். மனிதனுடைய விசுவாசம் அவனை கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படுத்தும் போது அவன் தப்பித்துக் கொள்கிறான். பேதுரு முதன் முறையாக முழுமையான சுவிசேஷப் பிரசங்கத்தைச் செய்த போது அவர் மக்களைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் ” (அப் 2:38). மன்னிப்படைந்த நபர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார். நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருகிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண் டார்கள் (கலா. 3:26,27). கிறிஸ்துவுக்குள் நமக்கு திவ்விய சுபாவமாகிய புதிய சுபாவம் உண்டாகிறது. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (II கொரி 5:17).

அநேகமாக, இங்கே ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. பின்னர் மனந்திரும்பிக் கொள்ளலாம் எனத் திட்ட மிடுபவர்களுக்கு பாவம் ஒரு பொருட்டல்ல என்று தோன்றலாம். ஆனால், அது திவ்விய சுபாவமல்ல, அது கிறிஸ்துவின் ஆவியும் அல்ல. “ கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல ” (ரோமர் 8:9). தீய இச்சைகளில் நம் மனங்களிலிருந்தால் நாம் கேட்டிலிருந்து தப்ப முடியாது. அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கு உரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்” (ரோமர் 8:5).

விசுவாசத்தினால் நாம் பாவ மன்னிப்பைப் பெறுகிறோம். விசுவாசம் உள்ளவர்கள் திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகிறார்கள். விசுவாசத்தினால் நாம் வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்கிறோம் (எபிரெயர் 6:12). கிறிஸ்தவனுடைய விசுவாசம் எவ்வளவு அருமையானது !



வாழ்வதற்கான உபதேசம்

# நம் ராஜா வருகிறார்

## OUR KING IS COMING

***Charles E. Cobb***

**இ**யேசு கிறிஸ்து கிறிஸ்தவனின் ராஜாவாக இருக்கிறார். அவர் ராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தாவாக வாழ்கிறார், ஆளுகிறார் (வெளி. 17:14; 19:16). சபையில் அவர் எல்லாவற்றுக்கும் தலையாயிருக்கிறார், அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். இன்று அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து தம்முடைய இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு தம்முடைய வருகைக்கான நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

கெம்பீரமான இயேசு தம்முடைய மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தேவதூதர்களுடன் வருவார். அது எவ்வளவு வல்லமையான, ஒளி மயமான காட்சியாக இருக்கும். தேசங்களிலுள்ள மனிதர்கள் அவருடைய மகிமையைக் காண்பார்கள். அது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது “ கண்கள் யாவும் அவரைக் காணும் அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள் ” (வெளி 1:7). இயேசு வரும்போது நடைபெறும் சம்பவத்தில் எவ்வித தவறும் இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்து திரும்ப வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து எருசலேமிலிருந்து ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வார் என்பது ஒரு பிரபலமான கோட்பாடு. ஆனால், அதற்கு போதுமான வேதாகம அடிப்படையிலான உண்மையான ஆதாரங்கள் இல்லை. ராஜ்யம் இயேசுவின் சமகாலத்தவர்களில் சிலர் உயிரோடிருந்த போதே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது (மாற்கு 9:1). கொலோசெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் ராஜ்யம் ஏற்கனவே இருந்ததையும் மக்கள் அந்த ராஜ்யத்தில் உட்படுத்தப்பட்டதையும் நாம் கற்றுக் கொள்கிறோம் (கொலோ 1:13,14). ஆகவே, ராஜ்யம் ஏற்கனவே இருந்து வருகிறது, இயேசு அதன் ராஜாவாக இருந்து அதை ஆண்டு கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவின் வருகைபற்றி தேதி குறிப்பது காலகாலமாக பிரபலமான ஒரு யூகமாக இருந்து வருகிறது. வேத வாக்கியங்களின் வெளிப்படையான போதனை இயேசு எப்போது வருவார் என்பது யாருக்கும் தெரியாது என்பது தான். “ கர்த்தருடைய நான் இரவிலே திருடர் வருகிற விதமாய் வரும்.... ” பேதுரு 3:10; சமாதானமும், சௌக்கியமும் உண்டென்று மனிதர்கள் செல்கிறார்கள் இன்னும் சிலர் அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறதோ என்று சொல்வார்கள்.

" கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தே எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" (I தெச. 5:3; II பேதுரு 3:34; தெச. 4:16)

**ஆனால் அந்த நாளும், நாழிகையும் நமக்குத் தெரியாது (மாற்கு 13:32,33)**

நம் கர்த்தர் ஜீவிக்கிறது எவ்வளவு நிச்சயமோ அது போலவே நிச்சயமாக அ திரும்பி வருவார். " நான் மறுபடியும் வருவேன் " என்பது தான் தேவ குமாரனுடை உண்மையுள்ள வாக்குதத்தமாயிருக்கிறது (யோவான் 14:3)

இயேசு கிறிஸ்து கேலி, கிண்டல், அவிசுவாசம், வாளினால் அடி, சிலுவையி றையப்படுதல் போன்ற பாடுகளைப்பட்ட பிறகு இவ்வுலகத்தை விட்டுச் சென்றார். அவ மகிமை, வல்லமை, கனம் மற்றும் நியாயத்தீர்ப்பு போன்றவைகளோடு திரும்ப வருவா

நம் ராஜா வரும்போது மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையு கூப்பிடுவார் (வெளி 20:12). களம், மேன்மை, வல்லமை பொருந்திய மனிதர்க கர்த்தருக்கு முன்பாக நிற்கும்படி அழைக்கப்படுவார்கள். வீணான வாழ்க்கை வாழ்ந்தவர்களும் கர்த்தருக்கு முன்பாக நிற்பார்கள். பணக்காரர், ஏழைகள், அடிமைக சுயாதீனமானவர்கள், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலுமுள்ள எல்லா இனத்தாரு கிறிஸ்துவுக்கு பதில் சொல்ல வேண்டும் (II கொரி 5:10). ராஜா வரும் போது யாருக்கு பட்சபாதம் பார்க்கப்படமாட்டாது, யாரும் தப்பிக்கவும் முடியாது.

மனிதர்கள் மறைந்து கொள்ள நாடலாம். அவர்கள் ஒரு மனதோடு சாக்குபோக் சொல்லலாம். " மனிதர்கள் தங்கள் பாவங்களால் ஆளப்பட்டு, அவைகள் கர்த்தரா கண்டுபிடிக்கப்பட்டபடியால் மிகுந்த வேதனையில் அல்லலுறுவார்கள் ". மறை கொள்ள, சாக்குபோக்கு சொல்ல, பயத்தில் அலற அவர்கள் எடுக்கும் எந்த முயற்சி ராஜாவுக்கு முன்பாக வெற்றி பெறாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இரக்கமில்லாம தான் நடக்கும். ஏனென்றால், மனிதர்கள் வாழ்கின்ற நாட்களில் அவர்கள் மீது தேவ இரக்கம் பாராட்டி ஆயத்தமாவதற்கு அவர்களுக்குப் போதுமான வாய்ப்புகளை கொடுத்தார்.

தேவனுடைய திட்டம் என்னவென்றால், இயேசு திரும்ப வரும் போது பிதாவாகி தேவனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புக்கொடுத்தார் (I கொரி. 15:22-28). ராஜாதி ராஜ சாத்தான் மீதும் அவனுடைய சேனையின் மீதும் வெற்றி வாகை சூடுவார். எல் வற்றையும் அவர் வென்று வெற்றி சிறந்த ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்பு கொடுப்பார். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் பிரஜைகளும், தேவனுடைய ராஜ்யத்தி பிரஜைகளும் பிதாவினால் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எபேசியர் 5: இந்த பூமிக்குரிய வாழ்விற்கான சோதனைகள், பாடுகள் எல்லாம் ஒழிந்துபோம். அங் சமாதானமும், தூய்மையும், அழகும் நீடித்திருக்கும் சமாதானமும் இருக்கும்.

ராஜா வருகிறார் என்பது அந்த மகிமையான நிகழ்வுக்கு ஒவ்வொருவரையு ஆயத்தமாக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் உண்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் (தீத்து. 2:11,12). கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படி ஆயத்தமான நிலையிலே இருக்க வேண்டும் (மத்தேயு 7:21; மாற்கு 16:15,16; எபிரெ



5:8,9). பெந்தெகொஸ்தே நாளில் பாவத்திலிருந்தவர்களுக்கு தேவ ஆவியினால் ஏவப் பட்ட அப்போஸ்தலனுடைய செய்தி " நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் " அப் 2:38. கீழ்ப்படிந்தவர்கள் சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப் 2:41,47)

நம் ராஜா வருகிறார். இயேசு உங்கள் ராஜாவாக இல்லையென்றால், நீங்கள் அவருடைய ராஜ்யத்தில் இல்லையென்றால், நீங்கள் உங்கள் எஜமானுக்கு, ஆண்டவருக்கு சேவை செய்யவில்லையென்றால் இப்பொழுது உங்களுக்கு வாய்ப்பு வருகிறபடியால் நீங்கள் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

ராஜாவின் வருகையின் போது கொண்டாடுபவரில் ஒருவராக இருக்க நீங்கள் ஏன் திட்டமிடக்கூடாது? நித்திய துக்கம் மற்றும் தண்டனையில் முடங்கிக் கிடப்பதை விட அவ்விதமாக ஏன் நீங்கள் திட்டமிடக்கூடாது? வருகின்ற ராஜா நீங்கள் அவருக்கு சொந்த மானவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் (மத்தேயு 11:28-30). ❖

## உண்மையாயிருங்கள்

நாம் பெரும்பாலும் ஜெபங்களைச் சொல்கிறோம்
ஆனால், நாம் எப்போதாவது ஜெபிக்கிறோமா?
நாம் சொல்கின்ற வார்த்தைகளோடு நம் இதய நிலை
ஒத்துப்போகிறதா?

நாம் முழங்கால்படியிட்டு கற்களாலான கடவுள்களை
தொழுது கொள்வதுபோல்,
ஜீவனுள்ள தேவனை
நம் வாயின் வார்த்தைகளினாலே பிரியப்படுத்த
முயற்சித்தால் அதில் பயன் ஏதுமில்லை

இருதயத்திலிருந்து வார்த்தைகள் வரவில்லையென்றால்
கர்த்தர் ஒருபோதும் நம் ஜெபத்தைக் கேட்பதில்லை
அதுபோல் மனப்பூர்வமாக ஜெபிக்காமல்
**உதட்டளவில் ஜெபிக்கிறவர்களுக்கும்**
**அவர் ஒருபோதும் செவி சாய்ப்பதுமில்லை.**



# ஒருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

## *HOW CAN ONE KNOW?*

***Jimmy Jividen***

**ம**தத்தின் பெயரால் முரண்பாடான உபதேசங்கள் போதிக்கப்படுகின்றன. போதகர்கள் எல்லோருமே தாங்கள் தான் தேவனுடைய சித்தத்தைப் போதிப்பதாக சொல்லிக் குழப்புகிறார்கள். தேவனுக்காக பேசுகிறவர் யார் என்று ஒருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும்?.

ஒருவர், நீண்டகாலமாக கடைப் பிடிக்கப்பட்டு வரும் பாரம்பரியத்தின் ஆதரவு தான் சொல்லுகிறவைகளுக்கு இருக்கிறபடியால் தன்னுடைய உபதேசம் தேவனிடத்திலிருந்து வந்தது என்று சொல்லிக் கொள்கிறார். மனித பாரம்பரியங்களை பிரிவினை சபைகள் ஆலோசனை சங்கங்கள் மற்றும் மனித கொள்கைகள் உறுதிப்படுத்தி விட்டன. ஆனால், மனித பாரம்பரியங்களெல்லாம் மாறும் தன்மை உடையவைகளாக முரண்படுகிறவைகளாக இருக்கின்றன. ஒரு பிரிவு சபையின் கொள்கை மற்றொரு பிரிவு சபையின் கொள்கைக்கு நேர் எதிராக இருக்கிறது. மத ரீதியான அதிகாரத்திற்கு ஒருவர் இப்படிப்பட்ட மனித பாரம்பரியங்களைச் சார்ந்திருக்க முடியாது. " தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத் திற்குத் தேவனாயிருக்கிறார் " (1 கொரி. 14:33).

ஒருவர் தனக்கு வெளிப்பாடு கிடைத்திருக்கிறதாகவும் அதனால் தன்னுடைய உபதேசம் தேவனிடத்திலிருந்து வந்தது என்றும் விசுவாசிக்கிறார். இக்கால வெளிப்பாடுகளிலுள்ள பிரச்சனைகள் என்னவென்றால், அவைகளும் மாறும் தன்மையுடையவைகளாக, முரண்படுகிறவைகளாக இருக்கின்றன. இக்கால உபதேசங்கள் ஒன்றுக்கொன்று முரண்படும் போது, ஏதோ ஒன்று தவறாயிருக்க வேண்டும் அல்லது இரண்டும் தவறாயிருக்க வேண்டும் என்பது வெளிப்படையாயிருக்கிறது. அவைகள் மாறுபடும் போது, அவைகள் தேவனிடத்திலிருந்து வந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாகிறது. தேவன் மாறுவதுமில்லை, அவர் முரண்படுவதுமில்லை. ஒருவர் மத சம்மந்தமான அதிகாரத்திற்கு புதிய வெளிப்பாட்டை ஒரு தகுதியம்சமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

மற்றொருவர் தன் போதனை பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால் அது தேவனிடத்திலிருந்து வந்தது என்று சொல்லிக் கொள்கிறார். அவரைப் பொறுத்த அளவில் ஜனங்களுடைய சத்தம் தான் தேவனுடைய சத்தமாகிறது. அவரைப் பொறுத்தளவில் ஓர் உபதேசத்தின் உண்மைத் தன்மையானது அதை ஏற்றுக் கொள்ளுகிறவர்களால் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவர் ஒன்றை உண்மையாகக் கருதினால், அது அவருக்கு உண்மையாகிறது என்று நம்புகிறார். இதன் மூலம், ஒன்றுக்கொன்று முரண்படுகிற இரண்டு உபதேசங்கள் கூட உண்மையாகி விட முடியும். அவரைப் பொறுத்தளவில், சகலமும் உண்மையாயிருந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பது அவசியமில்லை. தங்களுடைய விசுவாச நிலையைத் தீர்மானிப்பதற்கு இப்படிப்பட்ட அபிப்பிராயத்தைத்தான் ஜனங்கள் அளவுகோளாக பயன்படுத்துகிறார்கள். இத்தகைய விசுவாசம் முரண்பாடானதும், மாறுகிறதுமாயிருக்கிறது. இது தேவனுடைய தன்மையையே தகர்த்துப் போடுகிறது. " அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் " (எபி. 13:8).

மத சம்மந்தமான சத்தியத்திற்கு ஒரே ஒரு அளவுகோல் வேத வசனங்களாகத்தான் இருக்க வேண்டும். அவைகள் ஏவப்பட்டதும், முழுமையானதும், முரண்படாததுமாயிருக்கிறது. " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது " (2 தீமோ. 3:16,17).

# உங்கள் திறமை எப்படியிருக்கிறது?

## *How's Your Skill?*

***Tom Kelton***



பலர் தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கிற உண்மைகளை கற்றுக் கொள்ளாமலும், அதைச் சரியாகப் பொருத்திப் பார்க்காமலும் இருப்பதினால் தேவனுடைய வார்த்தை எல்லாவற்றுக்கும் போதுமானது என்கிற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். இருந்த போதிலும், வேத வாக்கியங்கள் ஒரு முழுமையான கிறிஸ்தவனை உருவாக்கும் ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தின் அவசியமான கருவியின் ஓர் அங்கமாக இருக்கிறது (எபே. 6:11). அந்த வசனப்பகுதியில் பவுல் குறிப்பிடும் ஒரே ஆயுதம் ஆவிக்குரிய பட்டயமாகிய தேவனுடைய வார்த்தைதான் (வச. 17). மற்ற ஆயுதங்களைப் போல் இதுவும் வல்லமையாக செயல்பட வேண்டுமென்றால் இது சாமர்த்தியமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

பவுல் வெளிப்படுத்தின சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக, அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் பெரோயா பட்டணத்திலுள்ள *யூதர்களை* விட நற்குணசாலிகள் என்று லூக்கா ஆசிரியர் குறிப்பிடுகிறார். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் ஜனங்கள் இன்னும் நற்குணசாலிகளாக இருக்க முடியும். தேவனுடைய சத்தியத்தைத் தாங்கிப் பிடிப்பதும், அன்பை துல்லியமாக எடுத்துரைப்பவர் களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவதும் போற்றப்பட வேண்டிய ஒன்று. மறுமுனையில், கள்ள உபதேசங்களையும் விழுதலுக்கு ஏதுவான போதகங்களைச் செய்யும் போதகர்களை சகித்துக் கொள்வதும், வித்தியாசத்தை அறியாமலிருப்பதும் முட்டாள் தனமானதும், ஆவிக்குரிய பிரகாரமாக ஆபத்தானதுமாகும். ஆனால், இன்று சபையைப் பாடாய்ப்படுத்தும் ஒருவிதமான அறியாமையின் ஆவி, மற்றவர்களின் உபதேசத்தில் துருவி ஆராய்வதை குறுகிய மனப்பான்மையென்றும், அன்பில்லாமையென்றும், பிரிவினையென்றும் முத்திரை போடுகிறது.



அவர்கள் தவறை சகிப்பதன் உண்மை சத்தியத்தின் மீது பற்றில்லாமல் பாராமுகமாயிருப்பது தான்.

இன்று சபை மிகவும் சோம்பலாகிவிட்டது. அது ஜாக்கிரதையான வேதாகம சிந்தையிலிருந்து விலகி, தாறுமாறான உபதேசங்களைச் சகிக்கத் தொடங்கிவிட்டது. பெரோயா பட்டணத்துக் கிறிஸ்தவர்களுடைய கண்ணோட்டத்துடன் ஜீவனை அணுகுபவர்கள் குறைந்த எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் தான்.

ஜனங்கள் பெரும்பாலும் உடனடியாகத் தவறு செய்வதில்லை. அது படிப்படியாக நடக்கிறது. பெரும்பாலும் வேண்டுமென்றே அவர்கள் தவறு செய்வதில்லை. வேத வசனங்களைக் கையாள்வதில் ஏற்படும் சோம்பலால் அவர்கள் விழுந்து விடுகிறார்கள். தவறு செய்வதற்கான முதல் தடமே புதுமையான, வித்தியாசமான ஒன்றை விரும்புவது தான். மேலும், கவர்ச்சிகரமான புதிய எண்ணம், தேவனுடைய சத்தியத்தை கையாள்வதில் கவனக் குறைவு போன்றவற்றோடு சேரும்போது அது தவறான பாதைக்கு தாராளமாய் அழைத்துச் செல்கிறது.

## நீங்களும் கனி கொடுக்க முடியும்

**நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. (2 பேதுரு 1:5,8).**

# நன்றிச் செலுத்துதல்

நீங்கள் தேவனாயிருந்தால், தேவன் நீங்களாயிருந்தால்
நீங்கள் அவருக்கு ஆராதிக்கும்படியாகவும், துதிக்கும்படியாகவும், ஜெபிக்கும்படியாகவும்
விடுமுறை கொடுத்தும் அவர் உங்களைப் பற்றி எண்ணம் கொள்ளாமல் அல்லது
உங்கள் அன்புக்கும், அக்கறைக்கும் நன்றி இல்லாதவராக நடந்து கொண்டால்
நீங்கள் தேவனாயிருந்து தேவன் நீங்களாயிருந்தால்,
என்ன செய்வீர்கள்? - சொல்லுங்கள்

நீங்கள் தேவனாயிருந்தால், தேவன் நீங்களாயிருந்தால்
ஒரு தேசம் ஆராதனைக்காக ஒரு நாளை ஒதுக்கியும்
ஆயிரக்கணக்கான மக்கள் அது பற்றிக் கவலைப்படாமல்
ஒருவர் மட்டும் நேரத்தை ஒதுக்கினால்
அந்த ஜனங்கள் உண்மையுள்ளவர்கள் என்று நம்பி அவர்களை
அடுத்த வருடமும் நீங்கள் ஆசீர்வதிப்பீர்களா?
நீங்கள் தேவனாயிருந்து தேவன் நீங்களாயிருந்தால்
என்ன செய்வீர்கள்? - சொல்லுங்கள்

நீங்கள் தேவனாயிருந்தால், தேவன் நீங்களாயிருந்தால்
லட்சக்கணக்கான மக்கள் உங்களை நன்மையான ஈவைத் தருபவர் என்று
உங்கள் பேரில் விசுவாசம் வைத்து விட்டு உங்களுக்கு நன்றி சொல்லாமலோ
அல்லது தாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணராமலிருந்தால்
அதன்பிறகு அவர்களுடைய வழியில் பிரச்சனைகள் வரும்போது
தாமதமின்றி அவர்கள் உங்கள் உதவியை எதிர்பார்த்தால்
நீங்கள் தேவனாயிருந்து தேவன் நீங்களாயிருந்தால்
என்ன செய்வீர்கள்? - சொல்லுங்கள்





# இரட்சிப்பு சபைக்குள் இருக்கிறது

## Salvation Is in the Church

*Max Patterson*

**பெ**ரும்பாலான ஜனங்கள் ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு சபையின் அங்கத்தினராக மாற வேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு பிரிவினைச் சபைக் கூட்டத்தில் அங்கத்தினராவது பற்றி இப்படிப் பொருள் படும்படி சொல்லியிருந்தால், அவர்கள் சொல்வது முற்றிலும் சரியானது தான். ஆனால், புதிய ஏற்பாட்டின், இரத்தத்தால் வாங்கப்பட்ட சபை என்று பொருள்படும் விதத்தில் இப்படிச் சொல்லியிருந்தால், அவர்கள் சொல்வது முற்றிலும் தவறானது. இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராவது மிகவும் அவசியமாகும்.

**முதலாவது**, ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (எபே. 1:3) சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இல்லாமல் ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?

**இரண்டாவது**, இந்த சபையைத் தான் இயேசு தமது சுய ரத்தத்தினாலே வாங்கினார். சபை அங்கத்தினர்கள் இரத்தத் தினாலே வாங்கப்பட்டவர்கள் (அப். 20: 28). நிச்சயமாக, தேவன் தேவையில்லாத ஒன்றுக்காக கிறிஸ்து மரிக்க அனுமதித் திருக்கமாட்டார். இரத்தத்தால் வாங்கப் பட்ட ஒன்றே ஒன்று சபைதான். ஆகவே, இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையில் இல்லாதவர்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறார்கள்.

**மூன்றாவது**, பவுல் சரீரமாகிய சபைக்குக் கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார் என்று சொல்கிறார் (எபே. 5:23; 1:22,23). வெளியில் இருப்பவர்களுக்கு அவர் இரட்சகரல்ல.

**நான்காவது**, பவுல் நாம் சிலுவையினாலே சரீரமாகிய சபையில் தேவனிடத்தில் ஒப்புரவாக்கப்படுகிறோம் என்கிறார். (தேவனோடு மறுபடியும் ஒன்றிணைக்கப்படுகிறோம்) வேறொரு உறவினால் ஒருவர் தேவனோடு ஒப்புரவாக்கப்படுவதில்லை.

**ஐந்தாவது**, சபையானது பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே. 5:27). ஒருவர் இரட்சிக்கப்பட்டால் அவர் சபையில் சேர்க்கப்பட்டு இயேசுவுக்கு முன்பாக தன்னை உத்தமனாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**ஆறாவது**, சபை தேவனுடைய குடும்பமாக இருக்கிறபடியால், ஒருவர் சபைக்கு வெளியே இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியுமென்று சொல்வது தவறானது. (1 தீமோ. 3:15).

ஏழாவது, ஒருவர் சபையில் (ராஜ்யத்தில்) இல்லையென்றால் அவர் இன்னும் இருளில் தர்ன் இருக்கிறார். தேவன் கொலேசே பட்டணத்தாரை "இருளின் அதிகாரத்தினின்று விடுதலை யாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினதாக " நாம் வாசிக்கிறோம் (கொலோ. 1:13). இங்கே உட்படுத்தியிருப்பது என்பதை அவர்கள் மறுபடியும் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தார்கள் என்று வேறுவிதமாகச் சொல்லமுடியும் (யோவான் 3:3-5).

இன்று ஜனங்கள் புதிய ஏற்பாட்டு காலங்களில் கிறிஸ்தவர்களாவதற்கு ஜனங்கள் என்ன செய்தார்களோ அதைச் செய்யும்போது, சபையில் சேர்க்கப்படு கிறார்கள். சபையின் அங்கத்தினராக இருப்பது கிறிஸ்துவோடு ஒருவருக்கி ருக்கும் ஆவிக்குரிய உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறது. ❈

## திருமணம்

**திருமணம்** என்பது குருட்டு பரவசத்தில் தொடங்கி அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பில் முடிகிற அன்பின் விளைவாகும்.

**திருமணம்** மரணத்தைவிட வலிமையானது, ஆயினும், நாம் இணைந்து வாழ்வதைச் சாதனையாகக் கொண்டாடும் அளவுக்கு அது பெலவீனமானது.

**திருமணம்** என்பது வாடிக்கையான ஒன்றாக இருந்தாலும், தினமும் அது கவனிக்கப் பட வேண்டும்... அது ஒருபோதும் லேசாக எடுத்துக் கொள்ளப் படக்கூடாது.

**திருமணம்** ஒரே நேரத்தில் வளர்ச்சியும் அடைகிறது முதிர்ச்சியும் அடைகிறது. ஆனால், அது நம்பிக்கையிலும், திருப்தியிலும் வளர்கிறது.

**திருமணம்** என்பது ஏமாற்றங்களையும், காயங்களையும் கூட தன்னகத்தே கொண்டுள்ளது. அதேபோல் மகிழ்ச்சியையும், சிரிப்பையும் கூடவே தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால், அவைகளை அவர்கள் இணைந்து பகிர்ந்து கொள்வதால் மோசமான நேரங்கள் சற்று சுலபமானதாகவும், நல்ல நேரங்கள் சிறந்த நேரங்களாகவும் மாற்றப்படுகின்றன.





# கிறிஸ்துவின் சபை என்பது என்ன?

## *WHAT IS THE CHURCH OF CHRIST?*

**G.F. Raines**

**இ**யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுலுக்குப் பிறகு வந்த பெந்தெகொஸ்தே என்னும் நாளில் மாபெரும் பட்டணமாகிய எருசலேமில் கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டதை அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியும் விதமாக, பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்பு பற்றி பிரசங்கித்தார் (மத். 28:18,20; மாற்கு 16:15,16; லூக். 24:46,47).

அந்த சுவிசேஷத்தை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவதினால், அந்த சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிந்தவர்கள், கர்த்தராலே சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:37,47). இன்றும் அதே சுவிசேஷத்தை நீங்கள் கேட்டால், அந்த பெந்தெகொஸ்தே நாளில் திரளான யூதர்கள் எப்படி விசுவாசித்தார்களோ அப்படியே விசுவாசியுங்கள், அவர்கள் எப்படி கீழ்ப் படிந்தார்களோ அப்படியே கீழ்ப்படியுங்கள். கர்த்தரும் அதே சபையில் பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியாத சபையில் உங்களை சேர்த்துக்கொள்வார் (மத். 16:18). ஏனென்றால், தேவன் பட்சப்பாதமுள்ளவரல்லவே. பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரிடத்தில் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்று சொன்னார் (அப். 10:34,35).

கிறிஸ்துவின் சபையானது பெந்தெகொஸ்தே நாளிலே அந்த மூவாயிரம் பேர் எதைச் செய்தார்களோ அதைச் செய்தவர்களை உள்ளடக்கியது: அதன்விளைவாக அந்த மூவாயிரம்பேர் எங்கே சேர்க்கப்பட்டார்களோ அங்கே அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் (எபே. 1:20,23; கொலோ. 1:18). கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாக புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபையார் என்றழைக்கப்படுகின்ற ஆளுகை முறையால் ஒழுங்குபடுத்தப்பட்ட சபைகள் உண்டு (ரோமர் 16:16). நாங்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எப்படி தேவனை ஆராதித் தார்களோ அப்படி தேவனை ஆராதிக்கிறோம் (யோவான் 4:24). முதல் நூற்றாண்டு சபை எந்த வேலையில் ஈடுபட்டதோ அதே வேலையில் தான் நாங்களும் ஈடுபடுகிறோம் (அப். 6:1-6; எபே. 4:14-16; 1 தீமோத். 3:15) ஆகவே, இன்றைய கிறிஸ்துவின் சபை யானது, ஒரு மார்க்கப் பிரிவினை அமைப்பல்ல; இது, புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்ற சபையை பிரதிபலிக்கிறது.

Foy E. Wallace என்பவர் நன்றாகச் சொன்னார் : தவறான கொள்கை, தவறான உபதேசம், தவறான ஆராதனை, தவறான அமைப்பு மற்றும் தவறான பெயர் போன்றவைகள் சரியான சபையை ஏற்படுத்த முடியாது. ஆனால், சரியான கொள்கை, சரியான உபதேசம், சரியான அமைப்பு மற்றும் சரியான பெயர் போன்றவைகள் இருக்கும் போது அது தவறான சபையாக இருக்க முடியாது.

இயேசு கட்டின சபை சம்மந்தமாக வேதாகம போதனையின் வெளிச்சத்தில் நீங்கள் வாழும் இடத்தில் கிறிஸ்துவின் சபையைப் பற்றி விசாரிக்கும்படி மனப்பூர்வமாக உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

கிறிஸ்துவின் சபை மனிதக் கொள்கைகளாலும், விசுவாச அறிக்கையினாலும் ஆளப்பட மறுப்பதற்கான காரணங்களை கவனியுங்கள்.

1. மனித கொள்கைகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு கூட வேறு சில காரியங்களையும் செய்யும்படியாகச் சொல்கிறபடியால், அது விசுவாசிகளுக்கிடையே பிரிவினையை உண்டாக்குகிறது.
2. அவைகள் அவசியமில்லாதவைகள். பரிசுத்த வேத வாக்கியங்களால் நாம் எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதி பெற்றிருக்கிறோம் (2 தீமோத். 3:16,17).
3. அவைகள் தேவ ஆவியினால் ஏவப்படாதவைகளும், இறையியல் யூகத்தினால் விளைந்தவைகளுமாயிருக்கிறது.

கீழ்க்காணும் காரணங்களால், நாம் பின்பற்றும் கிறிஸ்துவின் சுவிசேஷமானது விசுவாசம் மற்றும் நடைமுறைக்கான ஒரே விதியாக இருக்கிறது.

1. கிறிஸ்துவுக்கு சகல அதிகாரமும் உண்டு (மத். 28:18)
2. நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் கிறிஸ்து ஒருவரே (யாக். 4:12)
3. கிறிஸ்துவைப் பற்றும் அறிவினாலே நம்முடைய விசுவாசம் தேவ ஞானத்தில் உறுதிப் படுத்தப்படுகிறது (1 கொரி. 2:1,5).
4. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் (எபே. 1;20,23; கொலோ. 1:18)
5. நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோ. 2:10)
6. நாம் எதைச் செய்தாலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் (கொலோ. 3:17)
7. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அப்பால் போவது பாவமானதாகும் (2 யோவான் 9)

நாம் தேவனுடைய வார்த்தையை தினமும் படிக்க வேண்டும். ஏனென்றால், "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 14:12). " அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளா யிருந்தார்கள் " (அப். 17:11)







# உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்

" இந்நாட்களில் சபையில் மூப்பர் அல்லது கண்காணிக்கும் பொறுப்பில் இருப்ப வர்களின் அதிகாரம் பற்றி அதிகமாக விவாதம் நடந்து கொண்டிருக் கிறது. சிலர் மூப்பர்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை. அவர்களுடைய தலைமைத்துவம் சிறந்த முன் மாதிரியை ஏற்படுத்துவதற்குத்தான் பொருந்தும் என்று நம்புகிறார்கள். வேறு சிலர், மூப்பர் கள் தாங்கள் கண்காணிகளாக இருக்கும் சபையில் அங்கத்தினர்களின் ஆவிக் குரிய நலன் சம்மந்தமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மூப்பர்களுக்கு உண்டு என்று நம்புகிறார்கள். மேலும் சபை அங்கத்தினர்கள் மூப்பர்களின் தலைமைத்துவம் தேவனுடைய வார்த்தையோடு முரண்பாடாத வரை அதற்கு கீழ்ப்படிய கடமைப்பட்டிருக் கிறார்கள் என்று நம்புகிறார்கள்.

இந்தப் பாடத்தைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசிக்கும்படியாக அநேக சுவாரஸ்யமான வசனப்பகுதிகள் காத்திருக் கின்றன. (I தீமோத். 3:1–7; தீத்து. 1:5–11; அப். 20:28; I பேதுரு 5:1–4) நீங்கள் எபிரெயர் 13:17 யையும் பரிசீலனை செய்து பார்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களாக படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதை செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படி செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே ". நாம் யாதோ ஒருவருக்கு கீழ்ப் படிய வேண்டும் என கட்டளையிடப்பட்டி ருப்பதை இந்த வசனத்திலிருந்து நாம் அறிகிறோம். இந்த வசனப்பகுதி சபையின் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிவதுக் குறித்துப் போதித்தால் நேர்மையான இருதயங்களில் மூப்பர்களின் அதிகாரம் சம்மந்தமான குழப்பங்கள் என்றென்றும் இல்லாதபடி தீர்த்து வைக்கப்படும்.

இங்கே கீழ்ப்படிதல் என்கிற வார்த்தை கிரேக்க பதமான " பெய்தோ " விலிருந்து வந்திருக்கிறது. தேயர் அகராதி யின்படி " கட்டுதல் " என்று பொருள்படும்.

இந்த வசனப்பகுதியில் குறிப்பாக இது கவனித்தல், கீழ்ப்படிதல், இணங்குதல், ஒத்திருத்தல் போன்ற பொருட்களைக் கொடுக்கும்.

ஆனால், இந்த வசனப்பகுதியின் படி கீழ்ப்படிய நாம் யார்? நம்மை நடத்துகிறவர்கள், நம் ஆத்துமாக்களுக்கு உத்தர வாதம் பண்ணுகிறவர்கள் யார்? நம்மை நடத்துகிறவர்களைப் பற்றி எபிரெயர் 13 ஆம் அதிகாரத்தில் வேறு இரண்டு வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. " தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடவடிக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (வசனம் 7); " உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள்" (வசனம் 24).

அப் 20:28ல் எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு புத்திமதி சொல்லும் போது இவ்விதமாகச் சொல்கிறார். " ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் ". மூப்பர்கள், சரியாக கண்காணிகள் என்று விவரிக்கப் படுகிறார்கள், மற்றவர்களால் செய்யப் படும் வேலைகள் சரியான முறையில் செய்யப்படுகிறதா என்று கண்காணிக்கும் பொறுப்பு மூப்பர்களுக்கு கொடுக்கப் பட்டிருகிறது. புதிய ஏற்பாட்டு சபையில் மூப்பர்கள் அவ்விதமாகத் தான் விவரிக்கப் படுகிறார்கள்.

மூப்பர்கள் மந்தைக்கு மாதிரியாக இருப்பதன் மூலம் வழிநடத்தினாலும் (I பேதுரு 5:3) அவர்கள் கண்காணிகளாக இருந்தும் நம்மை வழி நடத்துகிறார்கள். மந்தையில் அங்கத்தினர்களாக இருக்கும் நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த போதனைக்கு விதிவிலக்காக நாம் நடந்து கொள்வது தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டதாயிருக்கும் (அப். 5:29) " மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (எபிரெயர் 13:17) மந்தைக்கு கண்காணிகளாக இருக்கும் சபையின் மூப்பர்களைத் தான் தெளிவாக குறிப்பிடுகிறது ".

தேவபக்தியுள்ள மூப்பர்களுக் காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மை நடத்துகிறவர்களை நினைக்கும் தாழ்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருப்போமாக (எபி. 13:7). நாம் அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குவோமாக (வசனம் 17). ஒரு நாளில் அந்த எக்காளச்சத்தம் முழங்கும் போது பிரதான மேய்ப்பனாகிய கிறிஸ்து வரும் போது அவர் விட்டு சென்ற மந்தையை எப்படி கண்காணித்தார்கள் என்பதைப் பற்றி மூப்பர்கள் அவரிடம் கணக்கொப்புவிக்க வேண்டும் (I பேதுரு 5:4). எனவே, மூப்பர் தங்கள் பணியைத் திறம்பட செய்ய நாம் அவர்களுக்கு கரம் கொடுப்பமாக. அப்போது அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்ய வேண்டும். ❖

***நம்மில் அநேகருக்கு மிகப்பெரிய ஆபத்து, நம் இலக்கு உயர்வானதாக இருந்து நாம் அதை அடையத் தவறுகிறோம் என்பதல்ல, மாறாக, நம் இலக்கு தாழ்வாக இருந்து நாம் அதை அடைவதினால் தான் மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது.***





# " அந்தியோகியா சபை "

*V. Dhaniel Durairaj*

**ஆ**ரம்ப கால சபை யூதர்களால் மட்டும் நிறைந்திருந்தது. கொர்நெலியுவின் வீட்டார் இரட்சிப்பைப் பெற்றதும் புறவினத்தாருக்கு சுவிசேஷம் சொல்லப்பட்டது. அந்தியோகியா சபையில் யூதர்களுமிருந்தனர், புறவினத்தாரும் இருந்தனர்.

எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் இவைகளைக் குறித்து கேள்விப்பட்டதும், வளர்ந்து வரும் கிறிஸ்துவின் ராஜ்யமான சபையில் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடுமே என்று அஞ்சினர். காரணம், அந்தியோகியா சபையில் இருந்த இரு பிரிவினரும் சண்டையிட்டு, அதனால் குழப்பங்கள் வந்து, அநேகர் சபையை விட்டு வழுவிப் போகக் கூடுமென்று அவர்கள் " ஆறுதலின் மகன் " என்று அழைக்கக்கூடிய பர்னபாவை அந்தியோகியாவிற்கு அனுப்புகின்றனர். அப். 11:22ல் " ..... அந்தியோகியா வரைக்கும் போகும்படிக்கு பர்னபாவை அனுப்புகிறார்கள். பர்னபா சுவிசேஷத்தை மட்டும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதிலே கருத்தாய் இருந்தார். அரை குறை சத்தியத்தை வியாபாரம் செய்து அவர்களை கேட்டுக்குப் பாத்திரராக்க அவர் விரும்பவில்லை. அப். 11:23ல் " அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு கர்த்தரிடத்தில் மன நிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லோருக்கும் புத்தி சொன்னான் ". நின்று கவலைப்படுவதை விட்டுவிட்டு தேவனுடைய கிருபை சபையில் எப்படியாய் செயல்படுகிறது என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

**1. பர்னபா அந்தியோகிய சபையில் எதைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினார்?**

எந்த சமயத்திலும் ஜனங்கள் தேவனுடைய கிருபைக்கு பாத்திரராய் நடந்தார்கள். தீத்து 2:11,12ல் பவுல் சொல்லுகிறார். " ....ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி.... " என்று குறிப்பிடுகிறார். புறவினத்தாருக்கு பழைய ஏற்பாடும் தெரியாது. அதனுடைய மதிப்பீடும் தெரியாது அப்படியிருந்தும் அவர்கள் எதைக் கொண்டு கட்டுப்பாடுடன் வாழ்ந்தார்கள். கண்டிப்பாக சட்டத்தைக் கொண்டல்ல. மாறாக, தேவ கிருபையைக் கொண்டே அவர்களுடைய வாழ்க்கை இயேசு கிறிஸ்துவை பிரதிபலித்தது.

இன்றைய போதகர்கள், இந்த தேவ கிருபையில்லாமல் மனிதன் மாற்றமடைய வேண்டுமென்று விரும்புகின்றனர். சபை சட்டதிட்டங்களைக் கொண்டும், மனித கோட்பாடுகளை கொண்டுமே அவர்களை அடக்கி ஆள முயற்சிக்கின்றனர். புது விசுவாசிகள் வேரூன்றப்படாமலிருக்கும் போதே இப்படி அவர்களை இறுமாப்பாய் ஆளுகின்றனர். மனித கொள்கைகள், மனிதனுடைய செயல்களை ஒரு போதும் கட்டுப்படுத்தாது. இவைகள் கேட்க நன்றாக இருக்கும். ஆனால், மனித செயல்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வராது. வாசித்து பாருங்கள் " கொலோ. 2:20,23 " வரை மாறாக மனிதனின் கிரியைகளை மாற்றத்தக்கது தேவ கிருபையே என்கிறார் பவுல்.

**2. பர்னபா அந்தியோகியா சபையில் மனத் தாழ்மையைப் பார்த்தார்**

வித்தியாசப்பட்ட மத நம்பிக்கையுடையவர்களைக் கொண்டு வந்து சபையில் எப்படி சமாதானமாக நடத்திச் செல்ல முடியும். சிலருக்கு தங்கள் வழியே சிறந்தது யூத

வழி. சிலருக்கு தங்கள் பாதைதான் சிறந்தது கிரேக்க வழி. இப்படியிருந்த இரு திறத்தாரையும் ஒரே சரீரமான சபைக்குள் ஒன்றுபடுத்தியது எது?

" கிருபை " 2 தீமோ. 1:9ல் அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல் தம்முடைய தீர்மானத்தின்படியும். " ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார் ". பவுல் சொல்லுகிறார். நம்முடைய தகுதியினாலோ நம்முடைய செயல்பாடுகளினாலோ அவர் நம்மைத் தெரிவு செய்யாமல் கிருபையினாலே நம்மை தெரிந்து கொண்டாராம். இது தேவ சித்தத்தின்படியானது மனித சித்தத்தின்படியானதல்ல " கிருபை " என்பது ஒரு சிறந்த " சமநிலைப் பிரமாணம் ". நாம் யாராக இருந்தாலும் பணக்காரனோ, ஏழையோ, சுயாதீனனோ, அடிமையோ, ஆணோ, பெண்ணோ கிருபையினால் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டிருக்கிறோம், அந்த ஒரே சரீரத்திற்குள் நிலை நிற்கிறோம்.

பவுல், ரோமருக்கு எழுதும்போது கூட, " அல்லாமலும் எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும் " (ரோமர் 12:3).

இந்த மனத்தாழ்மையை பர்னபா அந்தியோகியாவில் பார்த்தார். அவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோமென்றும் அந்த கிருபை அனைவருக்கும் பொதுவானது என்றும் அறிந்து கொண்டபடியினால், உயர்வு, தாழ்வு, கவலை அவர்களுக்குள் வரவேயில்லை. தங்களைக் கொண்டு மற்றவர்களை அளந்து பார்க்கும் மனப்பான்மை அங்கு எழவேயில்லை. இந்த விஷயத்தில் யூதர்களுக்கு ஒன்று விளங்கியது. " குழந்தை பருவத்திலிருந்து தேவனை ஏற்றுக் கொண்ட நம்மைப் பார்க்கிலும், விக்கிரக வழிபாட்டிலிருந்து சமீபக் காலத்தில் வந்து, ஞானஸ்நானம் பெற்ற இந்த புறசாதியினர் எவ்வளவோ மேலானவர்கள் என்று புரிந்து கொண்டனர். தேவன் கிருபையினால் நம்மை மனத்தாழ்மை உள்ளவர்களாக மாற்றுகிறார் ".

**3. அந்தியோகியா சபையில், பர்னபா தாலந்துகளைப் பார்த்தார்.**

அந்தியோகியா சபையில் வித்தியாசப்பட்ட தாலந்துகளைக் கொண்டவர்களை பர்னபா பார்க்கின்றார். அப். 13:1-ல் " அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் எனப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், கால்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தார்கள். தேவன் கிருபை எங்கு அதிகமாயிருக்கிறதோ அங்கே தாலந்துகளும் வல்லமையும் மகத்தானதாக இருக்கும். கிருபை ஒரு சபையில் அதிகமாகக் காணப்படும் போது அநேகர் அநேகவிதமான தாலந்துகளினால் நிரம்பி காணப்படுவார்கள். அந்த சபையும் ஒரு உறுதியான சபையாக விளங்கும். பிற்காலங்களில் பேதுரு, இந்த தாலந்துகளை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று விவரமாக சொல்லியிருக்கிறார். 1பேதுரு 4:10ல் வாசித்துப் பாருங்கள். சிலருக்கு ஊழியம் செய்யும் தாலந்து, சிலருக்கு உடல் பிரயாசம், சிலருக்கு போதிக்கும் தாலந்து, சிலருக்கு பாடும் தாலந்து போன்றவை என்னுடைய தாலந்துகளோடு உங்களுடைய தாலந்துகளை மோதவிட்டு, கவலைப்பட்டு உட்கார்ந்திருப்பதை விட்டு, சபைக்காக நான் செயல்படும் போது, தேவ சித்தம் நிறைவேறுகிறது. கிருபை என்னில் நிலை கொண்டிருக்கிறது.

**முடிவாக :** நீங்கள் இயேசுவைப் போலாக வேண்டுமென்று விரும்பினால், தேவனுடைய கிருபைக்குள்ளாக இப்பொழுதே வாருங்கள் தேவனுடைய நன்மைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.





# இச்சையடக்கம்

## SELF CONTROL

**B. ARJUNAN**

**இ**ச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் நலமான காரியங்களை ஏற்படுத்தும். நம்முடைய ஆதித்தாய் தகப்பன் இச்சையடக்கம் இல்லாதபடியால் தேவன் விலக்கி வைத்திருந்த கனியை இச்சித்து அதை பறித்து புசித்து பாவிகளாக மாற்றப்பட்டனர். இச்சையடக்கத்தைக் குறித்து தேவன் ஆதிமுதலாகவே போதித்துக் கொண்டு வந்தார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது; "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை " என்கிறார் (கலா. 5:22,23). இந்த ஆவியின் கனிகளில் ஒன்றுதான் இச்சையடக்கம். ஆவிக்குரியவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமாய் வாழ பிரயாசம் கொள்ளுகின்றனர்.

நீங்கள் ஆவிக்குரியவர்களா அல்லது மாம்சத்திற்குரியவர்களா? " மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன : விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்கிறேன் " என்றார் (கலா. 5:19,21). ஆவியின் கனிகள் ஒன்பது என்று பார்த்தோம். ஆனால், மாம்சத்தின் கிரியைகள் பதினேழு என்று பார்க்கிறோம். ஆவியின் கனிகளைக் காட்டிலும் மாம்சத்தின் கிரியைகள் அதிகமாக இருக்கிறது. அதைப்போல உலகத்தில் பாவம் பெருகி இருக்கிறது. ஆனால், பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகியுள்ளது என்பது மிகவும் ஆசீர்வாதமான ஒன்றாக இருக்கிறது. இந்த கிருபையைப் போக்கடிக்கக்கூடியவர்கள் பெருகி இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. " மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது என்று வேதம் போதிக்கிறது. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது " (கலா. 5:17). ஆம், இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. நாம் நலமான காரியங்களை செய்ய விரும்புகிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் மாம்சம் ஒத்துழைக்காமற்போகிறது. பின்பு மனஸ்தாபப்படுகிறோம் அல்லது வேதனை அடைகிறோம். அந்த சமயத்தில் அதை செய்திருந்தால் எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும் என்று நினைக்கிறோம். அது ஆவிக்குரிய

சிந்தையாக இருக்கிறது. அதை செய்யாதபடி மாம்சம் தடையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் மாம்சபிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் நடக்க முடியாது. அப்படி நடந்தால் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது. அவன் வெறும் பெயர் கிறிஸ்தவனாகவே இருக்க முடியும். ஏனெனில், கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என திருமறை அவர்களைக் குறித்து சாட்சி கொடுக்கிறது (கலா. 5:24). நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருப்பீர்கள் என்றால் உங்களில் இச்சையடக்கம் இருக்க வேண்டும். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும்.

மேலும், இச்சையடக்கத்தைக்குறித்து பவுல் போதிக்கும்போது; அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது, நீ போகலாம். எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் " என்றான் (அப். 24:25). அநேகருக்கு இச்சையடக்கத் தைக் குறித்து போதித்தால் பய உணர்வு உண்டாகிறது உண்மைதான். நாம் எப்படி தேவனுடைய பார்வையில் நிற்கப்போகிறோம் என்ற பயஉணர்வு. தேவன் நன்மை யானாலும், தீமையானாலும் நியாயத்தீர்ப்பிலே கொண்டுவந்து நிறுத்துவார் என பிரசங்கி சொல்கிறான். தேவனுக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை. ஆகையால், இச்சையடக்கத்தைகுறித்து பேசும்போது அநேகர் அந்தப்போதனையில் நிலைத்திருக்க முடியாமல், தங்களுக்கு ஏற்ற போதகர்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். மேலும், யாக்கோபு சொல்கிறார்; " உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமை யுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்கு சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறை வேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடி யினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள் " என்கிறார் (யாக். 4:1,3). யூதாஸ் இந்தவிதமான இச்சையுடையவனாக இயேசுவின் சீஷர்களில் ஒருவனாயிருந்தான். ஆகையால், பிசாசு அவனுக்குள் புகுந்தான். பின்பு இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி சமயம் தேடிக் கொண்டிருந்தான் என்று லூக். 22ம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

இச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் வெற்றியைக் கொண்டுவரும். ஆகையால், பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; " பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவா னென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் " (1 கொரி. 9:24,25). உலகத்திலே அநேக ஓட்டப்பந்தய வீரர்களை நாம் அறிகிறோம். அவர்கள் எப்படியாவது ஓட்டப் பந்தயத்தில் பரிசை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓடி பரிசை பெற்றுக் கொள்ளு கிறார்கள். இப்படி ஓடக்கூடிய ஒரு பெண்மணியை எப்படியாவது இந்த ஓட்டப்



பந்தையத்தில் இருந்து தோற்டிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அதை பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள் தங்க முலாம் பூசப்பட்ட ஆப்பிள் பழங்களை அவள் ஓடிவரும் வழியில் உருட்டி விட்டார்களாம். அதைப் பார்த்த அந்த வீராங்கனை பார்வை யாளர்கள் நமக்கு நல்ல வெகுமதி கொடுக்கிறார்கள் என நினைத்து அவைகளை இச்சித்து எடுக்க ஆரம்பித்தாள். அவள் பந்தயத்தில் கொடுக்கும் பரிசை காட்டிலும் இது விலையேறப்பெற்றது என எண்ணினாள். அவளுடைய இச்சை அவளுடைய பந்தயப் பொருளை இழக்கச் செய்தது. மற்ற வீராங்கனை பரிசை பெற்றாள்.

அன்பானவர்களே. நாமும் கூட சிலவேளைகளில் பிசாசு நமக்கு முன்பாக வைத்திருக்கிற சில ஆசைகளுக்கு அடிமையாக அவைகளை இச்சிக்க ஆரம்பிக்கிறோம். முடிவில் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற்றமடையாமல் பின்னோக்கி தள்ளப்படு கிறோம். இதற்கு நாமே பொறுப்பாளியாகிறோம். உலகத்தில் அநேகர் இவ்விதமான இச்சைகளுக்கு தங்களை ஒப்புவித்து வழிவிலகிப்போகிறார்கள். " நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப் பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத் துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் " (ரோமர் 7:5,6). மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் மரணத்துக்கு ஏதுவான கனிகளை கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இப்பொழுது அவைகளிலிருந்து விடுதலை யாக்கப்பட்டு புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யும்படி, அதாவது நம்மை கட்டி யிருந்த நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு புதிதும் ஜீவனுமான மார்க்கத் திற்கு திருப்பப்பட்டுள்ளோம். நாம் இனி அவைகளுக்கு அடிமையானவர்களல்ல அதினின்று விடுதலையாக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். " ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர் களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங் களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப் பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால். பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது " (ரோமர் 6:12,14). இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள், ஞானஸ்நானத்திலே அவரோடு எழுப்பப்பட்டவர்கள் மத்தியில் பாவம் ஆட்சி செய்ய இடம் கொடுக்கக்கூடாது. உங்களுடைய சரீரம் கிறிஸ்துவின் அவயவங்களாயிருக்கிற படியால் அவைகளை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் இப்பொழுது நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல கிருபைக்குக் கீழான வர்களாக இருக்கிறோம். இப்படியிருக்கும்போது பாவம் நம்மைமேற் கொள்ளாது.

இன்று அநேகர் பாவத்தை ஜெயிக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் தவறான எண்ணங்கள் என்னுடைய நினைவில் வந்து கொண்டேயிருக்கிறது. அதை என்னால் மேற்கொள்ளமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அன்பு வாசகரே, நீங்கள் இயேசுவின் மூலம் மீட்கப்பட்டவர்களாயிருந்தால் பாவத்திற்கு இடமில்லை.

பாவம் உங்களை மேற்கொள்ளமுடியாது. உங்களுடைய அஸ்திபாரம் சரியில்லையென்றால் பாவம் உங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவின் மீது உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை துவக்குங்கள், மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். " ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங் கொள்ளுகிறவ னெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது " எனகிறார் (வெளி. 2:7). இச்சையடக்கத் தோடு இருந்து போராடும் அனைவருக்கும் இக்கனியைக் கொடுப்பார். நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக நிலைத்திருந்து போராடுங்கள்.

## இச்சையோடு இருக்கிறவன் முடிவில் காப்பாற்றப்படுவானா?

" உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் " (1 யோவான் 2:17). ஆம், உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். ஏனென்றால், இவைகள் பிசாசினால் உண்டானவைகள். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். ஆகையால், அவைகள் அழிக்கப்படும். மாம்சத்தின் இச்சையை ஒருவன் விட்டுவிடாதிருப்பானேயானால் அவனும் அழிக்கப்படுவான். அவனோடு சேர்ந்தவர்களும் அழிக்கப்படுவார்கள். அதுவரை இந்த வானமும் பூமியும் காக்கப்பட்டிருக்கிறது. இந்த அழிவுக்கு தப்பிக்கொள்ள ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனாக மாறுங்கள். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது தேவனுடைய வசனத்தை ஏற்று, அதன்படி உங்களை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ❖

## வேலைக்கு ஆட்கள் தேவை

நாம் பெரும்பாலும் விரும்பாத வேலையை, மற்றவர்களுக்காகச் செய்ய ஆட்கள் தேவை. மற்றவர்களிடத்தில் கருணைகாட்டுகிறவராயும், தேவனுடைய பார்வையில் உத்தமராயும் இருக்க வேண்டும்.

வேலைக்காரருக்கெல்லாம் வேலைக்காரராயிருக்கிற வரை தனிப்பட்ட முறையில் பரிச்சயப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவர் கொடுத்த பயிற்சியைத் தொடர முடியும். தன்னுடைய உரிமைகளை பிறருக்கு விட்டுக்கொடுக்கிறவராயிருக்க வேண்டும். அனுபவம் தேவை இல்லை. நீங்கள் இருக்குமிடத்திலேயே வேலையை இன்றே தொடங்குகிறது.





# சந்தோஷத்தின் பொருட்டு

# *For the Joy of It*

***Bill McFarland***

### Hebrews 12:2 (எபிரெயர் 12:2)

எபிரெய எழுத்தாளர் தம்முடைய வாசகர்களுக்கு, எப்போதும் *விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இயேசுவையே நோக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று புத்திமதி கூறுகிறார்* (எபி. 12.2).

தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு என்கிற சொற்றொடரைக் கவனியுங்கள். அது சந்தோஷத்தின் நீடித்திருக்கும் வல்லமையை உட்பொருளாகக் கொண்டுள்ளது. இயேசு தமக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு பாவிகளின் பகைமை உணர்வையும், சிலுவை மரணத்தினால் தாழ்மைப்படுத்தப்பட்டதையும் சகித்தார். சந்தோஷத்தால் ஊக்கப்படுத்தப்படும் ஒருவர் பெரிய காரியங்களைச் செய்ய பெலனைக் கண்டடைகிறார்.

ஆனால், *தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு என்பதன் பொருள் என்ன?* இங்கே எழுத்தாளர் கர்த்தர் விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவரும் என்று சொல்கிறார். அந்த விசுவாசத்தினால் தான் நாம் தேவனிடத்தில் வருகிறோம். கர்த்தர் தம் கிரியைகளை முடித்து விட்டு பிதாவினுடைய வலது பாரிசத்தில் உட்காருகிறதைத்தான் சந்தோஷம் என எபிரெய எழுத்தாளர் குறிப்பிடுகிறார். இயேசு பிதாவின் சித்தத்தைச் செய்யவும், இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் (யோவான் 6:38; லூக்கா 19:10). அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதே அவருக்குச் சொல்ல முடியாத சந்தோஷமாகவும், முழுமையான மகிமையாகவும் இருந்தது.

இன்று அதே விதமாக *நமக்கு முன்பாக சந்தோஷம் வைக்கப்பட்டால் என்ன செய்வோம்?* பிதாவின் சித்தத்தை செய்து மக்கள் அவரிடத்தில் வர உதவி செய்வது நமக்கு உண்மையான மகிழ்ச்சியாக இருக்கிறதா? நம் அருமையான தேவனை ஆராதிப்பதும், சக மனிதர்களுக்குச் சேவை செய்வதும் நாம் சந்தோஷமாக செய்த காரியங்களாக இருந்தால் எப்படியிருக்கும்?

நாம் சாத்தியம் என நினைத்ததை விட அதிகமாகச் செய்ய நமக்கு பலன் கிடைக்கும் என நம்புகிறேன். வெற்றி கிடைக்கும் வரை நம்மால் சகித்துக் கொள்ள முடியும்.

அநேகமாக சபையானது அதன் சொற்ப சந்தோஷத்திற்காக சில காரியங்களையும், நீடித்த சந்தோஷத்திற்காக சில காரியங்களையும் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இயேசு எங்கே சந்தோஷத்தைக் கண்டாரோ அங்கே சந்தோஷத்தைக் காண்கின்ற இருதயங்கள் நமக்குத் தேவை. ❖



# தேவனுக்கு ஸ்தோத்திரம்

## " THANKS TO GOD "

***Betty Tucker***

Hong Kong ல் பயன்படுத்தப்படும் சீன / ஆங்கில கிறிஸ்துவப் பாடல் புத்தகத்தில் " தேவனுக்கு நன்றி " என்கிற பாடல் இடம் பெற்றிருக்கிறது. அது ஒரு ஸ்தோத்திரப் பாடல். ஒவ்வொரு முறை நாங்கள் அதைப் பாடும்போதும் அப்பாடலில் இடம்பெற்றிருக்கும் வரிகளின் அழகை நாங்கள் ஆழ்ந்து சிந்திக்கிறோம். இக்கட்டுரையில் அப்பாடல் வரிகளில் அடங்கியிருக்கிற வார்த்தைகளை அலசி ஆராய்ந்து, பயனுள்ள உண்மைகளை சேகரிப்பது நம் நோக்கமாகும்.

### ஆசீர்வாதங்களுக்காக ஸ்தோத்திரம்

ஒன்றாம் சரணம் நேசப் பிதாவிடமிருந்து இறங்கி வரும் நன்மையான ஈவுகளை ஒன்றன்பின் ஒன்றாக விவரிக்கிறது.

" மேலே உம்முடைய கிருபாசனத்திலிருந்து இறங்கிவரும்
எல்லையில்லா இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்;
உம்முடைய அன்பின் நிறைவிலிருந்து சந்திக்கப்பட்ட
எல்லாத் தேவைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!
அனுதின கடின உழைப்புக்காகவும், பிரயாசத்திற்காகவும்
ஓய்வுக்காகவும், இளைப்பாறுதலுக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்!



நண்பர்கள் மற்றும் அயலகத்தாருடைய அன்பிற்காகவும்
எல்லோர் மீதும் நீர் பொழியும் நன்மைக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் "

அனுதினப் பாடுகளுக்காக, பிரயாசத்திற்காக... சாயங்காலமாகும்போது கிடைக்கும் இளைப்பாறுதலுக்காக நன்றியுள்ள மனநிலையுடன் காணப்படுவதை நாங்கள் பாராட்டுகிறோம். (பிரசங்கி. 5:12) " வேலை செய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும், அதிகமாய் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும். இந்த விலையேறப்பெற்ற பாடத்தை வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே கற்றுக் கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். பகல் வேளையில் நாம் படும்பாடுகளால் தான் தூக்கத்தின் மூலமாக இரவு வேளையில் நமக்கு உண்மையான நிம்மதி கிடைக்கிறது. தேவன் நமக்குத் தந்திருக்கிற நாளை விளையாட்டுத்தனமாக செலவழித்தாலோ அல்லது சோம்பலில் கழித்தாலோ இளைப்பாறுதலில் உண்மையான இன்பத்தை உணர முடியாது.

### பாடுகளுக்காக ஸ்தோத்திரம்

பாடலின் அடுத்த சரணம் சிந்தனையைத் தூண்டுகிற ஒன்றாக இருக்கிறது, அச்சரணத்திலுள்ள பாடல் வரிகளை நம்மில் சிலர் பாடத் துணியமாட்டோம்.

" முட்களுக்காகவும், ரோஜாக்களுக்காகவும் கூட ஸ்தோத்திரம்
பெலவீனத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஸ்தோத்திரம்
மேகங்களுக்காகவும், சூரிய ஒளிக்காகவும் ஸ்தோத்திரம்
வறுமைக்காகவும், செல்வத்திற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்
அனுதினமும் நீர் தருகின்ற வலிக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் ஸ்தோத்திரம்
எங்கள் அரும்பெரும் பொக்கிஷமாகிய உம் வசனம் எங்கள்
பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம் "

முட்களில்லாமல் ரோஜாவை நாம் பெறமுடியாது என்று நம்முடைய ஆவிக்குரிய முதிர்ச்சி நமக்கு உணர்த்துகிறது. ஆகவே, குத்துகின்ற முட்களுக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று ஞானம் நமக்குச் சொல்கிறது. ஆதாம் அந்த அழகான தோட்டத்தில் பாவம் செய்யாதிருந்தால் மனித இனம் இந்தப் பயங்கரமான வார்த்தைகளை ஒருபோதும் கேட்டிருக்காது. பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் " (ஆதி. 3:17,18).

நம்மில் பலர் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே நம் சரீரத்தில் பெலவீனம் உண்டாவதற்கான காரணங்களை நாம் உணர்ந்துவிட்டோம். பெலவீனமான மனித இனம் அனுதின அலுவல்களில் சிக்கிக் கொண்டிருக்கிறபடியால் வியாதிப்படும் நேரங்கள் நமக்கு அவசியமான ஒன்றாகி விட்டது... தேவனைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும், நம் ஒழுக்க நெறிகளை மறுபடியும் சிந்தித்துப் பார்க்கவும், பரலோகத்தின் மீது நம் சிந்தையைச் செலுத்தவும் நமக்கு அமைதியான நேரம் தேவைப்படுகிறது.

" சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ஆனால், அந்த வாக்குத்தத்தமானது ரோமர் 8:28ன் பிற்பகுதியை முற் 'லுமாகச் சார்ந்திருக்கிறது. " தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு" என்பது தான் அந்த பிற்' 'குதி.

பாடுகளின் படுக்கையிலிருந்து உச்சநிலையை அடைந்தவர்களை நீங்கள் எத்தனை முறை பார்த்திருக்கிறீர்கள்? இரண்டாம் சரணத்திலள்ள நான்காம் வரி " வறுமைக்காகவும், செல்வத்திற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் " என்று சொல்கிறது. இது பவுலின் உணர்வு மிக்க வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகிறது. " ஏனெனில், நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் " (பிலி. 4:11). இந்த ஆவிக்குரிய நிலையை எட்டும் அளவுக்கு நாம் வளர வேண்டும், வாழ்க்கையில் சில காரியங்களை நாம் மாற்ற முடியாது என்பதால் அவைகளை நாம் ஏற்றுக் கொண்டு பாடுகள் இருந்தாலும் கடந்து நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டும்.

வலி மற்றும் மகிழ்ச்சியை இரண்டாம் சரணத்தின் ஐந்தாவது வரி குறிப்பிடுகிறது. கடினமான நேரங்கள் உடனோ அல்லது கொஞ்ச காலம் கழித்தோ நம்மெல்லாருக்கும் வரும். நம் துக்கங்களையும், துயரங்களையும் அப்போஸ்தலனாகிய பவுலின் மன நிலையுடன் நாம் ஏற்றுக்கொள்வோம். பவுல் தன் சரீரத்திலிருந்த முள்ளினிமித்தம் அது நீங்கிப் போகும்படியாக மூன்று முறை ஜெபித்தபோது தேவனால் அவருக்கு இப்படிச் சொல்லப் பட்டது. " என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12:9). அதன்பின்பு, சிலுவையின் அப்பழம்பெரும் வீரன் நடைமுறையில் இன்னும் அநேக பெலவீனங்களைக் கேட்டார். " ....அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன் " (வசனம் 10).

ஏழாவது வரியில், தேவனுடைய வார்த்தைக்காக நன்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது நம் இருதயத்தில் வைக்கப்பட வேண்டும் (சங். 119:11). உபாகமம் 6:7ல் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு தேவனுடைய போதனைகளைப் பேசும்படியாக கட்டளை கொடுக்கப்பட்டது. "...நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப்பேசு என்று. " நாம் அதை விடக் குறைவாகச் செய்ய இயலுமா?.

### எல்லா நன்மையான காரியங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்

இந்த ஸ்தோத்திரப் பாடல்களின் உச்சக்கட்டமாக மூன்றாவது சரணம் அமைந்துள்து. இது தேவனைப் போற்றும் மனநிலையில் பாடப்பட்டுள்ளது. இந்த பாடல் வரிகளை எழுதினவருக்கு நம் வாழ்க்கையில் எது நன்மையானது,, எது அழகானது என்பது பற்றிய ஆழமான உணர்வு இருந்திருக்கிறது. இம்மூன்றாவது சரணத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிற என்றென்றும் இருக்கிற தேவனுடைய குணத்தை கவனியுங்கள்.

" ஓ தேவனே அன்றன்றுள்ள அப்பத்தை நாங்கள் பகிர்ந்துகொள்ள
வீட்டையும், அப்பத்தை உண்டாக்க நெருப்பையும் தந்தமைக்காக ஸ்தோத்திரம்
எங்கள் ஆத்துமாக்கள் போஷிக்கப்படத்தக்க இனிமையான
ஐக்கிய நேரங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!
துக்கமான நேரங்களில் நீர் தந்த கிருபைகளுக்காகவும்
உம்மில் இருக்கும் சந்தோஷம் மற்றும் சமாதானத்திற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்
இன்று, நாளை மற்றும் சதாகாலங்களுக்கான நம்பிக்கைக்காக
உமக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்!







# என்னை விசாரிப்பார் யாராவது உண்டா?

## DOES ANYONE CARE ME?

***Leon Barnes***

தனக்குத்தானே பரிதாபப்பட்டுக் கொள்ளுகிற வேளைகள் ஒன்றின் போது, தாவீது. " என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை " (சங். 142:4) என்று கதறுகிறார். நீங்கள் எப்போதாவது அப்படி உணர்ந்த துண்டா? சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய அலுவலகத்தில் ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள் பல காரியங்களினால் மிக ஆழமான முறையில் கலங்கிப் போயிருந்ததைக் கண்டேன். அப்பெண்ணிடம் பேசுவதற்கும், அவளோடிருப்பதற்கும் யாராவது இருந்தார்களா என்று கேட்டேன். அதற்கு அவள், " நான் உயிரோடிருக்கிறேனா அல்லது செத்துப் போனேனா என்று விசாரிப்பதற்கு கூட எனக்கு யாருமில்லை " என்று விரக்தியோடு சொன்னாள்.

என்ன ஒரு சோகமான நிலை. அந்த பெண் சொன்னது உண்மையா அல்லது பொய்யா என்பது அவ்வளவு முக்கியமல்ல. நம்மை விசாரிப்பதற்கு யாருமில்லை என்று நாம் உணர்ந்தாலே அது உண்மையாகவே ஒருவரும் நம்மை விசாரியாமல் போனால் எந்த அளவு வலியைக் கொடுக்குமோ அதே வலியை நமக்கு அது கொடுக்கும்.

இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அவரை அடையாளப்படுத்திய பண்புகளுள் ஒன்று அவர் ஜனங்கள் மீது மனதுருக்கம் கொண்டவராக இருந்தார் என்பது. மத். 9:36,38 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கிறது. " அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி; அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் " என்றார். இயேசு மனதுருக்கம் உடையவராக இருந்திருக்கிறார். அவர் தம்மைப் பின்பற்றுபவர்களும் மனதுருக்கம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அதேபோல், அதே இரக்கக் குணத்தோடு கூடிய வேலையாட்களை தேவன் அனுப்பும்படி அதற்காக தம்மைப் பின்பற்றுபவர்கள் ஜெபிக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்.

தேவன் விசாரிக்கிறவராயிருக்கிறார். " அவர் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிறபடியால் நம் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடலாம் " (1 பேதுரு 5:7). இதன் பொருள், நாம் அவரைப் போல் இருக்க வேண்டுமென்றால், அவர் விரும்புகின்ற தன்மையை நாம் கொண்டிருக்க வேண்டுமென்றால், நாமும் விசாரிக்கிறவர்களாயிருக்க வேண்டும். அந்த வகையான இரக்கம் இருதயத்திலிருந்து வரவேண்டும்.


குற்றம், கொடூரம் மற்றும் பேராசை போன்றவற்றால் சீரழிந்துப் போயிருக்கிற இவ்வுலகில் ஒருவர் இவ்வுலகம் ஏற்படுத்திய வேதனையால் உணர்வற்றவராகி, பூட்டப்பட்ட கதவுக்குப் பின்னால் மறைந்து கொண்டு தன் மனதை இறுக்கிக் கொள்ள முடியும். ஆனால், நாம் இயேசுவைப் பின்பற்ற விசாரிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் விசாரிக்கும் போது செயல்பாடுகள் இரக்கத்தைப் பின் தொடரும். நம் மனது உருகாதபடி அதை நாம் அடைத்து வைத்தால், அது அன்பை உணராதபடி நாம் அடக்கி வைப்பதாகவே ஆகிவிடும். ❖

**கொஞ்சம் சிரியுங்களே!** நீதி. 17 : 22

**ஒரு ஞாயிறு ஆராதனையில், பிரசங்கியாரின் நீண்ட பிரசங்கத்தால் மிகவும் களைப்படைந்தவனாய், தன் அம்மாவின் காதில், " *நாம் இப்போ அவருக்குக் காணிக்கை கொடுத்தால், பிரசங்கத்தை நிறுத்தி விடுவாரா?* " என்று கிசுகிசுத்தான்.**







# நான் ஏன், கர்த்தாவே?

## " Why Me, Lord? "

***Billy Joe Gooden***

உடல் நலம், பொருளாதாரம் அல்லது தனிப்பட்டப் பிரச்சனைகள் வரும் போது " நான் ஏன், கர்த்தாவே? என்று எத்தனை முறை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்? அல்லது மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக் கிறீர்கள்? இது ஏன் எனக்கு நடந்தது? இது எனக்கு இப்படி வந்துச் சேர நான் என்ன செய்தேன்? இக்கட்டான வேளைகளில் இது போன்ற கேள்விகள் நம்மால் அடிக்கடி கேட்கப்படுகின்றன.

ஆனால், நம்மில் எத்தனை பேர் இதே கேள்விகளை நம் ஆரோக்கியம், சம்பாதிக்கும் திறமை, பிள்ளைகளுக்காக வீட்டைக்கட்டி அவர்களைப் பராமரிக்கும் திறமை, வீட்டை அன்பு மற்றும் பாதுகாப்பின் இடமாக மாற்றும் திறமை சம்மந்தமாக கேட்கிறோம்? வாலிபர்களில் எத்தனை பேர் தங்களை நேசிக்கிற, தங்களுக்காக அக்கறைப்படுகிற பெற்றோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது சம்மந்தமாக இதே கேள்வியைக் கேட்கிறார்கள்? நான் ஏன் கர்த்தாவே? என் வாழ்வில் இத்தகைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்தேன்?

1994 மே மாதத்தில் நான் ஒரு கடுமையான தசைப்பிடிப்பு நோய் இருப்பதாக கண்டறியப்பட்டு, நரம்பு மற்றும் தசைகள் வெகுவாக பாதிக்கப்பட்டு அசைவற்றுப் போனேன். அப்போது எனக்கு 55 வயது இருக்கும். நான் இரண்டு முதல் ஐந்து வருடங்கள் உயிரோடு வாழ்வேன் என்று எனக்கும் என் மனைவிக்கும் அறிவிக்கப் பட்டது. நிச்சயமாக, இது கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. சில மணிநேரம் கழித்து என் மனைவி என்னிடம், " இது ஏன் உங்களுக்கு நேரிட்டது? " என்று கேட்டாள். இந்த நோய் என்னில் கண்டறியப்பட்டபோது நான் எனக்குள்ளேயே இந்தக் கேள்வியைக் கேட்டேன். என் உடனடியான பதில் " நான் பிறந்ததினால் " என்பது தான். நாம் இவ்வுலகத்தில் எப்போது பிறக்கிறோமோ அப்போதிலிருந்தே மரிக்கவும் தொடங்கிவிடுகிறோம். இவ்வுலகில் நாம் வாழும் ஒவ்வொரு நாளிலும் தேவன் நமக்கு நியமித்திருக்கிற அந்த மரண நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் (எபி. 9:27). ஆதாமும், ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாத போது பாவம் இவ்வுலகத்திற்குள் பிரவேசித்தது. அது வியாதியையும், பாடுகளையும், மரணத்தையும் கொண்டு வந்தது. நாமெல்லோரும் இவைகளோடு போராட வேண்டியதாயிருக்கிறது. ஆனால், நாம் அவைகளை மேற்கொள்ள முடிகிறபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15:57,58).

நண்பர்களே, தயவு செய்து என்னைக் கவனியுங்கள். நாம் வாழ்கின்ற இப்பரப் பரப்பான உலகில் நமக்கு நேரம் அதிகமாக அவசியமாகிறது. துரதிஷ்டவசமாக நம்மில் பலர் உலகத்தின் காரியங்களில் பரபரப்பாக இருந்து, தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கும், தியானிப்பதற்கும் நேரத்தைச் செலவழிக்க மறந்து விடுகிறோம். அதே போல் ஜெபத்தில் தேவனோடு ஐக்கியம் கொள்ள மறந்து விடுகிறோம். நாம் பல காரியங்களை லேசாக எடுத்துக் கொண்டு நாம் எப்படி தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமோ அப்படி செய்யத் தவறுகிறோம்.

" நான் ஏன் கர்த்தாவே? " என்று ஒவ்வொருமுறையும் நான் இந்த கேள்வியைக் கேட்கும் போதும் நான் நன்றியுள்ளவனாயிருக்க வேண்டிய ஓர் ஆசீர்வாதத்தை நினைத்துப் பார்க்கிறேன். உதாரணமாக, எனக்கு இப்போது 57 வயதாகிறது, கடந்த 55 ஆண்டுகள் தேவன் எனக்கு பூரணமான ஆரோக்கியத்தைத் தந்து என்னை ஆசீர்வதித்ததை எண்ணி ஆச்சரியப்படுகிறேன். என்னால் ஓட முடிகிறது, விளையாட முடிகிறது. விளையாட்டு, மீன் பிடி, வேட்டையாடுதல் போன்றவற்றில் பங்கெடுக்க முடிகிறது. மேலும், 36 வருடங்களாக ஒரே கம்பெனியில் வேலைச் செய்ய முடிந்தது. நான் வேலை செய்த நாட்களில் என்னைப் போன்று மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பில்லாததைக் காண முடிந்தது. அவர்களால் நடக்க முடியவில்லை, ஓட முடியவில்லை அல்லது நாம் லேசாக எடுத்துக் கொள்ளும் காரியங்களில் கூட பங்கு பெற முடியவில்லை. நிச்சயமாக எனக்குக் குறை சொல்ல ஒரு காரணமும் இல்லை.

அடுத்ததாக, நானும், என் மனைவியும் சமீபத்தில் கணவன் மனைவியாக 36 வருடங்கள் கழித்ததைக் கொண்டாடினோம். நிச்சயமாக, நான் ஐம்பதாவது, இன்னும் அறுபதாவது ஆண்டு விழாவைக் கூடக் கொண்டாட விரும்புகிறேன். ஆனால், மறுபடியும் " நான் ஏன் கர்த்தாவே?" நான் ஏன் இவ்வளவாக ஆசீர்வதிக்கப்பட்டிருக் கிறேன்? என்று கேட்கும்படி உந்தப்படுகிறேன். சுகத்திலும், சுகவீனத்திலும், மோசமான நேரங்களிலும் நல்ல நேரங்களிலும் என்னோடு இருக்கும்படி அருமையான மனைவியை பெற்றுக் கொண்டதற்கு நான் ஏன் கர்த்தாவே இவ்வளவு அதிர்ஷ்டசாலியாயிருக்கிறேன்?



மேலும், என்னை நம்பி, தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையிலும் விசுவாசம் வைத்து, அந்த பயங்கர தசைப் பிடிப்பு வியாதி என்னைத் தாக்கிய வேளையிலும் மனம் தளராமல் என் கையைப் பிடித்து, " நாம் சேர்ந்து இதை எதிர்த்துப் போராடுவோம் " என்று சொன்ன அருமையான மனைவியைப் பெற்று நான் ஏன் இவ்வளவாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன் கர்த்தாவே?

அதன் பிறகு என் மகள் தேவ பயமுள்ள ஒவ்வொரு தாயும், தகப்பனும் தங்கள் பிள்ளைகள் வளர்ந்து அவர்கள் ஒரு குடும்பமாக ஆவதைக் காண நீண்ட நாட்கள் வாழ ஆசைப்படுவார்கள். மறுபடியும் நான் கேட்கிறேன், " நான் ஏன் கர்த்தாவே " என் வாழ்வில் மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் கொண்டு வரும் அருமையான மகளால் என்னை ஏன் ஆசீர்வதித்தீர்? ஒரு முறை அவள் என் அலுவலகத்தில் " நடனமாடுவது ஏன் தவறானது " என்பதைப் பற்றிய கட்டுரையைப் படிப்பதற்காக என் மேஜையில் ஏறி அதை எடுத்து பின்பு அந்த தலைப்பைப் பற்றிய ஓர் உறுதிப்பாட்டுடன் தன் நண்பர்களுக்கு அதைப் படிக்கக் கொடுத்ததையும் இவ்வேளையில் நான் நினைத்துப் பார்க்கிறேன். இப்போதும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒரு கிறிஸ்தவ கணவனோடு தனி குடும்பமாக அவளைக் காணும்போது ஆசீர்வாதங்கள் தொடர்ந்து என்மீது பொழிவதை என்னால் உணர முடிகிறது.

நான் ஏன் கர்த்தாவே? நான் ஏன் அருமையான இரண்டு பேரப் பிள்ளைகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்? நான் அவர்களிடத்தில் காணும் தூய அன்பு பரலோகத்தில் இருக்கும் பரமானந்தத்தைப் பற்றி என்னை சிந்திக்க வைக்கிறது. இப்போது என் கால்கள் என்னை சுமந்து செல்ல வேண்டிய அவசியமில்லை, என் பேரக் குழந்தைகள் என்னை நாற்காலியில் வைத்து சுமந்து செல்கிறார்கள். மறுபடியும் தொழில்நுட்பத்திற்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அந்த தொழில்நுட்பத்தின் விளைவாகத்தான் இந்த மின் நாற்காலி எனக்குக் கிடைத்திருக்கிறது. அது என்னை வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் கொண்டு செல்கிறது. அதனால் என்னால் பேரக் குழந்தைகளுடன் விளையாட முடிகிறது, ஆராதனையில் கலந்து கொள்ள முடிகிறது.

நானும் என் மனைவியும் இந்த நோயோடு போராடும்போது நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் எங்களை உற்சாகப்படுத்தி எங்களுக்காக ஜெபிக்கவும் தக்கதாக நான் ஏன் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்? என்னால் தொடர்ந்து இப்படிச் சொல்லிக் கொண்டே போக முடியும். ஆனால், போதுமான அளவு சொல்லியாகிவிட்டது. எனவே, அடுத்த முறை எதிர்மறையான சூழ்நிலையை நீங்கள் எதிர்கொண்டால் நான் ஏன் கர்த்தாவே? என்று கேட்கும்படி சோதிக்கப்பட்டால் நீங்கள் நின்று, உங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கையை தியானித்தால் கேட்க வேண்டிய கேள்வி " நான் ஏன் கர்த்தாவே? என்னை ஏன் இவ்வளவாக ஆசீர்வதித்திருக்கிறீர்? " என்பதாகவே இருக்கும். ❖

## கொஞ்சம் சிரியுங்களேன்

நீதி. 17 : 22

**இரண்டு மிகவும் வயதான கிறிஸ்தவப் பெண்கள் மருத்துவமனை ஒன்றில் இப்படியாகப் பேசுவது காதில் விழுந்தது. " நான் பூமியை விட்டுப் போக மிகவும் தாமதித்துக் கொண்டிருக்கிறபடியால், பரலோகத்தில் உள்ள என் தோழிகள், நான் நரகத்திற்குப் போய்விட்டேன் " என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்றார்.**

# சுய கட்டுப்பாடு (இச்சையடக்கம்)

## SELF CONTROL

*Bill Nicks*




**ப**ந்தயத்திற்குப் போராடுகிற யாவரும இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் (1 கொரி. 9:25). இந்த வசனப்பகுதி எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் பரிச்சயமான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை மறைமுகமாக குறிப்பிடுகிறது. இன்றும் கூட விளையாட்டு போட்டிகளில் சுயக்கட்டுப்பாடு என்பது முக்கியக் காரணியாக இருக்கிறது.

1992 விம்பிள்டன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஆண்ட்ரே அகஸி என்ற அமெரிக்க வீரர் தன்னுடைய 22 வயது வயதில் முதல் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றார். மறுபடியும், மறுபடியும் கடுமையான பயிற்சி மற்றும் முயற்சியில் ஈடுபட்டு, சரீர மற்றும் மனரீதியான அழுத்தத்திற்கு மத்தியிலும் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களோடு போட்டியிட சரீரப்பிரகாரமாகவும், மனரீதியாகவும் ஆச்சரியமூட்டும் சுயக்கட்டுப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தினார். தனக்கு எதிராக விளையாடிய வீரர் தன்னைவிட புள்ளிகள் முன்னிலை வகித்த போதிலும் அகஸி போராடி ஐந்து நேர் செட்களில் அவரை வீழ்த்தினார். இந்த கடுமையான போட்டி யில் கடைசிப் புள்ளி எடுத்து வெற்றி பெற்றவுடன் அகஸி கட்டுப் படுத்தப்பட்ட உணர்வுகளால் நிரம்பி தரையில் அப்படியே விழுந்து விட்டார்.

விளையாட்டு வீரர்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் நடப்பது மூலம் வெற்றி பெற முடியுமானால், கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களுடைய வாழ்க்கை யிலிருந்து சில பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். இதைத்தான் பவுல் (1 கொரி. 9:25ல்) சொல்கிறார். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அப்படிச் செய்யும் போது, அழிவில்லாத ஜீவக்கிரீடத்தை பெற்றுக் கொள்ளும்படி நாம் இச்சையடக்கமாயிருக்க முடியும்.

நாம் இயல்பான ஆசைகளாலும், சுபாவங்களாலும் " பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறோம் ". நம் ஆசைகளை அடக்குவதன் தேவையை நாம் கண்டு கொள்ளாமல் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாது. நாம் நம் நாவை அடக்கும் திறமையைப் பெற்றிருக்கலாம் அல்லது சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமைப் போல் கடுமையாகவும் பேசலாம். ரெகொபெயாம் வாலிபர்களின் தவறான ஆலோசனையைக்கேட்டு இஸ்ரவேலின் பிரிவினைக்கு வழிவகுத்தான். மேலும், அவன் இஸ்ரவேலின் பத்து கோத்திரமும் ரெகொபெயாமின் கீழ் கலகம் செய்வதற்கு காரணமானான், அந்தப் பத்து கோத்திரமும் இஸ்ரவேலின் அங்கமாயிருக்கவில்லை, அசீரியர்களால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப் பட்டார்கள். ஆனால், " உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக என்று ஒரு கிறிஸ்தவனுக்குச் சொல்லப் பட்டிருக்கிறது" (கொலோ. 4:6).

ஒவ்வொரு கிறிஸ்தவனும் யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தைத் தவறாமல் வாசிக்க வேண்டும். பெரிய காரியங்களைக் குறித்து பெருமைப் பேசும் சிறிய அவயவமாகிய நாவை எப்படி அடக்க வேண்டும் என்பது பற்றிய தகவல்கள் அங்கே காணப்படுகிறது. "அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும் பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புதான், அது அநீதி நிறைந்த உலகம். நம்முடைய அவய வங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப் படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது (யாக். 3:5,6). அங்கத்தினர்கள் நாவை அடக்க முடியாத காரணத்தால் பல வீடுகளில் உறவுகள் முறிந்திருக்கின்றன, பல சபைகள் பிரிந்திருக்கின்றன. பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக இச்சையடக்கம் இருக்கிறது. விவாகரத்தான தம்பதியர் " நாங்கள் ஒருவருக் கொருவர் பேச முயற்சித்திருந்தால் காரியங்கள் சமரசமாக முடிந்திருக்கும் " என்று மிக தாமதமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். " மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் " (நீதி. 15:1).

கோபத்தை அடக்குவதும், நாவை அடக்குவதும் ஒன்றுக்கொன்று நெருக்கமான ஒன்றாகத்தான் இருக்கிறது. " பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் " (நீதி. 16:32). " தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக " (பிரசங்கி 5:2). முற்கோபி மதிகேட்டைச் செய்வான் (நீதி. 14:7). நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான்; முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான் (நீதி. 14:29). ❖

# தூரத்தில் பின்பற்றும் சீஷத்துவம்

## Distant Discipleship

***Joe Magee***

" *அவர்கள் அவரைப் பிடித்த பின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டு போய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின் சென்றான்*" (லூக். 22:54)

யூதாஸ் தன் வேலையைக் காட்டி விட்டான். அவனுடைய முழு துரோகமும் முடிந்து விட்டது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பரபரப்பாகப் பேசப் பட்ட நேரம் அது. அங்கே பேதுரு கோதுமையைப் போல் புடைக்கப்பட வேண்டிய வேளையாயிருந்தது. அச்சமயம், கர்த்தருடைய பூமிக்குரிய ஊழிய முடிவின் ஆரம்பமாயிருந்தது. அது பேதுருவுக்கு தொடக்கத்தின் முடிவாயிருந்தது.

தூரத்து சீஷத்துவம் அழிவுக்கு வழிவகுக்கும். பேதுரு தன் ஆவிக்குரிய அடித்தளத்தை இழந்து போகத்தக்கதாக தன் பயத்தோடு ஆலோசனை பண்ணினார். அவருடைய வீழ்ச்சி வேகமாகவும், நிச்சயமாகவும் இருந்தது.

தேவபக்திக்குரிய காரியங்கள் நம்மில் குறைவுபடும்போது நாம் தூரத்தில் தேவனைப் பின்பற்றுகிறோம். அப்படிப் பட்ட நேரங்களில் துதி மனநிலையிலோ அல்லது ஜெபத்திலோ அல்லது அவருடைய சித்தத்தைப் படிப்பதிலோ நாம் நம்மை ஈடுபடுத்தாவிட்டால், தேவனிடத்தில் அதிகமான நேரம் செலவிட்டு, அவருடைய பிரசன்னத்திலிருந்து மிகுந்த பெலனைப் பெற்றுக் கொண்ட இயேசு விடமிருந்து நாம் நம்மை தூரப்படுத்திக் கொள்ளுகிறோம்.

இவ்வுலகத்தின் அசுத்தத்தினால் நம் ஜீவியங்கள் ஆளப்பட நாம் அஜாக்கிரதையுடன் நம்மை அனுமதிக்கும்போது நாம் தூரத்தில் அவரைப் பின்பற்றுகிறோம். நாம் இவ்வுலகின் உல்லாசத்தை நாடி, மாம்ச சிற்றின்பங்களின் மீது தாகமாயிருந்து உலகக் கவலைகளில் சிக்கிக் கொள்ளும் போது ஒரு கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப் பட்டுள்ள வாக்குத்தத்தங்களையும், பொறுப்புகளையும் மறந்து விடுகிறோம்.

நாம் சபைக்கு மிக நெருக்கமாக இருந்து கொண்டு, சபையின் செயல்பாடுகளை அறிந்து கொண்டு சபையின் நோக்கத்தில் நாம் நெருக்கமான ஈடுபாடு இல்லாதவர்களாயிருந்தால் நாம் தூரத்தில் அவரைப் பின்பற்றுகிறவர்களாகவே இருப்போம்.

நாம் சபையின் வசதிகளையும், அதன் நற்கீர்த்தியின் பலனையும் சுகித்துக் கொண்டு அதன் முயற்சிகளில் நம் பங்களிப்பைக் கொடுக்காமல் இருந்தாலோ அல்லது கிறிஸ்துவினிமித்தம் தியாகபூர்வமாக ஆவிக்குரிய பிரகாரமாகவோ அல்லது சரீரப்பிரகாரமாகவோ கொடுக்கத் தவறினாலோ, நாம் தேவனை தூரத்தில் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோம்.

நாம் தூரத்தில் தேவனைப் பின் பற்றுவதின் மிகப் பெரிய அச்சுறுத்தல் என்னவென்றால், பாராமுகம் என்கிற




சறுக்கலில் நம்மை சறுக்க வைக்கிறது. மேலும், ஆவிக்குரிய வறுமையென்னும் அபாயகரமான குழியில் நம்மை விழச் செய்கிறது. பேதுரு அதிலிருந்து மீண்டு விட்டார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, அது பேதுருவுக்கு தொடக்கத்தின் முடிவாயிருந்தது. பேதுரு அந்த பயங்கரமான அனுபவத்திலிருந்து மீண்டெழுந்து ஒரு மாபெரும் அப்போஸ்தலரானார். அவர் தன்னுடைய சுயபலத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல், கர்த்தருடைய பெலனில் நம்பிக்கைக் கொள்ள கற்றுக்கொண்டார். நாமும் அப்படியே செய்ய வேண்டும். ❖

## கிறிஸ்துவோடு வயதாகும் போது

* உணர்ச்சிவசப்படுவதிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அலட்சியப் படுத்தப்பட இடமளிக்காதீர்கள்.
* உங்களுக்கு வயதாகிவிட்டது என்கிற உண்மையை நினைத்துப் புலம்பாதீர்கள். உங்களுக்கு வயதாகியிருக்கவில்லையென்றால் நல்ல அனுபவங்கள் கிடைத்திருக்காது.
* உங்களால் முடிந்தவரை உங்கள் தோற்றத்தைப் பராமரியுங்கள். நன்றாகப் பாதுகாக்கப்பட்ட புராதனப் பொருள்கள் அழகானவைகளாகவே கருதப்படுகிறது.
* ஒழுக்க நெறிகள் ஒருபோதும் மாறுவதில்லை, ஆனால், பாரம்பரியமும், பழக்க வழக்கங்களும் மாறிக்கொண்டே இருக்கும். உங்கள் ஒழுக்க நெறிகளோடு பக்தி நெறிகளையும் சேர்த்துக் கொண்டு பக்குவத்தைக் காட்டுங்கள்.
* நீங்களும் ஒரு காலத்தில் இளமையாக இருந்தீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் ஒருவர் தன்னுடைய மனவலிமையை தக்க வைத்துக் கொள்ளும் வரை, யாரும் ஒருபோதும் பிரயோஜனமற்றவர்களாக இருப்பதில்லை. சரீர வியாதிகளைப் பற்றி முறுமுறுக்காமலிருக்க முயற்சியுங்கள்.
* தன்னிறைவு அடைய கற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் தன்னந்தனியாக விடப்படும் நேரம் ஒருவேளை வரலாம்.
* கடந்த காலத்தை நினைத்து வாழாதீர்கள்.
* நம்பிக்கை வைத்து கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் வாழுங்கள். நீங்களும், தேவனும் சேர்ந்து சமாளிக்க முடியாத சூழ்நிலை எதுவுமில்லை.
* சூரிய ஒளியைப்போல் மகிழ்ச்சியாயிருங்கள்



# பெண் ஆணுக்குக் கீழானவளா?

## Is a Woman Inferior to a Man?

***Betty Burton Choate***

**ஒ**ரு பெண் ஆணுக்கு, ஒருவேளை அது அவள் கணவனாக இருந்தாலும் ஒரு வேலைக்காரியை விட மேலானவளல்ல என்று சொல்கிறார்கள். ஒரு பெண் பிள்ளைகளைப் பெறுவதற்கும், வீட்டைப் பராமரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் தான் ஏற்றவள் என்றும் சொல்கிறார்கள். சில மதங்கள் ஒரு பெண், பெண் என்ற நிலையில் இரட்சிக்கப்படமுடியாது. எனவே, அவள் ஓர் ஆணாக மறுபடியும் பிறக்க வேண்டும் என்று போதிக்கின்றன.

இந்த எண்ணத்தை வளர்ச்சியடைந்த நாடுகளில் வெற்றி வாகை சூடியிருக்கிற "பெண்கள் விடுதலை இயக்கம் " நிராகரித்து, பெண் ஆணுக்கு எல்லாவிதத்திலும் சமம் என்று ஆணித்தரமாகச் சொல்கிறது. அந்த இயக்கம் சமத்துவத்தை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல், ஆண் ஆதிக்கத்தை வீழ்த்தி பெண்களுக்கு அதிகாரத்தை ஏற்படுத்து வதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. இம்மனப்பான்மை ஆண்களுக்கும், பெண் களுக்குமிடையே ஒருவிதமான போட்டி உணர்வை ஏற்படுத்தி பகைமைக்கும், கசப்புணர்வுக்கும் வழிவகுத்திருக்கிறது.

நம்முடைய நோக்கமெல்லாம் பெண்ணின் பங்கு பற்றியும், ஓர் ஆணிடத்தில் அவளுக்கு என்ன உறவு இருக்கிறது என்பது பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதைக்



கற்றுக் கொள்வதுதான். புறஜாதிகளின் கருத்தோ அல்லது விடுதலை இயக்கத்தின் கருத்தோ தேவனிடத்திலிருந்து வந்ததல்ல. வேதாகமத்தில் தேவன் எவ்விதமாக உத்தேசித்திருந்தாரோ அதன்படி ஒரு பெண்ணின் பணி, பங்கு, நிலை போன்ற வைகள் தெளிவாக விவரிக்கப்பட்டி ருப்பதைக் காணமுடியும்.

பெண் ஆணுக்குக் கீழானவளா? வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் நாம் இக்கேள்விக்கான பதிலைக் காணமுடியும். தேவன் இவ்வுலகத்தையும் அதிலுள்ள எல்லா ஜீவ ராசிகளையும் சிருஷ்டித்தார். கடைசி யாக, மனிதனை அவர் சிருஷ்டித்தார். "தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும், ஆதாம் அவை களுக்கு என்னப் பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவ ஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்பட வில்லை " (ஆதி. 2:19,20).

ஏற்ற துணை என்கிற வார்த்தை ஒரு பெண் என்னவாக இருக்க வேண்டு மென்று தேவன் உத்தேசித்தாரோ அப்படி யாக இருக்கவேண்டுமென்று நமக்குச் சொல்கிறது. ஒரு பெண் ஓர் ஆணுக்குக் கூட்டாளியாக, அவனுக்கு இணையான துணையாக இருக்க வேண்டுமென்பது தான் தேவனுடைய நோக்கமாயிருந்தது.

பெண்ணை உருவாக்க தேவன், "... ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷ னிடத்தில் கொண்டு வந்தார் " (ஆதி யாகமம் 2:21,22).

தேவன் உண்டாக்கின பெண்ணை ஆதாம் பார்த்து, " இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப் பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் " என்றான் (ஆதியாகமம் 2:23).

ஆதியாகமம் புத்தகத்தில் நாம் பார்த்த வசனங்களின் இறுதி வியாக்கியானம் இதுதான். " இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் " (ஆதியாகமம் 2:24).

நாம் சிருஷ்டிப்பு காட்சியின் விவரிப்பி லிருந்து பல உண்மைகளை கற்றுக் கொள்ள முடியும்.

* ஆதாம் முதலில் உண்டாக்கப்பட்டான்; ஆகவே, பெண்ணுக்கு முன்பாகவே அவன் இருக்கிறான்.

* ஆதாமோ பூமியின் மண்ணினாலே உண்டாக்கப்பட்டான், ஸ்திரீயானவள் ஆதாமின் சரீரத்திலிருந்து எடுக்கப்பட்ட விலா எலும்பினால் உருவாக்கப்பட்டாள். ஆகவே, ஸ்திரீயானவள் மனிதனுடைய ஒரு பகுதியாக, அங்கமாக இருக்கிறாள்.

* ஆதாம் ஏவாளின் மீது ஆதிக்கம் செலுத்தும்படிக்கு அவன் தலையிலிருந்து

எலும்பு எடுக்கப்படவில்லை; அதேபோல் அவன் ஏவாளை மிதிக்கத்தக்கதாக அவனுடைய காலிலிருந்தும் எலும்பு எடுக்கப்படவில்லை; மாறாக, ஆதாமுக்குக் கூட்டாளியாக இருக்கும்படி அவனுடைய விலா எலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

* தேவன் ஆணையும், பெண்ணையும் உண்மையாகவே முழுமையான ஒன்றின் இரு பாதியாகத்தான் உண்டாக்கினார். இரு பாதியும் இல்லையென்றால் மனித இனப்பெருக்கும் உண்டாகாது. எனவே, மனித இனம் தொடர்ந்து நிலைத்திருக்க இரு பாதியுமே சமமான முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் பெறுகிறது.

தேவன் இருவரும் அதாவது ஆணும் பெண்ணும் தங்கள் தாயையும், தகப்பனையும் விட்டு புதிய குடும்ப அமைப்பை உருவாக்கும்படி நோக்கம் கொண்டிருந்தார்.

* ஆணும், பெண்ணும் ஒரே மாம்சமாயிருக்கும்படி அதாவது முழுமையான ஒன்றின் இருபகுதியாக இருக்கும்படி இசைந்திருக்க வேண்டும்.

எனவே, ஆரம்பத்திலிருந்தே தேவன் மனிதனைப பூரணப்படுத்த மனுஷியை உண்டாக்கினார். மேலும், மனிதனோடு சேர்ந்து வாழத்தக்க நல்ல துணையாகவும் உருவாக்கினார். அவர்களுடைய வாழ்க்கை, குடும்பம், பணி மற்றும் அவர்களுக்கு தேவனோடும், சக மனிதர்களோடும் உள்ள உறவு போன்றவற்றின் வளர்ச்சியில் அவர்கள் எல்லாவற்றிலும் முழுமை பெறத்தக்கதாகவே, மனிதனுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமாகவே மனுஷி உண்டாக்கப்பட்டாள். உண்மையில், பெண் மனிதனுடைய தன்மையாக, சாரம்சமாக இருக்கிறாள், எவ்விதத்திலும் பெண் ஆணுக்குக் கீழானவளோ அல்லது ஆணைவிட மதிப்புக் குறைந்தவளோ அல்ல.

**ஒவ்வொரு கிறிஸ்தவக் கணவனும் தன் மனைவியை கீழ்க்கண்டவாறு காண வேண்டும்:**

* கர்த்தருக்குள் ஒரு சகோதரியாக
* கவனமாகக் கையாளப்பட வேண்டிய மென்மையான பாத்திரமாக
* தன்னுடைய சிறந்த சிநேகிதியாக
* உலகிலேயே மிக முக்கியமான பெண்ணாக
* தன்னுடைய மிக முக்கியமான முதலீடாக
* தன்னுடைய வாழ்நாள் கால கூட்டாளியாக





# கட்டுப்பாடற்ற

## Out of Control

*Dale Grissom*

பல குடும்பங்கள் சீர்குலைந்து கிடக்கின்றன; விவாகரத்தால் பல இல்லங்கள் முறிந்துப் போயிருக்கின்றன. விவாகரத்து கணவனுக்கும், மனைவிக்கும் உணர்வுப்பூர்வமான வேதனையை உண்டாக்குகிறது. ஆனால், அதிக துன்பத்திற்கு ஆளாவது பிள்ளைகள் தான். அவர்களுடைய உலகம் தலைகீழாக மாறிவிடுகிறது. அவர்கள் தங்கள் தாயிடத்திலும், தகப்பனிடத்திலும் அன்பு காட்டுகிறார்கள். ஆனால், தங்கள் பெற்றோர் சண்டையிட்டுப் பிரிந்து போவதற்குப் பதிலாக ஏன் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகக் கூடாது என்று அவர்களுக்குப் புரியவில்லை. பல குழந்தைகள் பெற்றோரில் யாரோ ஒருவரால் வளர்க்கப்படுகிறார்கள்.

பெற்றோர்கள் சேர்ந்து வாழும் குடும்பங்களில் கூட, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு விரோதமாக கலகம் செய்கிறார்கள். அவர்கள் வீட்டை விட்டு அனாதை இல்லங்களுக்குச் சென்று விடுகிறார்கள் அல்லது நண்பர்களுடன் வாழ்கிறார்கள் அல்லது தெருக்களில் வாழ்கிறார்கள். இது போன்று ஆயிரக்கணக்கான முறை நடந்திருக்கிறது. பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீதான கட்டுப்பாட்டை இழந்துப் போய் விட்டார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் கீழ்ப்படியும்படியாகப் போதித்து பல வருடங்கள் ஆகிவிடவில்லை. முன்பெல்லாம் பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியவில்லையென்றால் தண்டிக்கப்பட்டார்கள். அதன்பின்பு " நிபுணர்கள் " என்று சொல்லிக் கொள்பவர்கள் பிள்ளைகள் தண்டிக்கப்படக் கூடாது என்று புத்தகங்களை எழுதினார்கள். மேலும், அவர்கள் பிள்ளைகளுக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்ய வற்புறுத்தினால், அது உணர்வுப் பூர்வமாக அவர்களுடைய மனதில் நீங்கா காயத்தை ஏற்படுத்தும் என்று சொல்லிக் கொண்டார்கள். பலப் பெற்றோர்கள் தங்களை விட குழந்தைகளை வளர்ப்பது பற்றி அந்த நிபுணர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று முடிவெடுத்து, குழந்தை வளர்க்கும் பொறுப்பிலிருந்தும் விடுபட விரும்பினார்கள். பிள்ளைகள் மரியாதை இல்லாமல் கலகம் செய்கிற பிள்ளைகளாக வளர்ந்தார்கள்.

பல பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை அச்சுறுத்தவும் மிரட்டவும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சில வேளைகளில், அவர்கள் பெற்றோர்களுக்கு திருப்பி செலுத்த வேண்டிய அன்பைச் செலுத்த மறுப்பதன் மூலமாக அவர்கள் பெற்றோர்களை அச்சுறுத்துகிறார்கள். பிள்ளைகள் வீட்டில் ஒரு முதலாளியைப் போல் செயல்பட்டு, பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய வேண்டாம் என்று சொல்கிறார்கள். பிள்ளைகளுக்கு ஏதாவது வேண்டுமென்றால் அவைகளைப் பெற்றோர்கள் உடனடியாக கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், வலியுறுத்துகிறார்கள்.

பல, பல சம்பவங்களில் குடும்பச் சூழ்நிலைகள் கட்டுப்பாடற்ற நிலையில் இருக்கின்றன. பலருக்கு போதை மருந்துகள், மதுபானம், வேசித்தனம் போன்றவைகள் வாடிக்கையாகிவிட்டன. நம் இல்லங்களையும், தேசங்களையும் காப்பாற்ற விரும்பினால் நாம் வேதாகமத்திற்குத் திரும்பி அங்கே காணப்படும் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். ❖

## நாம் மறந்து விட்டோமா?

**ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கர்களைப் பற்றிச் சொன்னது?**

" நாம் வானத்தின் மிகச் சிறந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டு வருகிறோம், நாம் எந்த ஒரு தேசமும் ஒரு போதும் வளர்ந்திராத அளவுக்கு எண்ணிக்கையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால், நாம தேவனை மறந்துவிட்டோம். நாம் நம்மை சமாதானத்தோடு பாதுகாத்து, நம்மைப் பெருகச் செய்து, வளமாக்கிப் பலப்படுத்திய கிருபையுள்ள கரத்தை மறந்துவிட்டோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய மேலான அறிவினால் உண்டானதென்று வஞ்சனையுள்ள இருதயங்களில் வீணாக கற்பனை செய்துவிட்டோம். வெற்றிப் போதையில் மிகவும் தன்னிறைவு அடைந்து மீட்கும் மற்றும் பாதுகாக்கும் கிருபையின் அவசியத்தை உணராமல், நம்மை உணடாக்கின தேவனிடத்தில் ஜெபிக்கப் பெருமையுள்ளவர்களாயிருக்கிறோம் ".





# என் பிள்ளைகளுக்கு என்னுடைய மிகப் பெரிய வெகுமதி



## My Greatest Gift To My Children

*Bob Plunket*

என் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கும்படி நான் கடுமையாக உழைத்தேன். நான் அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைக் கொடுத்து அவர்கள் பாதுகாப்பாக உணர விரும்பினேன். அவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க விரும்பினேன். இவையெல்லாவற்றையும் விட அவர்களுக்கு நற்கீர்த்தியைக் கொடுக்க விரும்பினேன், ஞானி சாலமோன் இதை பொன், வெள்ளியைப் பார்க்கிலும் நலம் என்று சொல்கிறார். அநேகமாக இதை விட அதிகமாக என் நேரத்தையும், அன்பையும் அவர்களுக்குக்

கொடுத்தேன். இதை விட சிறப்பாக அவர்கள் என்னைப் பின்பற்றும்படியும், சரியான பாதையில் செல்லும்படியும் நல்ல மாதிரியை அவர்களுக்குக் கொடுக்க விரும்பினேன். இவைகள் எல்லாவற்றையும் விட நான் இவ்வுலகை விட்டு போன பின்பு அவர்கள் பேசவும், நடக்கவும் அருமையான பரமப் பிதாவை அவர்களுக்கு காட்ட விரும்பினேன். மேற் சொல்லப்பட்ட காரியங்கள் எல்லாவற்றையும் நான் முழுமையாக செய்யவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், முடிந்தவரை முயற்சி செய்தேன்.

ஆனால், என்னுடைய மிகப் பெரிய வெகுமதி மேற்சொல்லப்பட்ட காரியங்களை உள்ளடக்கியது தான். அது கிறிஸ்தவத் தாய் என்னும் வெகுமதியாயிருந்தது. இது எனக்கான துணையைத் தேர்வு செய்யும் போது பட்டியலில் முதல் இடத்திலிருந்தது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், கிறிஸ்தவ இளம் பெண்கள் அதிகமாக இருந்த ஒரு சூழ்நிலையில் நான் வளர்க்கப்பட்டபடியால் என்னுடைய அருமையான தாயாருக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். நான் என் துணையை கல்லூரியில் கண்டு பிடித்தேன். என் துணை அசாதாரண அழகோடு அன்பு, தாழ்மை, பொறுமை, தாராளத்துவம், தன்னலமின்மை போன்ற பண்புகளையும் தன்னகத்தேக் கொண்டிருந்தாள். அவள் நடமாடும் 1 கொரி. 13:4,8 வசனங்களாயிருக்கிறாள்.

அவள் தன் பிள்ளைகளாலும், பேரப்பிள்ளைகளாலும் போற்றப்படுகிறாள். இன்று நாம் பிள்ளைகள் உண்மையாகவே விரும்புவது வாகனமோ, வஸ்திரமோ அல்ல என்பதை ஒத்துக் கொள்கிறேன். பிள்ளைகள் அவைகள் எல்லாவற்றையும் " கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புக்காட்டி, ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும் கிறிஸ்தவ தகப்பன் மற்றும் தாய்க்காக " விட்டுக் கொடுத்து விடுவார்கள் என்று நான் நிச்சயத்திருக்கிறேன். சபையானது ஒரு நல்ல இல்லமாக இல்லையென்றால் தேவன் விரும்புகிறபடி ஒருபோதும் இருக்காது. இன்று சபையில் அன்பு காட்டுகின்ற, அர்ப்பணிப்புள்ள தாய்மார்களையும், தகப்பன்மார்களையும் உள்ளடக்கிய இல்லங்களைக் காண முடிகிறது.

வாலிபர்களே! நீங்கள் உங்கள் துணையைத் தெரிந்து கொள்ளும் போது உங்கள் பிள்ளைகளுக்கு தகப்பன் அல்லது தாயையும் தெரிந்து கொள்ளுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கிறிஸ்தவத் தாயால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற என் பிள்ளைகளிடமும் மற்றும் எல்லாப் பிள்ளைகளிடமும், " நீங்கள் எல்லோரும் எழும்பி, அவளைப் பாக்கியவதி " என்று சொல்ல விரும்புகிறேன். (நீதி. 31:22).

**கடமை நாம் காரியங்களை நன்றாகச் செய்ய வைக்கிறது. ஆனால், அன்பு அவைகளை அழகாகச் செய்ய வைக்கிறது.**



செயலில் கிறிஸ்தவம்

# " நீங்கள் எந்த அளவுக்கு ஞானவான்களாயிருக்கிறீர்கள் ? "

## " HOW WISE ARE YOU?"

*Dan Jenkins*



சாலொமோன் என்னும் பெயர் நிரந்தரமாக ஞானத்தோடு சம்மந்தமுடைய பெயராயிருக்கிறது. ஓர் இளம் ராஜாவாக சாலொமோன் தேவனிடம் ஞானத்தைக் கேட்டார். தேவன் அவருடைய விண்ணப்பத்திற்கு பதில் கொடுத்தார். சாலொமோனின் எழுத்துக்கள் பெரும்பாலும் ஞானத்தை மையமாகக் கொண்டு சுற்றி வரும். நீதிமொழிகளிலிருந்து இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்; " நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் " (நீதி. 11:30).

இயேசு ஒன்றும் அறியாத மீனவர்களை ஞானவான்களாக மாற்றினார். யூதர்கள் பேருதுவையும், யோவானையும் படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் எண்ணினார்கள் (அப். 4:13). இருந்தபோதிலும் இயேசு அவர்களிடத்தில் பலவற்றைக் கண்டார். அவர் அவர்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக மாற்றினார்.

ஒருவர் இந்த ஞானத்தை அடைவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவைப் பெற அர்ப்பணிப்புடன் வேதாகமத்தைப் படிப்பது அவசியமாகிறது. அதற்கு நேரத்தை தியாகம் செய்வது அவசியமாகிறது. மற்றவர்களுக்கு போதிப்பதில் உதவிச் செய்ய மற்றவர்களைப் போல் மாற ஒருவருடைய சுய விருப்பத்தை விட்டுக் கொடுப்பது அவசியம்.

" நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும் நான் அதிக ஜனங்களை, ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் ". எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் (1 கொரி. 9:19, 22) பவுலின் வார்த்தைகளை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

" என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். இதுதான் ஞானத்தின் விலை ".

கடைசியாக, ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு நித்திய பலன் காத்திருக்கிறது. " ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் " (தானி. 12:3).

நான் மறுபடியும் சொல்லட்டும், "நீங்கள் எந்த அளவுக்கு ஞானவான்களாயிருக்கிறீர்கள்?

## முக்கியமான வார்த்தைகள்

நல்லெண்ணத்தை மேம்படுத்தும் பயிற்சி வகுப்பில் ஒருவர் இப்படியாகச் சொன்னார்; ஐந்து மிக முக்கியமான வார்த்தைகள்

" நான் தவறு செய்தேன் என்று ஒத்துக் கொள்கிறேன் ". நான்கு மிக முக்கியமான வார்த்தைகள்

" நீங்கள் நல்ல வேலை செய்தீர்கள்",

மூன்று மிக முக்கியமான வார்த்தைகள் "உங்கள் அபிப்பிராயம் என்ன? ".

இரண்டு மிக முக்கியமான வார்த்தைகள் "உங்களுக்கு நன்றி ".

மிக முக்கியமான ஒரே வார்த்தை " நான் " என்பதாகும்.

மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவும், அவர்களிடத்தில் நன்றியையும், மரியாதையையும் காட்டவும் சுயத்தை மறந்து விடுவது நல்லதாகும்.

அப்போது நீண்ட காலத்திற்கு அவர்களும் மகிழ்ச்சியாயிருப்பார்கள், நாமும் மகிழ்ச்சியாயிருப்போம்.






# சர்வதேச ஊழியம்

## *International Evangelism*

***Hans J. Dederscheck***

**கிறி**ஸ்தவம் வாழ்க்கையால் விவரிக்கப்படுகிறது. இருந்தபோதிலும், அது உதடுகளால் அறிவிக்கப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட இரண்டில் ஏதாவது ஒன்றில் பிரச்சனை ஏற்பட்டால் சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது.

வேண்டும். ஆதித் திருச்சபையானது சபைக் கட்டிடங்களையும், நான்கு சுவர்களுக்குள் வேதாகமக் கல்லவி பயிற்றுவிப்பதையும் அறியாதிருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்செய்தியை பொது இடங்களிலும், தெருக்களிலும், வீடுகளிலும் அறிவித்தனர்.



ஆரோக்கியமான சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டுமென்றால் அதன் பின்னால் ஆரோக்கியமான அறிவிப்பாளர் இருக்க

அதன் தாக்கம் வல்லமை யாய் இருந்தது. அவர்களுடைய சொல்லிலும், செயலிலும் வித்தியாசம் இல்லாதிருந்தது. இன்று இதில்

நமக்கு மிகப்பெரிய பிரச்சனை இருக்கிறது.

நிச்சயமாகவே, பக்திக்கேற்ற சூழ்நிலையில் தேவ பயமுள்ள ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஜெப ஆலயம் சிறந்த இடமாக இருந்தது. பிரசங்கமானது மனிதனுடைய புதுமையான கருத்துக்கள் எதுவுமில்லாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மாத்திரம் உள்ளடக்கியதாயிருந்தது. வெளிநாட்டு ஊழியங்களைச் செய்த பிரசங்கிமார்களுக்கு இந்த ஜெப ஆலயங்கள் ஆயத்தமாக்கப்பட்டிருந்த சபைகளாக இருந்தன. ஆரம்ப காலக் கட்டங்களில் விசுவாசம் பரம்புவதற்கு ஜெப ஆலயம் முக்கிய பங்கு வகித்தது. இயேசு கிறிஸ்துவே தீர்க்க தரிசன ஆகமங்களை வாசிப்பதற்காக தான் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில் இருந்த ஒரு ஜெப ஆலயத்திற்கு அழைக்கப்பட்டார். பவுலின் ஊழியப் பயணத்தில் வேத வாக்கியங்களை வாசிக்கவும், எடுத்துரைக்கவும் கனம் பொருந்திய ஒரு பரிசேயனாக ஜெப ஆலயங்களுக்கு அழைக்கப்பட்டார். பவுல் தன்னுடைய ஊழியத்தின் பாதையில் வேத வாக்கியங்களை எடுத்துரைக்க ஜெப ஆலயங்களைத் தான் முதலில் பயன்படுத்தினார், அடுத்தபடியாகத்தான் பொது இடங்களை பயன்படுத்தினார்.

ஆதிச் திருச்சபையில் ஊழியத்திற்காக கிறிஸ்தவ இல்லங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பவுல் ரோமாபுரியில், தான் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டை மக்களைச் சந்திப்பதற்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் பயன்படுத்தினார். பவுல் தன்னுடைய அணுகுமுறையில் சுருக்கமாக, உண்மையாக, ஒப்புரவாக்கத்தக்கதாக, அதே நேரத்தில் சொல்ல விரும்பும் கருத்தை நேரடியாக எடுத்துரைத்தார். அவர் தன்னைத் தேடி வந்தவர்களை நன்றாக உபசரித்தார். வசனங்களை தான் எந்த அளவுக்கு புரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தினார். அதேபோல் இஸ்ரவேலின் நம்பிக்கையிலும், இயேசுவால் கிடைக்கும் இரட்சிப்பிலும் தனக்கிருந்த பிடிப்பையும், உறுதிப்பாட்டையும் காட்டினார். பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பேசும்போது இவ்விதமாகச் சொன்னார். " பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து; உபதேசம் பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும். நான் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன் " என்று (அப். 20:20,21).

வீடுகள் தோறும் செய்யப்பட்ட ஊழியங்கள் மற்ற ஊழியங்களை விட அதிக கனிகளைத் தந்தன. உண்மையாகவே முதல் நூற்றாண்டு சபையை மீட்டமைக்க விரும்புவர்களுக்கு மிகவும் முக்கியமான வாசகத்தை " Polycarp " என்பவர் எழுதி வைத்துள்ளார். " கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்க முதலாவது நமக்கு நாமே போதிக்க வேண்டும். அடுத்ததாக, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசுவாசத்தில் நடக்கவும், எல்லா சத்தியத்தோடும் தங்கள் சொந்தப் புருஷர்களிடத்தில் அன்புச் செலுத்தவும், எல்லா கற்புடனும் எல்லோரிடமும் சமமாக அன்பு காட்டவும், தேவனைப் பற்றிய அறிவிலும் பிள்ளை களை பயிற்றுவிக்க மனைவிகளுக்கு போதிக்க வேண்டும். "



பரிசுத்தமில்லாமல் ஊழியப் பணி என்பது தீமையைத் தவிர வேறொன்றையும் விளைவிக்காது. மேலும், அதன் காரணமாக, சபையானது பரியாசத்திற்கு உட்படுத்தப்படும். ரோமாபுரியில் வாழ்ந்த கிலேமென்ட் என்பவர் கிறிஸ்தவ இல்லத்திற்கு முன்மாதிரியும், பயிற்சியும், ஒழுக்கமும் சமமாக தேவைப்படுகிறது என்பதை வலியுறுத்தினார்.

முதல் நூற்றாண்டில் எல்லோருக்கும் சுவிசேஷத்தை அறிவிப்ப தற்கு வெளிப்படையான பல முறைகளும், தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கு வீடு களும் பயன்படுத்தப்பட்டது. ஒருவர் தன்னு டைய விசுவாசத்தை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் தனியாள் ஊழியம் குறைவான முக்கியத்துவம் உடையதல்ல. இன்று, இயேசுவைப் பற்றிய சத்தியத்தை ஒருவர் அறியும் அந்த நிமிடம் முதல் அந்த சத்தியத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொடுக்க நாம் கடன்பட்டிருக்கிறோம். யோவான் ஸ்நானனுடைய தனிப்பட்ட சாட்சியின் மூலமாகத்தான் அந்த இரண்டு சீஷர்களும் இயேசுவைக் கண்டார்கள். யோவானுடைய சாட்சியைக் கேட்டு அந்திரேயா இயேசுவுக்குப் பின் சென்றான்.

அந்திரேயா தன் சகோதரனாகிய பேதுருவை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தான். பின்பு இயேசுவே பெத்சாயிதா பட்டணத்தானாகிய பிலிப்புவைக் கண்டு "நீ எனக்குப் பின் சென்று வா " என்றார். பிலிப்பு அந்த நற்கிரியையை தொடர்ந்து செய்யும் விதமாக நாத்தான்வேலைக் கண்டார். நாத்தான்வேலும் தனது பங்காக இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கைச் செய்தார். மேற்சொல்லப்பட்ட சம்பவங்களெல்லாம் சபையின் ஆத்துமாக்களை சந்திக்கும் திட்டத்தில் தனியாள் ஊழியத்தின் முக்கியத்துவத்தைத் தான் காட்டுகிறது. ❖

## கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த ஏழு ஆசீர்வாதங்கள்

1. நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்
2. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
3. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்
4. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
5. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்
6. உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்
7. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்

# வண்டி நிறையக் குழந்தைகள்

## A WAGON FULL OF CHILDREN

***Ron Stough***



**சு**மார் 40 வருடங்களுக்கு முன்பு, மேற்கு டெக்சாஸில் உள்ள ஒரு கிராமத்தில் எட்டு குழந்தைகளுடன் ஒரு பெரிய குடும்பம் வாழ்ந்தது. அந்த குடும்பம் எந்த ஓர் இடத்திலும் தேவனை ஆராதிக்கும்படியாக கூடி வரவில்லை. ஆனால், அவர்கள் வாழ்ந்த பகுதியில் தேவனை தவறாமல் ஆராதித்த ஒருவர் வாழ்ந்து வந்தார். உணமையில், அவர் தன்னுடைய குதிரை வண்டியை ஓட்டி வந்து அப்பகுதியிலுள்ள குழந்தைகளை ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் சபை கூடுமிடத்திற்கு அழைத்துச் செல்வார். அக்குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்து முதிர்ச்சியடைந்து கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள். கடைசியாக, அக்குழந்தைகளின் பெற்றோர்களும் கூட ஞானஸ்நானம் பெற்றார்கள்.


இன்று அந்த பெற்றோர்களும் எல்லா எட்டு குழந்தைகளும் மரித்துப் போய் விட்டார்கள். ஆனால், அவருடைய பிள்ளைகளும், பேரக்குழந்தைகளும் இன்றும் கர்த்தரை சேவித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களுள் ஒருவர், என் மனதில் வருகிறார். அப்பெண் ஐந்து குழந்தைகளையும், பதிமூன்று பேரக்குழந்தைகளையும், பதினைந்து கொள்ளுபேரக்குழந்தைகளையும் விட்டுச் சென்றிருக்கிறார். அவர்களெல்லாரும் தேவனுடைய ராஜ்யத்தில் வேலையாட்களாக இருக்கிறார்கள். அப்பெண் என் மனைவியின் பாட்டியாவார். அவர் மரித்து விட்டார். அவருடைய அடக்க ஆராதனையில் கர்த்தருடைய வார்த்தையைப் பேசும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அந்த கிறிஸ்தவ குடும்பம் அடக்க ஆராதனையில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தபோது எங்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. ஆனால், அந்த பக்கத்து வீட்டுக்காரர் ஒரு காலத்தில் தன்னுடைய குதிரைவண்டியில் அந்த குழந்தைகளை ஏற்றிக் கொண்டு சபை கூடுமிடத்திற்கு அழைத்துக் கொண்டு வராமல்



இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று ஆச்சரியத்துடன் யோசித்துக் கொண்டிருந்தோம். என் மனைவியின் பாட்டி என்றாவது சுவிசேஷத்தை கேட்டிருப்பார்களா? அவர்களுடைய குடும்பம் இன்று கிறிஸ்துவுக்குள் இணைந்திருக்குமா? அந்த பக்கத்து வீட்டுக்காரர் அடுத்த தலைமுறையினர் மீது எப்படிப்பட்ட ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்?.

நம்முடைய செயல்பாடுகள் பிறக்கப்போகும் குழந்தைகள் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நமக்கு ஒருபோதும் தெரியாது. ஆனால், நாம் விதைத்தால் தேவன் விளைச்சலை உண்டாக்குவார் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறதை அறிவோம். நமக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள நிச்சயப்படுத்திக்கொள்வோம்.



## பரிசுத்த வேதாகமம்

**அட்டை பழையதாகி, பக்கங்கள் கிழிந்து போய் ஆங்காங்கே கண்ணீரின் அடையாளங்கள் தெரிந்தாலும், பழசாகிப் போன இப்புத்தகம் பொன்னை விட விலையேறப்பெற்றது. இது என் பயத்தை தரைமட்டமாக்கி, சிதறச் செய்கிறது.**

## ஆதாரம்

**பா**ழாய்ப்போன மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகள் மத்தியில் இயற்கை விதியால் ஒரு மலர் பூத்து குலுங்க வேண்டும். ஆனால், அது வளரவில்லை; காரணம் மனிதன் இங்கே இருக்கிறான். வறண்ட நிலமானது புத்துயிர் அடைந்து லட்சக்கணக்கான மலர்களினால் பூத்து குலுங்குகின்றன. காரணம் தேவன் இங்கே இருக்கிறார்

# கிறிஸ்தவத்தின் நான்கு நிலைகள்

# 4 ASPECTS OF CHRISTIANITY

*T. Pierce Brown*

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42ல் நாம், " அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியயோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் " என்று வாசிக்கிறோம். இது போன்ற ஒரு வாழ்க்கையை வாழ அல்லது இயேசு கிறிஸ்து கட்டின சபையைப் போன்ற ஒன்றில் அங்கமாயிருக்க விரும்பும் யாவருக்கும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கிறிஸ்தவத்தின் நான்கு நிலைகள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட வேண்டும்.

நாம் அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அப்போஸ்தலருடைய உபதேசம் என்றால் என்ன? நாம் அதை எப்படி கண்டுபிடிப்பது? அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது? அதில் உறுதியாய்த் தரித்திருப்பது நமக்கு நல்லதா? பவுல் தீமோத்தேயுவிடம், " உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் " என்று சொல்கிறார் (1 தீமோ. 4:16). பவுல் தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதிய போது அந்த உபதேசம் முக்கியமல்ல என்று போதிக்கப்படாதபடியால், அந்த உபதேசம் எதைப்பற்றி போதிக்கிறது?

அப்போஸ்தலருடைய உபதேசம் குறித்து நாம் கவனிக்க முற்படும் போது, நாம் சில முக்கிய வித்தியாசங்களை கணக்கிலெடுத்துக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடையே உண்டான வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விசுவாசத்திற்கும், அப்பிப்பிராயத்திற்கும் திட்டமான வேறுபாடு உண்டென்பதை நாம் காண்பது அவசியம். விசுவாசம் கேள்வியினாலே வரும் (ரோமர் 10:17). அபிப்ராயம் என்பது தேவன் என்ன விரும்புகிறார் என்பது பற்றிய ஓர் அனுமானமே. அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் உள்ளபடி பேதுரு பிரசங்கித்தார் என்பதில் எனக்கு விசுவாசம் இருக்கிறது. அதே நேரத்தில், இப்பிரசங்கத்தைச் செய்ய யோவானுக்குப் பதிலாக தேவன் ஏன் பேருதுவைத் தெரிந்து கொண்டார் என்பதற்கான ஓர் அபிப்ராயம் உள்ளது.

தற்காலிகமானவைகளுக்கும், நிரந்தரமானவைகளுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் பகுத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கும் கூட அற்புதங்களைக் கொண்டு தேவ வழி நடத்துதல் உண்டு என்று சிலர் சொல்வதை நான் கேள்விப்படுகிறேன். ஒரு காலத்தில்



இரண்டு ஜெர்மனிகளையும் பிரித்த சுவர் இடிக்கப்பட்டது ஓர் அதிசயம் என்று அப்படிப்பட்டவர்கள் கூறுகிறார்கள். அற்புதங்களுக்கும், தேவ வழி நடத்துதலுக்கும் இடையே எப்பொழுதுமே ஒரு வேறுபாடு இருந்து வந்துள்ளது. அற்புதங்கள் என்பது, தேவனுடைய முழுமையான வல்லமையின் சாட்சியமாக இருந்து, தேவனுடைய வார்த்தையை உறுதி செய்கிறது.

நாம் நமக்கு பொருந்தத்தக்கதாக சூழ்நிலையின் தன்மைக்கும், சூழ்நிலையின் தேவைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு காரியத்தின் சூழ் நிலைக்கும், அந்தக் காரியத்தின் தேவைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வது அவசியம். அப்பம்பிட்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருப்பதும், அதில் பங்கு பெறும் பொழுது சமந்தப்படும் ஐக்கியமும் முக்கியம். இயேசு கர்த்தரின் பந்தியை ஏற்படுத்தினபோது, தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷனுக்குப் பின் சென்று, மேல் வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை ஆயத்தப்படுத்துங்கள் என்று கட்டளையிட்டார். அவர்கள் அறையை ஆயத்தப்படுத்தினபோது, அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். நாம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால், இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி மேல் வீட்டில் கூட வேண்டும் என்று சொல்வதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். உபதேசிக்கப்பட்டவைகளில் அடங்கியிருக்கும் கொள்கை வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு, கட்டளைகளாக இருப்பவைகளை நிறைவேற்றத் தீவிரம் காட்டுவது அவசியம். 1 கொரி. 14:26,40 வசனங்களில் குறைந்தபட்சம் நான்கு உபதேசக் கொள்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.
2. தேவன் கலகத்திற்குத் தேவனல்ல
3. சபைகளில் ஸ்திரீகள் பேசமாலிருக்க வேண்டும்.
4. சகலமும் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.

மேற்சொல்லப்பட்ட உபதேசக் கொள்கை செயல்படுத்தும் விதம் பல் வேறுபட்ட சூழ்நிலைகளில் மாறுபடும்.

நாம் தெய்வீக சட்டத்திற்கும், ஒரு தேசத்தின் கலாச்சாரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும். பரிசுத்த முத்தமும், முக்காடிடுதலும் பழக்க வழக்கம் சார்ந்ததாக இருக்க முடியும். ஆனால், அந்தக் கட்டளைகள் உள்ளடக்கிய கொள்ளை மாறாதது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களில் இடம் பெற்றுள்ள பொதுவான கொள்கைகள். நாம் குறிப்பிட்ட காரியங்களை, குறிப்பிட்ட விதங்களில், குறிப்பிட்ட காலங்களில் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். சிலவேளைகளில், நாம் காரியங்களை நாம் விரும்பும் விதங்களில் செய்ய நமக்கு உரிமை உண்டு. நாம் ஒன்றைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறோமா? அல்லது உரிமை பெற்றிருக்கிறோமா? என்பதை நாம் எப்படிச் சொல்ல முடியும்? அதைச் சொல்வதற்கு சுலபமான வழி; தேவ ஆவியினால் ஏவப்பட்ட வாக்கியங்களும், போதனைகளும் ஏதாவது ஒரு செயல் முக்கியமானது என்று வெளிப்படுத்தியிருந்தால் நாம் அதை அறிந்து கொள்ள வேண்டும். மேல் வீட்டிற்கு முக்கியத்துவம் இருந்ததாக எந்த காலக்

கட்டத்திலும் வேதாகமத்தில் நமக்கு ஆதாரம் இல்லை. கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கு பெற வேண்டும் என்கிற அந்த கட்டளையில், அந்த மாதிரியில், பங்கு பெறும் நாள் தான் முக்கியமானது என்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆதிக்கிறிஸ்தவர்கள் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்பதைப் பற்றி விவரமாக எழுத இடமில்லை. ஆனால், இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு சபையும் வேதாகமம் போதிப்பது போல ஜெபிக்கக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து மற்றும் பவுல் போன்றோரின் ஜெபங்களை ஆழ்ந்து கவனிப்பது ஜெபத்தின் தன்மையையும், மதிப்பையும் கற்றுக்கொள்வதற்கு மிகச் சிறந்த வழியாயிருக்கும்.

"நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக் கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள் அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப் பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும் போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்" (சங்கீதம் 139:13-18).





# ஆத்துமாவின் வீடு

## HOME OF THE SOUL

*Frances Parr*

பரலோகத்தைப் பற்றி உங்கள் மனதில் என்ன கற்பனை செய்திருக்கிறீர்கள்? தங்கத்தினாலான வீதிகள், பெரிய சிறகுகளுடன் வெள்ளை நிறத்தில் மின்னும் தேவத் தூதர்கள், அழகான இசை, பிரியமானவர்களின் அழகான கூடுகை என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? ஆத்துமாவின் நித்திய வீட்டைப் பற்றி இப்படி உங்கள் கற்பனைகளில் எவைகளைக் காண்கிறீர்களோ அவைகளையெல்லாம் மெய்யான பரலோகத்தோடு ஒப்பிடும் போது ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தேவனுடைய வார்த்தை பரலோகத்தை நமது பார்வைக்காக விளக்கியிருக்கிறது, பல தேவ ஜனங்கள் பரலோக மகிமையைக் கண்டிருக்கிறார்கள். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன் " என்று இயேசு தம்முடைய சீடர்களிடம் சொன்னார் (யோவான் 14:2).

அப்போஸ்தலனாகிய யோவான் பரலோகத்திற்கு ஆவியில் பயணம் செய்தார். வெளிப்படுத்தின விசேஷம் 21-ஆம் அதிகாரத்தில் யோவான் பரலோகக் காட்சிகளை விவரிக்கும் போது அதின்

வாசல்கள் முத்துக்களாலானது; அதின் மதில்கள் வச்சிரக் கல்லால் கட்டப் பட்டிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது என்ற விவரிக்கிறார். பரலோக அழகை மனித மனம் புரிந்து கொள்ளவே முடியாது அந்த அளவுக்கு அது அழகானது.

பரலோகத்தில் பரவசமூட்டும் காரியம் என்னவென்றால், அது தேவன் மற்றும் இயேசுவின் மகிமையான பிரசன்னம் தான். ஆதி 28:12–16 வசனங்கள் யாக்கோபின் சொப்பனத்தைப் பற்றிச் சொல்கின்றன. ஓர் ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதில் தேவ தூதர் ஏறுகிறவர்களும், இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்றார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:55,56 வசனங்கள் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டபோது கண்ட காட்சிகளை விளக்குகிறது. வானங்கள் திறந்திருக்கிறதையும் தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசு நிற்கிறதையும் கண்டார்.

பரலோக மகிமையைக் கண்ட பிறர் வானத்தை கருநீல நிறமுடையதாகவும், சிங்காசனத்தில் இயேசு வீற்றிருக்கிறதையும் கண்டார்கள். தானியேல் இயேசுவின் வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப் போலத் துப்புரவாகவும் இருந்ததையும் காண்டார்.


பரலோகம் என்பது தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு அவர் கொடுக்கப்படும் மிகச் சிறந்த ஈவாகும். ஆயினும், அது விலையில்லாமல் இல்லை. தேவன் தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களுக்காக மரிக்க அனுப்பியதன் மூலமாக மிகப் பெரிய விலையை அதற்காக் கொடுத்தார். அத்தகைய ஈவை சுதந்தரிக்க மனிதர்களுடைய பங்கில் எவ்வளவு பெரிய தியாகம் செய்தாலும் அது தகும். பரலோக ராஜ்யத்தைப் பற்றி இயேசுவிடம் கேட்கப் பட்ட போது இயேசு சொன்ன உவமைகளை ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். மத். 13:44,46 வசனங்களில் புதைந்திருக்கிற பொக்கிஷத்தைப் பற்றியும், விலையுயர்ந்த முத்தைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சம்பவத்திலும் அந்த மனுஷன் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த விலையேறப் பெற்ற வஸ்துக்களைக் கொள்ளுகிறான்.

பவுல் ரோமர் 8:18ல் " ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் " என்று சொல்கிறார்.

எனவே, ஒருவர் எல்லா பூமிக்குரிய உடைமைகளையும், தன்னுடைய ஜீவனையும் கூட இயேசுவோடும், பரலோக வீட்டோடும் ஒப்பிட்டுப் பார்த்து அவைகளை ஒன்றுமில்லாததாகக் கருத வேண்டும். தேவன் இப்பூமியை நாம் கொஞ்ச காலம் வாழும் ஓர் இடமாக அதன் எல்லா மகிமையிலும், அழகிலும் சிருஷ்டித்தார். அவர் இப்பூமியை அக்கினிக் கிரையாக்கி உண்மையுள்ளவர்களை இன்னும் அல்லது இப்பூமியை விட மகிமையான ஓர் இடத்தில் சேர்க்கும்படியாக சித்தம் கொண்டிருக்கிறார். உண்மையாகவே, பரலோகம் எவ்வளவு அழகானதாக, அற்புதமானதாக இருக்க வேண்டும். உண்மையாகவே இக்காலத்துப் பாடுகள் பரலோகத்தோடு ஒப்பிடத்தக்கவைகளல்ல! ❖







# யோவான் ஸ்நானன் ஒரு தோல்வியா?

## WAS JOHN THE BAPTIST A FAILURE?

*W.T. Allison*

ஒழுக்க நெறிகள் பற்றியும், அரசியல் மற்றும் சபையில் நடக்கும் லஞ்ச லாவண்யங்கள் பற்றியும், நீதியான காரியங்களைத் தைரியமாகப் பேசும் எவரும் எதிர்ப்பைச் சந்திக்கவே செய்வர். அப்படி தைரியமாகப் பேசி அநீதியை எதிர்த்தவர் தான் யோவான் ஸநானன், அவர் மனந்திரும்புதலைப் பற்றியும், உள்ளான மனமாற்றத்தின் அவசியத்தைப் பற்றியும் தைரியமாகப் பிரசங்கித்தார்.

பிரச்சனையின் மையமாக இருதயம் இருக்கிறது. யோவான் தன் சமகாலத்தவர்களிடம் மனந்திரும்புதல் என்பது பாவத்தை விட்டுவிடுவதாயிருக்க வேண்டும் என்று சொன்னார். இஸ்ரவேல் தேசத்தின் பிள்ளைகளாக இருப்பது மட்டும் ஒருவரை இரட்சிக்காது என்று சொன்னார். அவர் அவர்களை "விரியன் பாம்புக் குட்டிகள்" என்று கடிந்து கொண்டு அவர்கள் மேல் வரவிருக்கும் நியாயத்தீர்ப்புப் பற்றியும், தேவனோடு காரியங்களைச் சரி செய்து கொள்வதன் அவசியத்தையும் குறித்து எச்சரித்தார்.

யோவான் இப்படி உண்மையைப் பேசி தன் தலையைப் பறிகொடுத்தார். அவர் பாவத்தைக் கண்டிக்கும் விஷயத்தில் கொஞ்சம் கடுமையைக் குறைத்திருந்தால் அதிக நாட்கள் வாழ்ந்து, கர்த்தருக்காக பல காரியங்களை செய்திருக்கலாம் என்று சொல்லலாம். அவர் தேவனுடைய உபதேசச் சட்டங்களோடு தற்காலிகமாக சமரசம் செய்திருந்தால், அவருடைய வெற்றி எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப்பாருங்கள்! ஆனால், அத்தகைய பெலவீனம் இஸ்ரவேலை இரட்சிக்க முடியவில்லை. தேவ வார்த்தைகளோடு சமரசம் செய்து கொள்ளும் உபதேசம் இன்றும் எந்த தேசத்தையும் இரட்சிக்க முடியாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவானின் வாழ்க்கையை வீண் என்று ஒருபோதும் கருதவில்லை. " ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களிலே யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை " என்று அவர் சொன்னார் (மத்தேயு. 11:11). தேவனுடைய பார்வையில் ஒருவன் பெரியவனாயிருப்பதின் உண்மையான அளவுகோல் ஒருவன் தேவனோடு எப்படி நெருக்கமாக வாழ்கிறான் என்பதைப் பொறுத்தும், தேவனுடைய சித்தத்தை ஒருவன் எவ்வளவு உண்மையாக நிறைவேற்றுகிறான் என்பதைப் பொறுத்தும் தான் அமைகிறது. யோவான் தன் தேசத்தை தங்கள் பாவங்களிலிருந்து திரும்பி, தேவனோடு காரியங்களை சரி செய்து கொள்ளும்படியாக அழைப்பு விடுத்தார். வரவிருக்கும் கோபாக்கினையைக் குறித்து அவர்களை யோவான் எச்சரித்தான். பாவிகளை கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக நீக்கக்கூடிய இயேசுவாகிய தேவ ஆட்டுக்குட்டியிடம் வரும்படியாக அவர்களை அழைத்தார்.

ஒரு தேசம் அழிவு, மரணம் மற்றும் நாசம் போன்றவைகளோடு கீழ்நோக்கிய பாதையில் சென்று கொண்டிருக்கும் போது, அத்தேசம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனோடு ஒப்புரவாகாத வரை அது விடுவிக்கப்படாது. நம் ஒரே நம்பிக்கை ஜீவனுள்ள தேவனிடம் திரும்பு வது தான். மனித நடத்தையில் எது தவறு எது சரியானது என்பதைப் பற்றிய மாறாத விதிகளுக்கெல்லாம் அவரே ஆதாரமாயிருக்கிறார். மேலும், நம் ஆசீர்வாதங்களுக்கெல்லாம் அவரே ஊற்றுக்கண்ணாயிருக்கிறார். நாம் அவரைத் தேட விரும்பினால் அவரைக் கண்டடைய முடியும். அவர் தம்மை தம்முடைய வார்த்தைகளிலும், தம்முடைய குமாரன் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேவன் இஸ்ரவேலை எப்படி அழைத்தாரோ அப்படியே நம்மையும் அழைக்கிறார். " வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும் " (ஏசாயா 1:18) ✥





# இரட்சிப்புப் பற்றிய தவறான கருத்துக்கள்

## Misconceptions About Salvation

***David Pharr***

**சு**விசேஷ இரட்சிப்பின் திட்டத்தை சரியாக புரிந்து கொள்வதை விட முக்கியமானது வேறொன்றுமில்லை. பக்தி ரீதியாகவும், வாழ்க்கையிலும் மெச்சத்தக்க செய்யப்படும் காரியங்களெல்லாம் குறைவான அல்லது இரண்டாம் பட்சமான முக்கியத்துவத்தைத்தான் பெறுகிறது, ஏனென்றால், ஒருவர் பாவத்திலிருந்தும், பாவத்தின் விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கப்படவில்லையென்றால், எல்லாம் வீணாகப் போய்விடும். மேலும், ஒரு சபை கிறிஸ்துவின் சபையாக இருக்க வேண்டுமென்றால் இது இரட்சிப்பின் திட்டத்தைப் போதிக்க வேண்டும்.

காரியங்கள் இப்படியிருந்தாலும் கூட சாத்தான் இரட்சிப்பின் திட்டம் சம்மந்தமாக எண்ணற்ற தவறுகள் தொடர்ந்து நடக்க பலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். பலர் இந்த விஷயத்தில் சத்தியத்தை போதிக்க தவறிவிட்டார்கள். மேலும், ஜனங்கள் பொதுவாக இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தத்தைத் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். கீழ்க்காணும் சில பொதுவான தவறான கருத்துக்களை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

### 1. இரட்சிப்பு கிருபையினால் மாத்திரம் என்கிற எண்ணம்

இக்கருத்து இரட்சிப்பில் மனிதனுக்கு எந்த பொறுப்பும் இல்லை. மனிதர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தாலும் யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்களோ அவர்களை தேவன் இரட்சிக்கிறார் என்று வலியுறுத்துகிறது. இக்கருத்தை முன்மொழிகிறவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்திருக்கிறார்கள். முதலில் உலகளாவிய கொள்கைக்காரர்கள் தேவன் எல்லோரையும் நேசிக்கிறார், ஆகவே, யாரும் இழந்து போவதற்கு வாய்ப்பில்லை என்று வாதாடுகிறார்கள். அடுத்ததாக, பழைய " கால்வின் " கொள்கைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கிருபை குறிப்பிட்ட, முன் குறிக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது என்று வாதாடுகிறார்கள்.

முதல் கருத்துத் தவறானது. ஏனென்றால், வேதாகமம் அநேகர் நித்தியத்தில் தேவனை இழந்து போவார்கள் என்று வெளிப்படையாகக் காட்டுகிறது. இரண்டாவது கருத்தும் தவறானது. ஏனென்றால், தேவ கிருபையானது எல்லோருக்கும் அளிக்கப்படுகிறதென்று வேதாகமம் தெளிவாகக் காட்டுகிறது (தீத்து. 2:11; 1 யோவான் 2:2) இங்கே உண்மை என்னவென்றால் யாரும் தேவனுடைய கிருபையில்லாமல் இரட்சிக்கப்பட முடியாது. அதே நேரத்தில் கிருபையினால் மாத்திரம் மனிதர்கள் இரட்சிக்கப்படுவதும் இல்லை.

## 2. இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரம் என்கிற உபதேசம்

இக்கருத்து வழக்கமாக "விசுவாசத்தினாலே மாத்திரம் " என்கிற உபதேசத்திற்கு ஆதரவாக பேசுபவர்கள் மத்தியில் நிலவுகிறது. அந்த உபதேசம் என்னவென்றால், ஒருவர் தன் இருதயத்தில் விசுவாசித்த உடனையே அவர் தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறார். அவர் கூடுதலாக தேவனுடைய கட்டளைகள் எதற்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை. இந்த உபதேசம் யாக். 2:24ல் நாம் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமானாக்கப்படுகிறதில்லை என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிற வேதாகமக் கருத்துக்கு முற்றிலும் எதிரானது.

## 3. ஒழுக்க நெறிதான் முக்கியமானது என்கிற மாயையான தோற்றம்

அநேக மக்கள், ஒருவர் கடுமையான பாவம் எதுவும் செய்யாமலிருந்து, ஓரளவு நியாயமான வாழ்க்கை வாழ்ந்து, சமூக சேவையில் ஈடுபட்டால் அவர் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுகிறார் என்று நினைக்கிறார்கள். அவர்கள் காரியங்களை நடைமுறையில் பார்க்கிறபடியால் இக்கருத்து நியாயமானது போல் தோன்றுகிறது. இருந்த போதிலும், அவர்களுடைய எண்ணம் பாவத்தின் உண்மைத் தன்மையையும், இரட்சகர் ஒருவரின் அவசியத்தையும் அறியாமலிருக்கிறது. ஜனங்கள் தங்கள் நற்கிரியைகளினால் இரட்சிக்கப்படமுடியுமென்றால் கிறிஸ்து மரித்தது வீணாய் இருக்குமே. (ஒருவர் ஒழுக்க ரீதியாக எவ்வளவு நல்லவராக இருந்தாலும்) கிறிஸ்து இல்லாமல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் இல்லாமல் ஒருவருக்கும் இரட்சிப்பு முற்றிலுமாக இல்லை. (ரோமர் 3:23; யோவான் 14:6; யோவான் 8:24; அப். 4:12; யோவான் 3:5) உலகிலேயே மோசமான குற்றவாளிக்கு எப்படி இரட்சகர் அவசியமோ அதேபோல் நிச்சயமாக ஒழுக்க ரீதியாக நல்ல மனிதனுக்கும் இரட்சகர் அவசியம்.

## 4. குறிப்பிட்ட சபையில் ஒருவர் தன்னை இணைத்துக்கொள்வதினால் அவர் இரட்சிக்கப்படுகிறார் என்கிற தவறான எண்ணம்

இந்த எண்ணம் பொதுவாக வெளிப்படுத்தப்படாமல் இருக்கலாம். ஆனால், சிலர் எப்படி வாழ்ந்தாலும் பரவாயில்லை. தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாவிட்டாலும் பரவாயில்லை ஒரு குறிப்பிட்ட சபையில் தங்களை இணைத்துக் கொண்டால் தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்களுடைய ஆத்தும நிலையைக் குறித்து கேளவிகேட்கப்பட்டால் " நான்



சபையில் அங்கத்தினராக இருக்கிறேன் " என்று சொல்லக்கூடும். இப்படிப்பட்ட கருத்து அவரை தனிப்பட்ட ரீதியில் இரட்சிக்காது. தேவன் தனி நபரைத் தான் இரட்சிக்கிறார் அமைப்புகளை அல்ல. இரட்சிக்கப்படுகிறவர்கள் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பது உண்மைதான் (அப். 2:47). ஆனால், ஒருவருடைய பெயர் சபைப்பதிவேட்டில் இருக்கிறது என்கிற காரணத்திற்காக அவர் பரலோகம் போய்விடலாம் என்று நினைப்பது மிகப் பெரிய தவறாயிருக்கிறது.

## 5. ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர் எப்போதுமே இரட்சிக்கப்பட்டவராயிருக்கிறார் என்கிற தவறான பாதுகாப்பு உணர்வு

சில தவறுகள் வேதாகமத்தில் ஆணித்தரமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (லூக். 8:13; 1 கொரி. 10:12; 2பேதுரு 2:20,22). இருந்தபோதிலும், சில பெரிய மனிதர்கள் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்போதுமே தாங்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று நினைக்கிறார்கள். ஒளியில் நடக்கிறவர்கள், தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் தொடர்ந்து கழுவப்படுவார்கள் (1யோவான் 1:7,10). ஆனால், மனப்பூர்வமாக கர்த்தரை விட்டு விலகிப் போவதைத் தெரிந்து கொள்ளுகிறவர்கள் கிருபையிலிருந்து விழுந்துபோவார்கள் (எபி. 10:26,27; கலா. 5:4).

## 6. ஞானஸ்நானம் மனமாற்றத்தோடு நேரடியாக சம்மந்தப்படவில்லை என்கிற தவறான உபதேசம்

ஞானஸ்நானம் சம்மந்தமாக கிட்டதட்ட எல்லா மார்க்கப்பிரிவினைக் கூட்டங்களுமே வேதாகம உபதேசத்தோடு முரண்படுகின்றன. பலர் ஞானஸ்நானம் பெறாமலேயே ஒருவர் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, கிறிஸ்தவனாக முடியும் என்று சொல்கிறார்கள். ஆயினும், புதிய ஏற்பாடு இதைப்பற்றி தெளிவாக விளக்குகிறது. நிக்கொதேமுவுக்கு இயேசுவின் வார்த்தைகள் தொடங்கி (யோவான் 3:5). பேதுருவின் நினைவூட்டல் வரை (1 பேதுரு 3:21) ஞானஸ்நானத்தையும், இரட்சிப் பையும் (அல்லது அதற்கு இணையான பதங்களை) குறிப்பிடும் ஒவ்வொரு வசனமும் ஞானஸ்நானம் முதலில் வருகிறது என்பதையே எப்போதும் காட்டுகிறது. (மாற்கு 16:16; அப். 2:38; 22:16; ரோமர் 6:34; கலா. 3:26,27).

## 7. துக்கப்படுகிறவர்களின் " பெஞ்சில் " வைத்து ஜெபிக்கும் வேதத்திற்கு புறம்பான பழக்கம்

பல மார்க்கப் பிரிவினை சபைகள் " பலிபீட அழைப்பு " என்று சொல்லி எழுப்புதல் கூட்டங்களில் சபைக் கட்டிடத்திற்கு வெளியே ஒரு பெஞ்சைப் போட்டு அதில் ஜனங்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக உணரும் வரை ஜெபிக்கும்படி செய்கிறார்கள். இது அவர்களுக்கு உணர்ச்சி வசப்படக்கூடிய அனுபவமாக இருக்கலாம். அல்லது கூட்டத்தின் தர அளவைப் பொறுத்து அவர்களுக்கு மிகச் சரியாக இருக்கலாம். எப்படிப்பார்த்தாலும் ஒட்டு மொத்தமாக இந்த நடைமுறை வேத வாக்கியங்களின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. அவர்களுடைய இந்த விநோதமான பழக்கத்தோடு நெருக்கமான தொடர்புடையது இரகசியமான அனுபவத்தின் மூலமாக ஒருவர் இரட்சிக்கப்படுவது அல்லது இயேசுவை இருதயத்தில்

வெறுமனே ஏற்றுக்கொள்வதினால் ஒருவர் இரட்சிக்கப்படுவதாகும். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினால் கட்டளையிடப்பட்டார்கள், பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டார்கள். அவர்கள் இதுபோன்ற உபதேசங்களை ஒருபோதும் அனுமதிக்கவுமில்லை, அங்கீகரிக்கவுமில்லை. தர்சு பட்டணத்து சவுல் மனந்திரும்பியபோது கூட அவர் உபவாசித்துக் கொண்டிருந்தும், ஜெபித்துக் கொண்டிருந்தபோதும் கூட அவர் இவ்விதமாக வலியுறுத்தப்பட்டார். " இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " (அப். 22:16).

இரட்சிப்பு எப்போதுமே கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு கிடைக்கக்கூடியது தான். மனுஷருடைய கிரியைகளினாலோ அல்லது மனுஷருடைய கண்டுபிடிப்புகளினாலோ உண்டாகக் கூடிய ஒன்றல்ல (எபே. 2:8,9). கிறிஸ்து மூலமாக இரட்சிக்கப்படுகிறவர்கள் அவருடைய நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும். கிறிஸ்தவராக விரும்பும் ஒருவர் ஐந்து காரியங்களை அவசியம் செய்தாக வேண்டும். (1) சுவிசேஷ சத்தியத்தை அவர் கேள்விப்பட வேண்டும் (யோவான் 8:32; ரோமர் 1:16) (2). அதை அவர் உண்மையாக விசுவாசிக்க வேண்டும். (எபி. 11: 5,6). (3) பாவங்களிலிருந்து அவர் மனந்திரும்ப வேண்டும் (அப். 17:30). (4) கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10). (5) பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 2:38).

❖

(நீதி. 17 : 22)



## கொஞ்ச சிரியுங்களே

**ஒரு கணவன் ஒரு வாசனை திரவியக் கடையில் ஒரு விலையுள்ள சென்ட் பாட்டிலை எடுத்து இதற்கு பில் போடு, " நான் என் மனைவிக்காக இதை வாங்குகிறேன் " என்றான். கடைக்காரர், " பரவாயில்லையே " என்று ஆச்சரியத்தோடு பார்த்தான். கணவன் ரொம்பக் கூலாக, " நான் கார் ஒன்றைப் புதிதாக வாங்கி வருவேன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் " என்றான்.**





# இயேசு கிறிஸ்து இருதன்மையும் கொண்டவர்

**K. Bhasker**

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து இருதன்மையும் உள்ளவர் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அவர் திடீரென்று தோன்றி, மறையும் அவதாரமல்ல. நம்மைப் போல மனிதப் பிறவியாக வந்தார். அதே சமயத்தில் தேவனுடைய குமாரனாகக் காணப்பட்டார். இதைக் குறித்து வேத வசனம் கூறுவதைக் கவனியுங்கள். அவர் மாம்சத்தின்படி தாவீதின் வம்சத்தில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின் தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவனுடைய குமாரனுமாயிருக்கிறார் (ரோம 1:5) என்று வசனம் கூறுகின்றது. இயேசு கிறிஸ்து மாம்சத்தில் தாவீது என்ற அரச வம்சத்திலே பிறந்தார். அதே சமயத்தில் ஆவியின்படி தேவனுடைய குமாரனாகவும் இருந்தார். இயேசு கிறிஸ்து இருதன்மையும் கொண்டுள்ளார் என்பதை நாம் படித்து அறிந்து கொள்வது முக்கியமாக இருக்கின்றது.

### I. இயேசு கிறிஸ்து மாம்சத்தின்படி தாவீதின் சந்ததி

இயேசு கிறிஸ்து மனித அவதாரம் என்று வேத வாக்கியம் சொல்லுவதில்லை. அவதாரம் என்பது ஒரு முழு மனிதனாகத் தோன்றி மறைவதைத்தான் அவதாரம் என்று கூறுகின்றனர். அவ்விதமாக இயேசு கிறிஸ்து திடீரென்று தோன்றி மறையவில்லை. அவர் ஓர் ஆரோக்கியமான ஆண் குழந்தையாகப் பிறந்தார். ஒரு குழந்தையினிடத்தில் காணப்படுகினற அதே இயல்பைக் கொண்டிருந்தார். குழந்தையானது எந்தவிதமான அற்புதம் அடையாளம் செய்யமாட்டாதது போல குழந்தையாகயிருந்த இயேசுவும் எதுவும் செய்யவில்லை. ஆகவே, குழந்தை இயேசுவின் அற்புதம் என்று தவறாகச் சொல்லும் போதனைக்கு நம்மை விலக்கிக் கொள்ளுவது முக்கியமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து பிறந்து எட்டாம் நாளில் மற்ற யூத ஆண் குழந்தைகளுக்கு விருத்த சேதனம் செய்வித்தது போல அவருக்கும் விருத்தசேதனம் செய்யப்பட்டது (லூக். 2:21). அவர் நம்மைப் போல வளர்ந்து முப்பது வயது ஆகும்போது அவர் யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (லூக். 3:21,23) அவர் ஊழியம் செய்யும் பொழுது சரீரத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்குப்பட்டிருந்தார். அவர் இளைப்படைந்தார், அவர் தாகமடைந்தார், அவர் நடை பயணங்களை மேற்கொண்டார் (யோவான் 4:3,8) மனிதன் மனம் திரும்பவில்லையே என கண்ணீர் விட்டார் (லூக். 19:41) கெத்சமென தோட்டத்தில் அவர் பெற்ற துயரமானது அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளியாய்த் தரையில் விழுந்தன (லூக். 22:44). பின்பு அவரை போர்ச் சேவர்கள் பிடித்து சிலுவையிலே அறைந்தார்கள். அவருடைய மாம்ச சரீரத்தை சிலுவையில் அறைந்தனர். அங்கே அவர் மரித்து புத்தம் புது கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். அவ்மூன்றாம் நாளில் சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் (லூக். 24:1,6). இவ்விதமாக இயேசு கிறிஸ்து மாம்சத்தில் தேவனுடைய குமாரனாக விளங்கினார்.

## 2. இயேசு கிறிஸ்து ஆவியின்படி தேவனுடைய குமாரன் எனப்பட்டார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தில் தாவீதின் சந்ததியில் பிறந்து தேவனுடைய குமரனாக விளங்கப்பட்டதுபோல ஆவியின்படியும் அவர் தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்பட்டார். எப்படியென்றால் அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்பொழுதும் தேவனோடே இருக்கும்படி அமைத்துக் கொண்டார். ஆகவே தான், வனாந்தரத்தில் தனித்துப் போய் ஜெபம் பண்ணினார் (லூக். 5:16) இயேசு கிறிஸ்து அடிக்கடி தனித்திருந்து தனிமையான இடங்களில் ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் கடல் மேல் நடந்து தமது சீஷர்களுடன் சேர்ந்து கொள்வதற்கு முந்திய மாலைப் பொழுதில் மலைப்பகுதியில் தனித்திருந்து ஜெபம் செய்தார் (மத். 14:23). கப்பர் நகூமில் அவர் அதிகாலையில் இருளில் தனித்திருந்து ஜெபம் செய்தார் (மாற்கு 1:35). அவர் தமது சீஷர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு மலைப்பகுதியில் இரவு முழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தார் (லூக். 6:12). சீஷர்கள் தம்மை யார் என்று சொல்லுவதற்கு முன்பு தனித்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார் (லூக். 9:18) ஜெபத்தைக் குறித்து ஒரு பாடத்தை சீஷர்களுக்கு சொல்லும் முன்பு அவர் தனித்திருந்து ஜெபம் பண்ணினார் (லூக். 11:1). இப்படி அவர் ஆவிக்குரிய வாழ்வில் தேவனோடு இருந்ததை வேத வாக்கியங்கள் கூறுகின்றன.

## 3. நம்முடைய மாம்சத்துக்குரிய மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை

நாம் இப்போது மாம்சத்தில் இருக்கின்றோம். ஆகவே, தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 பேதுரு 4:16). நாம் கொலைகாரனாக, திருடனாக, பொல்லாங்கு செய்கிறவனாக இருக்கக்கூடாது. இவைகளிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும். சரீரத்தில் இருக்கும்போதே மனந்திரும்பி தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காகவே நம்மை தேவன் படைத்திருக்கிறார். பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் என்று வேத வசனம் கூறுகின்றது. (1 கொரி. 8:6). ஆகவே நாம் மாம்சத்திற்குரிய வாழ்க்கையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஞானஸ்நானத்தின் மூலமாக அவரை ஏற்றுக்கொண்டு அவர் தரும் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள தேவன் வழிநடத்துவாராக (கலாத். 3:26,27). ❖

**கிறிஸ்தவத்தின் மதிப்பை மற்றவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ்ந்து காட்டுங்கள்!**





# புதிய ஏற்பாட்டு சபை என்றால் என்ன?
# What is the New Testament Church?

*Arthur Pigman*

**பு**திய ஏற்பாட்டு சபை என்பது மத். 16:18ல் இயேசு தாம் கட்டுவேன் என்று வாக்குத்தத்தம் செய்த சபையாயிருக்கிறது; " மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை ". அநேகர் சபை என்பது செங்கல், சிமெண்ட் கலவை, கம்பி, மரம் போன்றவைகளை உள்ளடக்கியது என்று தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அப். 20:28-ல் இயேசு தம்முடைய சுயரத்தத்தினாலே வாங்கினார் என்று வாசிக்கிறோம். இந்த இடத்திலோ அல்லது புதிய ஏற்பாட்டில் வேறு ஏதாவது இடத்திலோ சபை என்பது ஒரு கட்டிடத் தைக் குறிக்கும் விதத்தில் எங்குமே சொல்லப்படவில்லை.

புதிய ஏற்பாட்டில் "எக்லீசியா" என்கிற கிரேக்க வார்த்தை தமிழில் சபை என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது எந்த வகையான சபை என்பது அது எப்படி பயன்படுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்துதான் முடிவு செய்யப்படும். தேவனுடைய, கர்த்தருடைய, கிறிஸ்துவினுடைய போன்ற வாக்கியங்கள் சபையின் வகையைப் பற்றி அதிகமாகச் சொல்கின்றன. அப். 20: 28ல் கிறிஸ்து தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தனது சபை என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானது என்பது தெளிவாகிறது.

புதிய ஏற்பாடு சபையைப் பற்றி எல்லாவற்றையும் தெரிவிக்கிறது. அது இரட்சிப்பின் திட்டத்தையும், சபையின் ஆராதனையையும், சபையின் பணியையும் வெளிப்படுத்துகிறது. நாமெல்லாரும் வேதாகமம் எவைகளைப் போதிக்கிறதென்பதை கற்றுக்கொள்ள முயற்சித்து அதன்படி நடப்போம். " ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ". ❖





# பிரசங்கத்தின் நோக்கம்

## The Purpose of Preaching

*J.C. Choate*

**முன்னுரை :**

1. தேவனுடைய வார்த்தையைத் தெரிவிக்க பிரசங்கம் ஒரு வழியாக இருக்கிறது.
2. அது பிரசங்க மேடை வாயிலாகவோ, வானொலி மூலமாகவோ அல்லது தொலைக்காட்சி மூலமாகவோ இருக்கலாம்.
3. ஆனால் பிரசங்கத்தின் நோக்கம் என்ன ?

**விவாதம் :**

**I பிரசங்கம் நிச்சயமாகவே ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அல்ல.**

A தன்னைப் பற்றி பிரசங்கிப்பதற்காக அல்ல (II கொரி. 4:5)

B கல்வியைக் காட்டுவதற்காக அல்ல (I கொரி. 2:1-5)

C பொழுதுபோக்குக்காக அல்ல (I கொரி. 2:2)



1. சிரிப்புக் காட்டுவதற்காக அல்ல
2. பழைய கட்டுக்கதைகளைப் பேசுவதற்காக அல்ல

D புகழ்பெறுவதற்காக அல்ல (1 கொரி. 4:9-13)

E ஒரு தொழில் அல்ல (1 கொரி. 4:18)

F பழக்க வழக்கங்களை மேம்படுத்த அல்ல

G கள்ள உபதேசத்தை பிரசங்கிப்பதற்காக அல்ல (கலா. 1:7,9)

H கண்டனம் செய்வதற்காக மட்டுமல்ல

I ஏதாவது புதிதாக பிரசங்கிக்க வேண்டும் என்பதற்காக அல்ல (வெளி. 22:18,19)

J வித்தியாசமாக இருக்க வேண்டுமென்பதற்கல்ல.

**II பிரசங்கத்தின் நோக்கம்**

A இயேசு அதை கட்டளையாகக் கொடுத்திருக்கிறார் (மாற்கு 16:15)

B தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதற்காக (தீமோத். 4:2)

C சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக (அப். 8:4)

D தெரியாதவைகளைத் தெரிவிப்பதற்காக மற்றும் படிப்பிக்கும்படியாக (மத். 28:19; ரோ. 10:15,1)

E கிறிஸ்துவை உயர்த்துவதற்காக (1 கொரி. 1:23)

F தவறை கண்டிப்பதற்காக (2 தீமோ. 4:2)

G தேவ பக்தியற்றவர்களை திருத்துவதற்காக (1 கொரி. 5)

H மக்களின் மொழி நடையிலேயே எளிமையாகவும், நடைமுறைக்கேற்றவாறும் இருக்க வேண்டும் என்பதற்காக


I மனிதர்களை காரியங்களைச் செய்யத் தூண்டும்படியாக (2 கொரி. 5:11)

**முடிவுரை :**

1. நாம் குறிப்பிட்ட வேலை செய்யும்படியாக அனுப்பப்பட்டிருக்கிறோம்.
2. கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்ட பின், விளைவை கர்த்தரிடமே விட்டுவிடுவோம்.
3. செய்தி கொடுப்பவரை முக்கியத்துவபடுத்தாமல், செய்தியை முக்கியத்துவப் படுத்துவதால் பிரசங்கம் வல்லமையுள்ளதாக இருக்கும்.

**சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் [ரோமர் 10:15].**

## சத்திய வழி




- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560 084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- தமிழன் TV : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் :
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை




- பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா
- தமிழன் TV : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ்/English )
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை மற்றும் கைப்பிரதிகள்
- English Quaterly Magazine : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- J.C. School of Evangelism : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420



## திருமறை தியானம்



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

- தமிழ் மாத இதழ் : திருமறை ஆசான்
- காலாண்டு இதழ் : சத்தியத்தின் குரல்

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும்
பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| P.R. சுவாமி | :098440 70763 | B. அர்ஜுனன் | :94435 58041 |
| E.Z.S. ராஜநாயகம் | :98427 30382 | P.C. பிலேமோன் ராஜா | :92442 04420 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

- ❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க் விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ " சத்தியத்தின் குரல் " நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

**கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி**


**E.Z.S. ராஜநாயகம்**

" சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________________

மாநிலம் : ____________________



## " SATHIYATHIN KURAL "

(Quarterly Magazine)

### District Co- Ordinators

| | | |
|---|---|---|
| Chennai | Bro. Manuel | 98418 67257 |
| Chennai | Bro. Williams | 99622 10708 |
| Cuddalore | Bro. Thangaraj | 98657 79630 |
| Dindigul | Bro. Samson | 98421 15457 |
| Dharumapuri | Bro. Luke | 94436 18978 |
| Erode | Bro. Jaganathan | 93641 13164 |
| Kovai | Bro. Yesian | 98422 49427 |
| Karur | Bro. Thangaraj | 96006 73181 |
| Kanyakumari | Bro. Gunasekaran | 98655 07880 |
| Kanchipuram | Bro. Perinbaraj | 98940 79585 |
| Madurai | Bro. Rajaprasath | 90455 85509 |
| Nellai | Bro. Santhanaraj | 98425 50085 |
| Nagapattinam | Bro. Muthusamy | 99424 24386 |
| Ooty | Bro. Prabhudossmally | 98430 33817 |
| Pudukottai | Bro. Shanmugam | 95431 60197 |
| Pondy | Bro. Sengol Rayan | 92457 15947 |
| Ramnad | Bro. Arulsami | 88701 90814 |
| Salem | Bro. Abraham Lingan | 99760 57121 |
| Thiruvallur | Bro. A.D. Sukumar | 98948 65116 |
| Trichy | Bro. Daniel Durairajan | 99446 16926 |
| Tanjore | Bro. John Schwartz | 94436 48928 |
| Tiruppur | Bro. Sekar | 98426 65632 |
| Tiruvannamalai | Bro. N.K. Samuel | 95850 26319 |
| Tiruvarur | Bro. Senthil | 90478 77735 |
| Theni | Bro. Kaliappan | 99409 67859 |
| Vellore | Bro. Samma | 99403 57811 |
| Viruthunagar | Bro. Inbaraj | 99654 82824 |
| Villupuram | Bro. Yovaan | 99404 87200 |


*Edited & published By*

**S. Rajanayagam**

P.O. Box. No. 27, Kangayam - 638 701.

Cell : 91 98427 30382, e-mail:rajarichal@yahoo.co.in

# சத்தியத்தின் குரல்




## சத்தியத்தின் குரல் நூலை நீங்கள் எப்படிப் பயன்படுத்தலாம்??

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தை படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்கு கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்கு கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தபடாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**
**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

...கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பாருங்கள்

தமிழன் TV

| | | |
|---|---|---|
| திங்கள் | காலை | 7:00 |
| வியாழ | இரவு | 9:30 |
| சனி | காலை | 7:15 |

| | | |
|---|---|---|
| ஞாயிறு | காலை | 6:45 |
| திங்கள் | காலை | 6:00 |
| வெள்ளி | காலை | 6:00 |
| சனி | மாலை | 6:15 |

எங்கள் மாத இதழ்களை படியுங்கள்

'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வேர்டு ஆப் கிரைஸ்ட்'

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385